
TG66

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி




சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கத்தோலிக்க திருமறை

# தரம் 11

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

**சமயக் கல்வித்துறை**
**மொழிகள், மானிடவியல்,**
**சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

2008

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**கத்தோலிக்க சமயம்**

தரம் - 11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதலாம் பதிப்பு - 2008

மீள்பதிப்பு - 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

**ISBN - 978-955-654-072-7**

**© தேசிய கல்வி நிறுவகம்**

**சமயத் துறை**

**மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்**

**தேசிய கல்வி நிறுவகம்**

**அனுசரணை : ஆசிய அபிவருத்தி வங்கி - இடைநிலைக்கல்வி நவீனத்துவ செயற்றிட்டம்**

வெளியீடு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக

டிசைன் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடட்டில்

அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழிகாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகிறது. இன்றைய வகுப்பறைக்கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக்கற்றல் - கறிபித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையில் இருந்து அறிவைத்தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகிறது ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாயிரம் மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர்கள் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் அவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்படி வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக்கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், வகுப்பறையை வினைத்திறன்மிக்கதும். தரமானதாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயர்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக பாடநூல்களை வழங்கி வருகிறது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவு விருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரே ஆவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ்வெதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ்வறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு. எம். என். ஜே புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
'இசுருபாய'
பத்தரமுல்ல

12.11.2009

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது. எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2008 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படு கின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு, அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந் நடைமுறைகள் காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்படுகின்ற பாடத்திட்டங் களில் அவ்வவ் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிகமான விடயங்களைக் கற்று, அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விஷேட கவனமும் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிய பகுதியில், புதியதொரு கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலு மெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காணமுடியும். இதற்கு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்காகவும் முழுமையாகவும் மாணவர் களை அடையச் செய்வதே ஆசிரியர்களின் பணியாகும். இந்தவகையில் ஆசிரியரின் வகிபாகம் புத்தறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாகவும் மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கபட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும் இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக செயற்பட்டு பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். அதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், இடர்ப்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிகளுக்கு உதவி செய்ய மாணவரை வழிப் படுத்துங்கள். இவ்வாறு செயற்படும் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாகப் புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர் பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

**ஆலோசனை** : **பேராசிரியர் ஜே.டப்ளியூ.விக்ரமசிங்க**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**திரு.விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல். சமுக விஞ்ஞான பீடம்.

**மேற்பார்வை** : **கலாநிதி மாவுல்கொட சுமணரத்ன தேரர்**
பணிப்பாளர், சமய் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவனம்

**இணைப்பாளர்** : **கலாநிதி அருள்பணி ஜயலத் பலகல்ல**
ஓய்வு பெற்ற பிரதான செயற் திட்டஅதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்

**ஆக்கியோர்** : **கலைமானி அருள்பணி மேரியஸ் பர்னாந்து**
ஓய்வு பெற்ற அதிபர்.

**முதுமானி அருள்பணி லொயிட் சாந்திகுமார்**

**கலைமாணி செல்வி. அசுந்தா சாந்தினி பெரேரா**
உதவிக் கல்விப்பணிப்பாளர் (றோமன் கத்தோலிக்கம்)
வத்தளை

**முதுமானி செல்வி ஆன் நிஷாந்தினி ரணசிங்க**

ஆசிரியை, பரிசுத்த செபமாலை வித்தியாலயம்.
கொழும்பு - 2.

**முதுமானி திருமதி. றோஸ் முதலிகே**
விரிவுரையாளர், ஆசிரியர் கல்லூரி, மகரகம

**திருமதி. தி. ஜெ. போல் அன்ரனி**
ஓய்வு பெற்ற அதிபர்

**திருமதி. சரோஜினி செல்வரத்தினம்**
ஆசிரிய ஆலோசகர். கொழும்பு கல்வி வலயம்

**அட்டையும் படங்களும்: செல்வி. கயனி ஜயசிங்க**
**செல்வி. தீபிக்கா லக்மாலி**

**கிறிஸ்தவ ஆலோசனைக்குழு:**

**மேதகு ஆயர். வலன்ஸ் மெண்டிஸ்ஆண்டகை**
தலைவர் - திருவிவிலிய, மறைக்கல்வி, கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

**மேதகு ஆயர். கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை**

உபதலைவர் - திருவிவிலிய, மறைக்கல்வி, கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

**அருள்பணி - ஐவன் பெரேரா**
தேசிய பணிப்பாளர், கத்தோலிக்க பாடசாலைகள்.

**அருள்பணி - நிக்கிலஸ் லோவ்**
தேசிய பணிப்பாளர் - திருவிவிலிய, கல்வி, மறைக்கல்வி

**பேராசிரியர். ஷேலி விஜயசிங்க**
திணைக்களத் தலைவர்.கிறிஸ்தவ நாகரீகம். பல்கலைக் கழகம், களனி

**அருள்பணி - பிலேந்திரன்**
கிறிஸ்தவ, இஸ்லாம் நாகரீகம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

**திரு. பி.சி.ஐ. பெரேரா**
சமயப் பிரிவு, கல்வி அமைச்சு

# உள்ளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | iii |
| முன்னுரை | | iv |
| அறிமுகம் | | vi |
| ஆலோசனைக்குழுவும் ஆக்கியோர் குழுவும் | | viii |

**பகுதி I**

| | | |
|---|---|---|
| 11.1.0 | பாடத்திட்டம் | 1 |
| 11.1.1 | அறிமுகம் | 2 |
| 11.1.2 | பாடத்திட்டத்தின் நோக்கம் | 3 |
| 11.1.3 | வகுப்புக்குரிய தேர்ச்சி | 4 |
| 11.1.4 | பாடத்திட்டம் | 5 |
| 11.1.5 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 7 |
| 11.1.6 | கணிப்பீடும் மதிப்பீடும் | 8 |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| 11.2.0 | பாடத்திட்டத்தின் தொடரகம் | 9 |
| 11.2.1 | கற்றல் கற்பித்தல் முறை விளக்கம் | 10 |
| 11.2.2 | தர விருத்தி உள்ளீடுகள் | 13 |
| 11.2.3 | செயற்பாட்டுத் தொடரகம் | 14 |

**பகுதி III**

| | | |
|---|---|---|
| 11.3.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 108 |
| 11.3.1 | கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம் | 109 |
| 11.3.2 | கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 111 |
| 11.3.3 | மாதிரி வினாக்கள் | 117 |

# பகுதி - I

11.1.0 பாடத்திட்டம்

11.1.1 அறிமுகம்

11.1.2 பாடத்திட்டத்தின் நோக்கம்

11.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

11.1.4 பாடத்திட்டம்

11.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

11.1.6 கணிப்பீடும் மதிப்பீடும்.

## 11.1.1 அறிமுகம்

சமய நெறியைப் புறக்கணித்துவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எதுவிதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே சமயவிளக்கம் மிகவும் அத்தியாவசிய மான ஒன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரைகாலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கலைத்திட்டமானது அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படை யிலான கலைத்திட்ட தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கிணங்க கிறிஸ்தவ னொருவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கை யுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. அவ்வவ் தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதம் கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இதற்காகப் பொருத்தமான கற்பித்தல் நுட்பமுறை களை உறுதிப்படுத்துகின்ற வகுப்பறை செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் ஆறு தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புகளில் ஒரு அலகு அல்லது பல அலகுகளை அடிப்படையாகக்கொண்டு ஆறாம் தரத்தில் எளிமையான அறிமுகத்துக்கும் பதினொராம் தரத்தை அடையும் போது இவ்வலகுகளில் கற்பிக்கப்படு கின்றவை பற்றிய ஓரளவு படிமுறை வளர்ச்சியைக் கொண்டதான முறையில் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

தரம் பதினொன்றில் பொதுக்கல்வியை முடித்துக் கொள்வதோடு பெரும்பாலான மாணவர்களின் சமயக் கல்வியும் முடிவடைகின்றது. எனவே தரம் பதினொன்றில் பயிலும் மாணவர்களுக்கு சமயம் அறிவுசார்ந்த பாடமாக மட்டுப்படுத்தப்படவோ அல்லது பின்னர் பூரணப்படுத்தும் விதத்தில் அமைத்துக் கொள்ளவோ அல்லாமல் வாழ்க்கைக்கு உகந்த முழுமையான ஆளுமையை அவனுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய விடயங்களை நிறைவேற்றக் கூடிய விதத்தில் தரம் பதினொன்றுக்குரிய பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியராகிய நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில் வாழ்வில் ஒரு கட்டத்தை நிறைவு செய்து கொண்டு, மற்றொரு கட்டத்தில் காலடி வைக்கத் தயாராக இருக்கும் இம்மாணவச் செல்வங்களின் சமய வாழ்க்கையோடு இணைத்துக்கொள்ளக் கூடிய விதத்தில் உங்களது கற்பித்தல் பணியை முழுமையான அர்ப்பணிப்புடனும், பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற வேண்டும் என்பதேயாகும்.

## 11.1.2 பாடத்திட்டத்தின் நோக்கம்

1. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதன் தன்னைப் படைத்தவரை அறிந்து கொள்ளத் திட்டமிடல்.

2. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவனாக வாழ்வதற்குத் திட்டமிடல்.

3. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர திட்டமிடல்.

4. அடிப்படைக் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பும் இறைக்கட்டளை களினதும், மலைப்பொழிவினதும் அடிப்படையில் மறையைக் கற்பித்தலும் வாழ்தலும் ஓரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளச்செய்தல்.

5. செபத்தின் வல்லமையால் ஆற்றல் பெற்று சமூகத்தை ஒளிரச் செய்யும் ஒளியாகச் செயலாற்றுவதற்கு வழிகாட்டல்.

6. கிறிஸ்துவின் அளவில்லா அன்பினால் நிறைவடைந்து அவ்வன்பை சமூகத்திலே பரப்பும் படியாக திட்டமிடல்.

7. தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை யாகையால் அதனைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான ஆற்றலை விருத்தி செய்தல்.

8. ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்து மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவதோடு கிறிஸ்தவன் என்ற உறுதியான அடையாளத்தோடு, உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் பங்காளிகளாக்குதல்.

9. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழக்குவித்தல்.

10. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தனது நாட்டின் மீது பற்றையும், மரியாதையை யும் உருவாக்குதல்.

### 11.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. உலகத்தில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்.
2. இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.
3. இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.
4. செப வாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.

# 11.1.4 கத்தோலிக்க திருமறை

## பாடத்திட்டம்

## தரம் - 11

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் திருச்சபையிலும், சமூகத்திலும் பொறுப்புகளை நிறை வேற்றுவதன் வழியாக வாழ்வை முழுமையடையச் செய்வர்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 1.0 உலகத்தில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர். | 1.1 படைப்பில் இறைவனின் மகிமையை உணர்ந்து கொள்வர் | இறைவனைத் தேடிச் செல்லும் மனிதன் | 02 |
| | 1.2 நவீன கண்டுபிடிப்புகளின் வழியாக இறைவல்லமையும், மகிமையையும் மேலும் மேலும் வெளிப்படும் விதத்தை அறிந்து கொள்வர். | இறை மகிமையை மிகத் தெளிவாகக் காட்டும் நவீன கண்டுபிடிப்புகள் | 02 |
| | 1.3 மனித வாழ்வின் ஆரம்பம் பற்றி அறிவதன் வழியாக இறை விசுவாசத்தை உறுதிப்படுத்துவர். | பரிணாம வளர்ச்சி | 02 |
| | 1.4 இறை வெளிப்பாட்டை விளங்கிக் கொள்வதற்குத் திருவிவிலியத்தைக் கற்பர். | திருவிவிலியமும் இறை வெளிப்பாடும் | 02 |
| | 1.5 இறைமகன் மனிதனாக அவதரித்ததன் வாயிலாக கிடைக்கும் செய்தியைத் தமதாக்கிக் கொள்வர் | மனிதனாக அவதரித்த இறை மகன் | 02 |
| | 1.6 பாஸ்கா மறைபொருள் வழியாக கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப் படுத்துவர். | பாஸ்கா மறைபொருள் வழியாக கிறிஸ்தவ வாழ்வு | 02 |
| | 1.7 பணியின் வழியாக கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாவர் | பூரணத்துவத்தை உண்டாக்கிய கிறிஸ்து அரசர் | 02 |
| | 1.8 இலங்கையில் ஆன்மீகத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தை விருத்தி செய்வர். | இலங்கையர் சமூகத்தில் கிறிஸ்தவ விசுவாசம். | 02 |
| 2.0 இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருள் அடையாளங்களைப் பெற்றுக் கொள்வர். | 2.1 தூய ஆவியின் அருளால் நிறைவு பெற்று முதிர்ச்சி யடைந்த கிறிஸ்தவர்களாக வாழ்வர். | தூய ஆவியின் செயற்பாட்டினால் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவன். | 02 |
| | 2.2 கிறிஸ்துவினால் ஊட்டம் பெறும் பொருட்டு அடிக்கடி நற்கருணையைப் பெற்றுக் கொள்வர். | கிறிஸ்தவ வாழ்வை ஊட்டம் பெறச்செய்யும் நற்கருணை விருந்து. | 02 |
| | 2.3 மனித ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் அருளடையாளங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றுக் கொள்வர். | மனிதத் தொடர்பைப் பெற்றுத் தரும் அருள டையாளங்கள். | 02 |
| | 2.4 கிறிஸ்தவ குடும்பத்திலே ஒற்றுமையையும் புனிதத்துவத்தையும் உணர்ந்து கொள்வர். | நவீன உலகில் கிறிஸ்தவ திருமணம். | 02 |
| | 2.5 திருமணம் பற்றிய கிறிஸ்தவ மனப்பாங்குகளை விளங்கிக் கொள்வர். | கணவன் மனைவி உறவு. | 02 |

| | | | |
|---|---|---|---|
| | 2.6 இன்றைய உலகில் குருத்துவ வாழ்வின் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வர். | கிறிஸ்தவ அழைப்பில் குருத்துவம். | 02 |
| | 2.7 துறவற வாழ்வின் மூலம் முழு மையாகத் தம்மை அர்ப் பணிப்பர். | துறவற வாழ்வு | 02 |
| | 2.8 அர்ப்பணிப்புடன் கூடிய பொது நிலை வாழ்வின் மூலம் இறை பணியை நிறை வேற்றுவர். | அர்ப்பணிக்கப்பட்ட பொது நிலை வாழ்வு | 02 |
| | 2.9 தூதுப்பணிகளில் ஈடுபட்டு திருச் சபையின் ஆன்மீகப் பணிகளில் உதவ முன்வருவர். | திருச்சபையில் தூதுப்பணி | 02 |
| 3.0 இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர். | 3.1 இவ்வுலகில் உள்ளவற்றை முழுமை யாகப் பயன்படுத்தி இறைவனுக்குரிய ஆராதனையைச் செலுத்துவர். | படைத்தவருக்கு மட்டும் உரிய ஆராதனை | 02 |
| | 3.2 ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க கிறிஸ்தவன் என்ற முறையில் பங்களிப்பர். | ஒழுக்கம் நிறைந்த சமுதாயம் | 02 |
| | 3.3 தூய்மையான நடத்தையால் வாழ்வின் மதிப்பீடுகளை வளர்ப்பர். | தூய உள்ளத்தோர்.<br>பிறர் சொத்துக்களில் உள்ள பொறுப்பு | 02 |
| | 3.4 பிறர் சொத்துக்களையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாப்பர். | நீதி, நேர்மையின் அடிப்படையில் சமூகம் | 02 |
| | 3.5 நீதியுடனும் நேர்மையுடனும் செயற் படப் பழகுவர். | மலைப்பொழிவு | 02 |
| | 3.6 வாழ்வைப் புதுப்பிக்க மலைப் பொழிவை மாதிரியாக்கிக் கொள்வர். | | 02 |
| 4.0 செப வாழ்வில் ஊட் டம் பெற்று இறை வனுடனும், மனித னுடனும் ஆழமான உறவை வளர்ப்பர். | 4.1 எப்பொழுதும் செபிப்பதன் வழியாக செபத்தையும் வாழ்வையும் ஒன்றி ணைப்பர். | எப்பொழுதும் செபித்தல் | 02 |
| | 4.2 திருச்சபையின் உறுப்பினராக பொதுச் செபம், தனிச்செபம் மூலமாக ஆன்மீக வளர்ச்சி பெறுவர். | பொதுச்செபம் | 02 |
| | 4.3 எப்பொழுதும் செபித்து ஆன்மீக ஊட்டம் பெறுவர். | தனிச்செபம் | 02 |
| | 4.4 இறையரசை நெருங்கிச் செல்ல செபத்தைப் பயன்படுத்திக்கொள்வர். | இறையரசையடையச்செபம் | 02 |
| | 4.5 மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக தியானத்தில் ஈடுபடுவர். | வேகமாகச் செல்லும் உலகில் தியானம். | 02 |

### 11.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

1. பாடசாலைத் தவணைகளில் ஆகக் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மாணவர்களைத் திருப்பலியில் வகுப்பு ரீதியாகப் பங்குபற்றச் செய்தல்.

2. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக பங்குக்குருவானவரின் வழிகாட்டலை இயன்ற வகையில் பெற்றுக்கொள்ளல்.

3. திருவழிபாட்டு ஆண்டில் அந்தந்த காலங்களுக்கேற்ப பொது வழிபாடுகளிலும் பக்தி முயற்சிகளிலும் மாணவர்கள் பங்குபற்றும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக குருவானவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

4. ஒற்றுமை, பொதுத்தன்மை, பொறுமை போன்ற மறை சார்ந்த எண்ணக்கருக்களின் விருத்திக்காகப் பயிற்சிச் செயன்முறைகளைப் பாடசாலையில் ஒழுங்கு செய்தல்.

5. கிறிஸ்தவ மாணவர்களுக்கான சிறுவர் கழுங்கள், சபைகள் ஆகியவற்றை ஆரம்பித்து நிறைவான கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தலும் பழக்குதலும்.

6. பங்கிலுள்ள இரக்கப் பணிபுரியும் கழுங்களிலும், சபைகளிலும் இணைந்து கொள்ள பெற்றோருக்கு அறிவுரை வழங்கல்.

### 11.1.6 கணிப்பீடும் மதிப்பீடும்.

- எல்லாப்பாடங்களின் முடிவிலும் எழுத்துப்பயிற்சிகளும் ஒப்படைகளும் வழியாக
- தவணை இறுதியிலும், வருட இறுதியிலும் நடத்துகின்ற முறைசார் பரீட்சைகள் வழியாக
- குறுகிய காலத்திட்டங்கள் வழியாக
- வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்றவற்றினால் மறை அறிவை வாய்மொழி மூலம் மதிப்பிடல்
- மறைச் செயற்பாடுகளிலும், பொது நலப்பணிகளிலும் ஈடுபடுகின்றமையைமேற்பார்வை செய்வதன் வழியாக
- பங்கிலுள்ள இரக்கப்பணியாற்றும் சபைகளில் சேர்ந்து புரியும் பணிகள் வழியாக
- பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள மறை சார்ந்த சபைகள், கழகங்களில் சேர்ந்து ஆற்றும் பணிகள் வழியாக
- வகுப்பறையில் தலைமைத்துவத்தைப் பெற்று பொறுப்பேற்றலை மேற்பார்வை செய்தல் வழியாக

# பகுதி - II

11.2.0 பாடத்திட்டத்தின் தொடரகம்

11.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

11.2.2 தரவிருத்தி உள்ளீடுகள்

11.2.3 செயற்பாட்டுத் தொடரகம்

## 11.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

இக்கற்கைநெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாய் தலை அடிப்படையாகக்கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும் போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகம் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) என்பன எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத்திறன்கள் போன்றவை யெல்லாம் சீர்குலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்புவதிலோ அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதிலோ கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமும், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையான வற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் காட்சி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவாகவும், பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமை களையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற் காக, பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரயரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக் கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை

(Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறை களைக் கையாளுதல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case Study) போன்ற வற்றை முன்வைத்தல், உரையாடல், போலச் செய்தல், படம், செய்துகாட்டல் ( Demonstration) போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்ற வற்றை பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வகுப்பின் கவனத்தைக் கவர்தல்

தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்

செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின் போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம் மாணவர்க்கு அறிமுகம் செய்தல்.

மாணவருக்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கபட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுதல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக் களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத் துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலை மறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின் போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு, முன்வைப்புக்களை வைப்பதற்கு மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துதல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றமை, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Explanation) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

இரண்டாம் படிமுறையில் கண்டறிந்தவற்றை விரிவுப்படுத்தும் (Elaboration) வாய்ப்பு மூன்றாம் படிமுறையின் போது வழங்கப்படும். ஒவ்வொரு குழுவும் தத்தமது முன்வைப்பை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக ஆக்கபூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்குமாறு முதலில் அந்தந்தக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் பின்னர் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும். இறுதியில் முழுவதையும் மீட்டல் செய்யும் (Review) பொறுப்பு ஆசிரியரையே சாரும். மாணவரது கண்டறிகையில் அடக்கும் முக்கியமான சகல விடயங்களுக்கும் தெளிவுபடுத்தப்படும் வகையில் எண்ணக்கருக்களும் கொள்கைகள் கோட்பாடுகளும் மாணவரது மனதில் தெளிவாகப் பதியும் வகையிலும் மீட்டாய்வை முன்வைத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வகுப்பறையில் கற்றல் கற்பித்தற் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வகையில் வெற்றிகரமாக நிகழுகின்றன என்பதை இடையறாது தேடியறிதல் இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும். இதற்காக கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும். திட்டமிடப்பட்ட செயற்பாடு தொடர்பாக, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது இதற்காக போதிய அவகாசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டின் இரண்டாவது படிமுறையின்போது மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபட்டிருக்கையில் கணிப்பீட்டையும் (Assessment) செயற்பாட்டின் மூன்றாவது படிமுறையின் போது மாணவர் தாம் கண்டறிந்தவற்றை விளக்குகையில் மதிப்பீட்டையும் (Evaluation) நடத்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கணிப்பீடு, மதிப்பீடு ஆகியன பற்றிய விரிவான விளக்கம் இவ் ஆவணத்தில் பிறிதொரு இடத்தில் தரப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறையியல், நிலைமாற்ற வகிபாகத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை ஆசிரியருக்கு வழங்குகின்றது. இச்செயன்முறையின் போது குழுநிலைக் கண்டறிகை முதலிடம் பெறுகின்றது. கொடுக்கல் வாங்கல், உரையாடல், சிற்றுரை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. முதலாவது படிமுறையின்போது கொடுக்கல் வாங்கலுக்கும் உரையாடலுக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இறுதிப் படிமுறையின்போது மீட்டாய்வை நடத்துகையில் சிற்றுரை நடத்துதல், எண்ணக்கருக்களை வலியுறுத்திப் பதித்தல் ஆகியவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக முன்வைக்கப்படும் இக்கலைத்திட்டத்துடன் தொடர்புடைய கற்றல் - கற்பித்தல் முறையியலை அபிவிருத்தி செய்யும் போது ஆசிரியரின் நிலைமாற்ற வகிபாகம் தொடர்பாக மட்டுமன்றி, கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் ஆகியவற்றின் குணாம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

திருமறையைப் பற்றிய அறிவு, திருமறையின்படி வாழ்தல் அவசியமாயினும் அறிவினால் மட்டும் திருமறையை ஒன்றிணைத்துக் கொள்ள முடியாது. திருமறையை வாழ்க்கையின் அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். எனினும் இவ்வாறு செய்வதாயின் வகுப்பறையில் உபயோகிக்கப்படுகின்ற நுட்ப முறைகளைத் தவிர, வகுப்பறைக்கு வெளியே பரம்பிக்கிடக்கின்ற நுட்பமுறைகளையும் உபயோகிக்க வேண்டும். இதை எவ்வாறு செய்வது? உதாரணமாக நுட்பமுறைகளை உபயோகிக்கும் போது மாணவர்களது அறிவு வளர்ச் சிக்கும் வாழ்க்கை அனுபவத்துக்கும் உதவும் முகமாக வகுப்பறையில் கற்பிக்கப்படுகின்ற விடயங்களும் இந்நுட்பமுறைகளும் சமாந்தரமாகவும் இணைந்ததாகவும் அமைய வேண்டும்.

- செப வழிபாடொன்றை ஒழுங்கு செய்யும் போது அதில் செயற்பாட்டோடு பங்குபற்றல். வருடத்தில் வருகின்ற பல்வேறுபட்ட விசேட தினங்களில் நடைபெறுகின்ற வழிபாடுகளில் (உ-ம் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்பு ஞாயிறு, கிறிஸ்து பிறப்பு) பங்குபற்றல்.

- திருச்சபையின் இரக்கப்பணிகளில் பங்குபற்றல்
- சபைகள், கழகங்களில் சேர்ந்து செயலாற்றல்
- திருயாத்திரைத் தலங்களுக்குச் சென்று அங்கு இடம் பெறும் வழிபாடுகளில் பங்குபற்றல் செபத்திலும், தியானங்களிலும் பங்குபற்றல்
- இல்லத்தில் நடைபெறுகின்ற வழிபாடுகளில் பங்குபற்றல்
- வயோதிபர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், அனாதை இல்லங்கள் போன்றவற்றில் சுயவிருப்புடன் பணியாற்றுதல்.

இவ்வாறான நுட்ப முறைகளினால் வகுப்பறையில் கிடைக்கின்ற அறிவை அனுபவ மாக்கிக் கொள்ளவும், திருமறையோடு வாழ்க்கையையும் ஒன்றிணைத்துக் கட்டியெழுப்பவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மேற்கூறப்பட்ட உதாரணங்களான நுட்பமுறை களைத் தவிர வேறுவகையான நுட்ப முறைகளாலும் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு மாணவர் களை ஈடுபடுத்தக் கூடிய வசதிகளைப் புதிய பாடத்திட்டம் ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ள தென்பதை இங்கு குறிப்பிடலாம்.

## 11.2.2 தர விருத்தி உள்ளீடுகள்

- டிமை கடதாசிகள்
- எழுது கடதாசி
- அடிமட்டம்
- பிறிஸ்டல் (கடதாசி) போர்ட்
- ஒலிப்பதிவு நாடாக்கள்
- திருவிவிலியம்
- சஞ்சிகைகள்
- கிறிஸ்தவ பாடல் நூல்கள்
- பிளாற்றினம் பேனா
- பென்சில்கள்
- றெஜிபோம்
- ஒலி ஒளிப்பதிவுக் கருவி
- ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள்
- புதினப் பத்திரிகைகள்
- நாளிதழ்கள்

| | |
|---|---|
| **பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** | : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர் |
| **தேர்ச்சி மட்டம் 1.1** | : படைப்பில் இறைவனின் மகிமையை உணர்ந்து கொள்வர் |
| **செயற்பாடு 1:1** | : படைப்பில் இறைவனின் மகிமையை உணர்ந்து கொள்வோம் |
| **நேரம்** | : 80 நிமிடம் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : ❖ திருவிவிலியத்தில் தொ.நூ. 2:4-7 வசனங்கள் எழுதப்பட்ட சுவரொட்டி<br>❖ குழு ஆய்வுக்குரிய அறிவுறுத்தல் பிரதிகள் 5, டிமை தாள்கள், மாக்கர் பேனாக்கள்<br>❖ இணைப்பு 1.1.1இல் உள்ள தகவற் கோவை, பாடல். |

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.1.1**

- திருவிவிலியப்பகுதி எழுதப்பட்ட சுவரொட்டியை முன்வைக்குக.
- மாணவன் ஒருவனை முன்னால் அழைத்து அப்பகுதியை உரத்து வாசிக்கும்படி செய்க.
- திருவிவிலியப் பகுதியைச் சிந்தித்து அனைத்து மாணவரும் சுவரொட்டியை வாசிக்க உதவுக.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ பௌதீக உலகம், மனிதவாழ்வு ஊடாக இறை வனைக் கண்டமை, காண்கின்றமை.
◆ உலகில் விதை முளைத்தல், பூக்கள் மலர்தல், பலன்தருதல் மரங்கள் அழிந்து போதல்.
◆ அதேபோல் உயிரினங்களின் பிறப்பு, சிறுபருவம், இளமைப்பருவம், முதுமை, மரணம் இடம் பெறுதல்.
◆ மின்னல், இடிமுழக்கம், மழை, புயல் ஏற்படுதல் காடுகள், இயற்கை, அமைதி போன்றன ஒரு வியப்பான அனுபவம்.
◆ இருள் நீங்கிப் புதியதொரு நாள் உதயமாகிறது.
◆ மனிதனின் பிறப்பு, குழந்தைப்பருவம், இளமைப் பருவம், திருமணம், முதுமை, மரணம், நண்பர், பெற்றார், உறவினர், நலன்விரும்பிகள், மேலும் நோயினின்று சுகம் பெறுதல் போன்ற அனைத் திலும் இறைவனின் மகிமையை உணர்கிறோம்.
◆ இறைமகிமையை உணர்ந்து கொள் வதற்கு இறைவனது உதவியும் அருளும் அவசிய மாகும்.

**படி 1.1.2:**

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 1.1.1இல் உள்ள குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல், டிமைதாள், மாக்கர் பேனாக்களை குழுக்களுக்கிடையில் பகிர்க.

- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 1.1.3:**

- மீண்டும் மாணவர்களை ஒழுங்கு செய்து குழுச் செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத் துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ இறைவனைக் காண வேண்டும் எனும் தாகம் இயற்கையாகவே மனிதனுக்கு உள்ளதென்பதால் அவன் மன அமைதியும் மாண்பும் பெறுகிறான்.
◆ இறைவனை நாடிச் செல்வதற்கு விசுவாசமும் செபமும், அதற்கேற்ப வாழ்வும் அவசியமாகும்.
◆ இறைவனைத் தேடிச்செல்ல உண்மையான விருப்பம், தூய உள்ளம், அறிவு மற்றும் மற்ற வரது முன்மாதிரி அவசியமாகும்.
◆ உலகின் சலனம், ஒருமைப்பாடு, ஒழுங்கமைப்பு, மற்றும் அதன் அழகு என்பன இறைவனின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றன.
◆ மனிதனுக்கு வெளிப்படையாகக் காணக்கூடிய தொடக்கமும் முடிவும் உள்ளது. ஆனால் இறைவன் நித்தியமானவர்.
◆ படைப்பின் வாயிலாக இறை மகிமையை உணர்ந்து கொள்வதற்கு இறைவனின் உதவியும் அருளும் அவசியம் என்பதாகும்.
◆ இறைவனை நாடிச் செல்லும் மனிதன் தனது சொந்த அபிலாசைகளை முற்றாகத் தியாகம் செய்து இறைவன் பக்கம் திரும்ப வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- இறைவனை நாடிச் செல்வதற்குத் தாம் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைப் பெயரிடுவர்.
- மனிதனுக்கு தொடக்கமும் முடிவும் இருப்பினும் இறைவன் என்றென்றும் நித்தியமானவர் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- இவ்வுலகில் இறைவனது பிரசன்னம் எப்பொழுதும் உள்ளது என்பதை உதாரணங் காட்டி விளக்கும் சுவரொட்டிகளை நிர்மாணிப்பார்.
- இறைவனைத் தேடிச் செல்வதை நோக்கமாகக்கொண்டு தமது வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்வர்.

**இணைப்பு 1.1.1**

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- மாணவர்களை ஐந்து சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- பின்வரும் வினாக்களுக்கு விடை தேடியறியுங்கள்
    - இவ்வுலகில் நீங்கள் தேடிக் கொண்ட பொருட்செல்வம் மற்றும் மனிதர்கள் பற்றி திருப்தியடைகிறீர்களா? இல்லாவிடில் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்?
    - திருப்தியான உள்ளத்தை அடைய வேண்டுமெனில் இறைவனை நாடிச் செல்ல வேண்டுமென நீங்கள் எண்ணுகிறீர்களா? அதற்காக உங்கள் ஆன்ம வாழ்வை வளர்க்க தேவையான பண்புகள் எவை?
    - பௌதீக உலகை அடிப்படையாகக் கொண்டு இறைவன் இருக்கின்றார் என்பதற்கு நீர் முன்வைக்கும் தர்க்கரீதியான கருத்துக்கள் எவை?
    - இறைவனைத் தேடிச் செல்கையில் ஆபிரகமும், அன்னை திரேசாவும் தமது வாழ்வை மாற்றியமைத்துக் கொண்ட முறையினை உதாரணம் தந்து விளக்குக.
    - பாட நூலை ஆய்ந்தும் இவ்வினாக்களுக்கு விடைகளைத் தேடிக் காணமுடியும்.

## 1.1.1 படைப்பில் இறைவனின் மகிமையை உணர்ந்து கொள்வர்

இறைவனை விசுவாசத்தோடு நோக்கும் போது, படைப்பிலே உள்ள விசேடமான திட்டமும் அழகும் மட்டுமல்ல, இறைவனுக்கு மட்டுமேயுரிய மகிமையையும் காணக் கூடியதாக உள்ளது. மிருகங்களின் கூர்ப்பினால் பல்வேறு வர்க்கங்கள் உண்டாகின என்று விஞ்ஞான ரீதியாகக் கூறப்பட்டாலும், படைப்பிலே உள்ள சிறந்த திட்டம், இயற்கையான அழகு என்பவற்றை விஞ்ஞான ரீதியாக மட்டும் விளக்குவது இலகுவானதல்ல. இக்காலத்தில் மட்டுமல்ல இதற்கு ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பும் திருவிவிலிய ஆசிரியர் படைப்பிலே உள்ள மகிமையை திருப்பாடல் வழியாக சிந்தித்துக் கூறுவதாவது :படைப்பின் மூலம் இறை மகிமை வெளிப்படுத்தப் படுகின்றது.

> **ஆண்டவரே! எங்கள் தலைவரே! உமது பெயர்உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! உமது மாட்சி வானங்களுக்கு மேலாகவும் உயர்ந்தது (திபா. 8:1)**
>
> **வானங்கள் இறைவனின் மாட்சியை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர் தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக் கின்றது.(திபா. 19:1)**

படைப்பிலே உள்ள பிரபஞ்ச உற்பத்தித் திட்டத்தை எந்தவொரு விதத்திலும் மனிதனுடைய உழைப்பினாலோ அல்லது நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளினாலோ முழுமையாக விபரிக்க முடியாது. ஏனெனில் அது இயற்கையிலே அதன் தன்மையுடன் செயல்படும் உந்து சக்தியை விளக்கிக் காட்டுகின்றது. கிறிஸ்தவர்களாகிய எமக்கு அது இறைவனையே குறிக்கின்றது.

## ஆண்டவரே நீர் எவ்வளவு பெரியவர்

**சங்.103**

**தொகையறா**

ஆண்டவரே நீர் எவ்வளவு பெரியவர்
அழகான மகத்துவம் உள்ளவர்; மகிமை உள்ளவர்

**பல்லவி**

ஆண்டவரே உம் பெருமையும் மகிமையும் என்ன!
ஆ..............ஆ...........................ஆ.......................
(ஆண்டவரே, உம்)

**சரணம்**

போர்வைக்காகவே ஒளியைக் கொண்டுள்ளீர் (2)

கூடாரத்திற்கு வான விரிவையும்
இரதத்திற்கு நல் மேகங்களைக் கொண்டுள்ளீர
(ஆண்டவரே, உம்)

காற்றுகள் உமக்குக் கீழ்ப்படிகின்றன
நெருப்பும் உமது நல் ஊழியன் தானே
நீர் தாம் புவியின் முகத்தை உருவாக்கினீர்
ஆழ்கடலை அதன் இடத்தில் தான் வைத்தீரே
(ஆண்டவரே, உம்)

மலைகள் அங்கே பள்ளத்தாக்குகள் இங்கே
நீர் ஊற்றுகள் வழிந்தோட - வயல் வெளியில்
மிருகங்கள் அங்கே, பருக வருகின்றன.
(ஆண்டவரே, உம்)

இறைவனைப் புகழ்வோம் பாடல் எண் - 135

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

**தேர்ச்சி மட்டம் 1.2** : நவீன கண்டுபிடிப்புக்கள் வாயிலாக இறைவனின் வல்லமையும் மகிமையும் மேலும் மேலும் வெளிப்படும் விதத்தை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு 1:2** : நவீன கண்டுபிடிப்புக்கள் வாயிலாக இறைவனின் வல்லமையும் மகிமையும் வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ வானொலி, ஒலிநாடாக்கருவி, குழுச்செயற் பாட்டு அறிவுறுத்தல்கள் 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.2.1:**

- மாணவர்களை அமைதியான வெளியிடத்திற்கு அழைத்துச் செல்லவும்.
- வானொலி ஒலிநாடாவை மிகச்சத்தமாக இயக்கி விடவும்.
- அதனை மாணவர் செவிமடுக்கச் செய்யவும்
- செவிமடுத்த போது ஏற்பட்ட அனுபவத்தை வெளிக்கொணரச் செய்யவும்
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

> ◆ தொழில் நுட்பம், பொருத்தமற்ற முறையில் உபயோகிக்கப்பட்டுள்ளது.
> ◆ குறைந்த அளவிலான பெறுபேறு கிடைத்தது.
> ◆ தொழில் நுட்பம் எசமான் அல்ல, இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட கொடையாகும்.
> ◆ இறைவனால் அனைத்தும் படைக்கப்பட்டது.

**படி 1.2.2:**

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 1.2.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல், டிமை தாள், மாக்கர் பேனாக்களை குழுக்களுக் கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 1.2.3:**

- ஒவ்வொரு குழுக்களும் தயார் செய்த சுவரொட்டி களை முன்வைக்கச் செய்யவும்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ அறிவு மிக வேகமாக வளர்ச்சியடைகிறது.
◆ அறிவு வேகத்திற்கேற்ப நாமும் எப் பொழுதும் எம்மை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
◆ நவீன அறிவை தேடிச் செல்வதற்கு நவீன தொழில் நுட்ப முறைகளை உபயோகப்படுத்தல் வேண்டும்.
◆ எளிமையான கருவிகள் முதல் விண்வெளியைக் கடந்து செல்லும் இயந்திரங்கள் வரை நவீன தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைந்துள்ளது.
◆ நவீன வாழ்விற்கேற்றதும் தேவையானதுமான உற்பத்திகளைமட்டுமே நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.
◆ மனிதன் வாழ்கின்ற இவ்வுலகில் அவன் ஒரு படைப்பாளி அல்ல, உற்பத்தியாளன் மட்டுமே என்பதாகும்.
◆ மனிதன் படைப்பாளியாக செயற்படும்போது உலகம் அழிவடைகிறது.
◆ நவீன தொழில்நுட்பத்தை மற்றவர்களுக்கு இடையூறு அற்றவகையில் பயன்படுத்த வேண்டும்.
◆ ஆன்மீக வாழ்வின் வழியாக அனைத்தையும் வெற்றி கொள்ள முடியும்.
◆ இறைவனுடன் ஒன்றித்தே உலகைக் கட்டி யெழுப்ப முடியும் என்பதாகும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நவீன உலகில் மனிதனை நலனுக்கும் அழிவுக்கும் இட்டுச் செல்லும் காரணிகளைப் பட்டியற்படுத்துவர்.
- இறைவனே படைப்பாளி என்பதையும் மனிதன் உற்பத்தியாளன் மட்டுமே என்பதையும் ஏற்றுக்கொள்வர்.
- தமது வாழ்விற்கு ஏற்றதும் தமக்குப் பொருத்தமானதும் தேவையானதுமான உற்பத்தி களை மட்டும் பயன்படுத்தும் திறனைப் பெறுவர்.
- எப்போதும் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் உற்பத்திகளைப் பயன் படுத்துவர்.

**இணைப்பு 1.2.1**

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- மாணவர்களை ஐந்து சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- நன்மைக்கும் அழிவுக்குமான காரணங்களை அலசிப்பார்த்து சுவரொட்டு ஒவ்வொன்று தயாரிக்கவும்
- சுவரொட்டியின் நவீன அறிவைத் தேடிச்செல்லும் மனிதனுக்கு ஏற்படும் நன்மையும் தீமையும் வலியுறுத்தப்படல் வேண்டும்.
- குழுக்களுக்கான தலைப்புக்கள்
  1. சுகாதார துறை
  2. போக்குவரத்துத்துறை
  3. தொடர்பாடல்
  4. நிர்மாணதுறை
  5. உணவு

உ+ம்: சுகாதார துறை

| | நன்மை | தீமை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : மனித வாழ்வின் ஆரம்பம் பற்றி அறிவதன் வழியாக இறைவிசுவாசத்தை உறுதிப்படுத்துவர்

**செயற்பாடு 1.3** : மனித வாழ்வின் ஆரம்பம் பற்றி அறிவதன் வழியாக இறை விசுவாசத்தை உறுதிப்படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ திருவிவிலியத்தில் தொ.நூ. 1:26 - 27, 2:7 வசனங்கள், குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள் 5 பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ இணைப்பு 1.3.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.3.1:**

- ❖ முன் ஆயத்தம் செய்த மாணவர் சிலரிடம் உலகம்/மனிதனின் ஆரம்பம் பற்றிய கருத்துக் களை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.
  - Big Bang கொள்கை
  - படைப்பின் கதை
  - பிரம்மன். படைத்த விதம்
  - சாள்ஸ் டார்வினின் பரிணாமக் கொள்கை
  - சுமேரியன் கதைகள்
  - லப்லாசின் கருதுகோள்
  - ஜேம்ஸ் ஜீனின் கருதுகோள்
  - பின்வரும் விடயங்களை வெளிக் கொணர்ந்து கலந்துரையாடவும்.

- ◆ உலகின் ஆரம்பம் தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொண்ட கொள்கை இல்லை என் பதாகும்.
- ◆ படைப்பின் செயற்பாட்டைக் கண்கூடாகக் கண்ட விஞ்ஞானிகள் எவரும் இல்லை என்பதாகும்.
- ◆ பரிணாம வாதம் தொடர்பாக நவீன கருத்துக்கள். நவீன கொள்கைகள் மேலும் முன் வைக்கப்படுகின்றமை என்பதாகும்.
- ◆ பரிணாமவாதமும் சில விஞ்ஞானிகளின் கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகியுள்ளது.

**படி 1.3.2:**

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.3.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 1.2.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற் பாடுகளை முன்வைக்கும் படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ மனிதனின் ஆரம்பம், வாழ்க்கை முறைபற்றி பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள் ளமை என்பதாகும்.
◆ விஞ்ஞான ரீதியான சிந்தனை மனிதனை நவீன போக்கில் ஈடுபடச் செய்துள்ளது.
◆ விஞ்ஞானமும் கத்தோலிக்க விசுவாசமும் முரணானவை அல்ல என்பதாகும்.
◆ நவீன விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புகள் கிறிஸ்தவ விசுவாசத்தை மேலும் வலுப்படுத்து கிறது.
◆ இப்பிரபஞ்சத்தின் உட்பொருளுக்கு விளக்கம் கூற விஞ்ஞானத்தால் இயலாது உள்ளது.
◆ மனிதனது படைப்புப்பற்றி தொடக்க நூலின் ஆசிரியர் முன்வைத்துள்ளவை விசுவாசத்தின் உண்மைகள் ஆகும்.
◆ இயற்கையில் ஏற்படும் / ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் விசுவாசத்திற்கு தடையாக இல்லை என்பதாகும்.
◆ படைப்பின் தொடக்கம் அதன் இறுதி இலக்கு என்பன பற்றி இறைவன் வெளிப்படுத்தியுள்ளார். விஞ்ஞானத்தில் பதில் இல்லை.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- மனிதனின் ஆரம்பம், வாழ்க்கை முறைபற்றி முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு கொள்கைகளைப் பெயரிடுவர்.
- இப்பிரபஞ்சத்தின் தொடக்கமும் அதன் நிலைப்பாடும் இறைவனால் உண்டாக்கப் பட்டன / உண்டாக்கப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வர்.
- நவீன உலகின் மாற்றங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இடையூறு அல்ல - என்பதற் கான காரணங்களைப் பட்டியற்படுத்துவர்.
- உன்னத படைப்பாகிய நீங்கள் படைப்பின் புதுத்தன்மையை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளைச் செய்வீர்கள்.

**இணைப்பு 1.3.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- மாணவர்களை ஐந்து சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- பின்வரும் தலைப்புக்களை 4 குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கவும்.
  1. நான்கு கால் விலங்குகளும் ஊர்வனவும்.
  2. தாவர உலகம் (மரம், செடி, கொடி)
  3. பறவைகள்
  4. மனிதன்
- பின்வரும் விடயங்களின் கீழ் அவற்றைப்பற்றி ஆராய்க.
  1. இனம்
  2. வளர்ச்சி
  3. விருத்தி
  4. இன்றைய நிலை
- குழு 5 'மனிதன் இறைவனின் படைப்பு' என்பதைத் தெளிவு படுத்த பொருத்தமான திருவிவிலியப்பகுதியை தேடிக் கண்டு பிடித்து விளக்குக.

| | **நான்கு கால் விலங்கு** | **ஊர்வன** |
|---|---|---|
| 1. இனம்<br>2. வளர்ச்சி<br>3. விருத்தி<br>4. இன்றைய நிலை | | |

## 1.3.1 மனித வாழ்வின் ஆரம்பம் பற்றி அறிவதன் வழியாக இறை விசுவாசத்தை உறுதிப்படுத்துவர்

### 1. பரிணாம வாதம்

(i) உயிர்களின் பரிணாம வளர்ச்சி பற்றி முதலாவது கொள்கையாக பிரான்சு நாட்டைச் சேர்ந்த லாமாக் என்பவரால் 1809 இல் முன்வைக்கப்பட்டது.' தியரி ஒப் இன்ஹெரிடன்ஸ்' என்ற கொள்கையை முன்வைத்தார்.(Theory of Inherit-ance of Acquired characters)' தியரி ஒப் யூஸ்ட் அன் டிஸ்யூஸ்ட்' (Theory of use and disuse)என அறிமுகமானது. லாமாக் கூறியதற்கமைய மிருகங் களின் சுய உருவத்திற்கேற்ப சூழலில் தாக்கமேற்படுகின்றது. ஏதாவது ஒரு உறுப்பை எப்பொழுதும் உபயோகித்தால் அது வளர்ச்சியடைந்து பெரிதாவ தோடு அதனை உபயோகிக்காமல் இருக்குமிடத்து அது படிப்படியாக பலவீன மடைந்து விடுகின்றது. மிருகங்களால் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உபயோகித்தல் அல்லது உபயோகிக்காமலிருப்பதால் ஏற்படும் இலட்சணங்கள் மிருகங்களுக்கும் உரித்துடையதாகின்றது. இப்படியாக காலாகாலமாக மாற்றமடைந்து வரும் இலட்சணங்களினால் முன்பு வாழ்ந்த மிருகங்களைவிட முழுமையான மாற்ற முடைய சுய உருவமுள்ள மிருகங்களை உண்டாக்க முடியும்.

## (ii) சாள்ஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாடு

சாள்ஸ் டார்வின் முன்வைத்துள்ள பரிணாமவாதக் கொள்கை 'தியரி ஒப் நட்சுரல் செலெக்சன்' (Theory of Natural Selection) என இனங்காணப்படுகின்றது. இவரது கொள்கைக்கேற்ப வாழ்விலே பரிணாமம் ஏற்படுவது சூழலுக்கேற்ப வாழ்வதால் சூழலினையே தேர்ந்தெடுக்கப்படுவதாகும். 1859இல் டார்வினுடைய இந்த வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. டார்வின் முன்வைத்துள்ள கொள்கைக்கேற்ப மிருகங்கள் தமது வாழ்நாளில் இனவிருத்தியினால் அதிகளவு உற்பத்தியாக்குகின்றன. இவ்வாறான அனைத்துப் பிறப்புகளும் சாகாமல் வாழ்ந்தாலும் இந்தப்பிறப்புகளின் உற்பத்திகளின் மூலம் முறையாக எண்ண முடியாத அளவுக்கு அதிகளவிலான விலங்குகள் உண்டாகின்றன. எனினும் உலகில் இந்தளவு கணக்கிடமுடியாத விலங்கு ஒவ்வொரு வர்க்கத்திலும் வாழ முடியாது. அதற்கான காரணம் போட்டி, பயமற்ற சூழலின் நிலை என்பவற்றின் மூலம் விலங்குகளின் உறுப்புக்களை பரிபாலிப்பதேயாகும். மிருகங்களில் பல்வேறு இனங்கள் உள்ளன. ஒரே வர்க்கத்தில் ஒரு விலங்கு பலமுடையதாகும் போது இன்னுமொரு விலங்கு பலமற்றுப்போகிறது. இவ்வாறாக விலங்குகளுக்கிடையில் ஏற்படுகின்ற ''வாழ்க்கைப்போராட்டத்தில்'' அதாவது வாழ்வதற்காகப் போராடும் போது மிகவும் பலமுள்ள உயிர்களும் சூழலுக்கு எதராக வரும் உயிர்களும் எஞ்சியிறுக்கும் ஏனைய உயிர்களும் அழிந்து போய்விடும். டார்வின் கூறும் விதத்தில் வாழ்க்கைப் போராட்டத்துக்கு சூழலிலுள்ள வளங்கள் குறைவாக இருப்பதே ஒரு காரணமாகும்.

### பாரிய வெடிப்பு வாதம் (The Big Bang Theory)

பாரிய வெடிப்புக் கோட்பாடு என்பது பிரபஞ்சத்தின் தோற்றத்தைப் பற்றிய பிரபல்யமான விஞ்ஞானக்கோட்பாடாகும். பாரிய வெடிப்புக்கோட்பாட்டிற்கிணங்க, பிரபஞ்சமானது இற்றைக்கு 10 பில்லியன் தொடக்கம் 20 பில்லியன் வருடங்களுக்குமுன் உலகத்துக்குரிய வெடிப்பின் சிதறல்கள் எல்லாத் திசைகளிலும் வீசி எறியப்பட்டதனாலே உண்டானது எனக் கூறப்படுகின்றது.

1927ஆம் ஆண்டு பெல்ஜியன் குருவானவரான ஜோர்ஜஸ் லெமாயிட்டர் இன் கருத்துப்படி பிரபஞ்சம் பரமானுக்குரிய முதல் வெடிப்பினால் உண்டானது என முதன் முதலாகக் கூறியுள்ளார். அவருடைய கருத்தானது அண்டவெளியில் தூரத்தில் தூசுப்படலத்தின் சிவப்பு நிற இடமாற்றத்தை அவதானித்த விண்வெளி விஞ்ஞானிகள் பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு மாதிரியாக அதனைக் கொண்டமை அடிப்படை உண்மையானது. பல ஆண்டுகளுக்குப் பின் எட்வின் ஹப்பல் லெமாயிட்டயின் கோட்பாட்டை உறுதிப்படுத்த பரிசோதனை மூலம் சான்றுகளைக் கண்டுபிடித்தார். அவரது கண்டுபிடிப்பானது தொலைவிலுள்ள ஞாயிற்றுத்தொகுதி ஒவ்வொரு திசைகளிலும் எம்மிலிருந்து வேகமாக தொலைவில் தமது அமைப்புக்குச் செல்கின்றன.

பாரிய வெடிப்புக் கோட்பாடு ஆரம்பத்தில் குறிப்பாகக் கூறுவதாவது, தொலைவிலுள்ள ஞாயிற்றுத்தொகுதியானது எம்மை விட்டு ஏன் அதி வேகமாகப்பயணம் செய்கின்றன என்பதை விளக்குகின்றது. இக்கோட்பாடு மேலும் கூறுவதாவது சீர்பெற அமைந்த பிரபஞ்சம் தொடர்ந்திருப்பது வெப்பக் கதிர்கள் பரவச் செய்வதன் பின்னணியிலாகும்.

1964இல் ஆர்னோ பென்சியஸ், றொபர்ட் வில்சன் ஆகியோரினால் வெப்பக்கதிர் பரவுதல் கண்டுபிடிக்கப்பட்டபோது பாரிய வெடிப்புக்கோட்பாடு மேலும் உறுதி செய்யப்பட்டது. இக்கண்டுபிடிப்பினால் பென்சியஸ் 'நோபல் பரிசும்' பெற்றார். பாரிய வெடிப்புக்கொள்கைக்கு நல்வரவேற்பு இருந்த போதிலும் பெரும்பாலும் அதனை நிரூபிக்க முடியாமல் போயிற்று.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : இறை வெளிப்பாட்டை விளங்கிக்கொள்ள திருவிவிலி யத்தைக் கற்பர்.

**செயற்பாடு 1:4** : திருவிவிலியத்தினூடாக இறைவெளிப்பாட்டை விளங்கிக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ பின்வரும் திருவிவிலியப் பகுதி எழுதப்பட்ட அட்டைகள்4
  1. வி.ப 3:13-15, 19:5-6
  2. 1 அர 19:11-14
  3. லூக் 3:21-22, 9:28-36
  4. எபி 1:1-2
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள் 5 பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ இணைப்பு 1.4.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு படி 1.4.1**

- பழைய ஏற்பாட்டில் இறைவன் தம்மை வெளிப் படுத்திய சந்தர்ப்பங்கள் இரண்டு மற்றும் புதிய ஏற்பாட்டில் அவ்வாறான சந்தர்ப்பங்களை நினைவுக்கு கொண்டுவர மாணவர்களை ஈடுபடுத்துக.
- அவற்றைக் கரும்பலகையில் எழுதுவதற்கு சிலருக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர் முன்வைத்த விடயங்களுடன் திருவிவிலியத்தையும் பயன்படுத்தி பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து கலந்துரை யாடவும்.

- ◆ பழைய உடன்படிக்கையில் இறைத் தந்தை மட்டுமே வெளிப்படுத்தினார். (எரியும் முட்செடியில்)
- ◆ புதிய உடன்படிக்கையில் மூவொரு இறைவன் வெளிப்படுத்தப்பட்டமை. (யோர்தான் நதியில்)
- ◆ தற்காலத்தில் சமூக நிகழ்வுகளினூடாக இறைவன் வெளிப்படுத்தப்படுகின்றார்.
- ◆ எமது அன்றாடவாழ்வில் இடம்பெறும் சம்பவங் களின் ஊடாகவும் இறைவன் தம்மை வெளிப் படுத்துகிறார்.

படி 1.4.2 :
- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.4.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 1.4.3 :
- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ இயற்கையினூடாக மனிதன் இறைவனை அறிய முடியுமெனினும் கிறிஸ்துவின் வழியாகவே இறைவெளிப்பாட்டை அறிந்து கொள்ள முடியும்.
◆ கிறிஸ்து வழியாக இறைவனைக் கண்டடைதல், இறை சுபாவத்தை பகிர்ந்து கொள்ளல், இறைவனின் பிள்ளைகளாதல், இறை உறவைக் கட்டியெழுப்புதல் என்பவை இறைவெளிப்பாட்டின் நோக்கங்கள் ஆகும்.
◆ இறைவனின் வெளிப்பாடு கிரமமாகவே இடம் பெறும்.
◆ கிறிஸ்துவுக்குள் இறைவெளிப்பாடு முழுமை யடைந்துள்ளது.
◆ இறை வெளிபாட்டை விளங்கிக் கொள்வதற்கு திருச்சபை வழிகாட்டலின் கீழ் திருவிவிலியத் தைக் கற்கவேண்டும்.
◆ எமது வாழ்க்கைச் சம்பவங்களின் ஊடாகவும். இறைவன் தம்மை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதாகும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பழைய ஏற்பாட்டினதும் புதிய ஏற்பாட்டினதும் வழியாக இறைவனும் மூவொரு இறைவனும் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைப் பெயரிடுவர்.
- கிறிஸ்துவின் வழியாக இறைவனைச் சந்திப்பது இறைவெளிப்பாட்டின் நோக்கம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- இறைவெளிப்பாடு கிரமமான முறையில் இடம்பெறும் என்பதை திருவிவிலியத்தில் இருந்து எடுத்துக்காட்டுவர்.
- இறைவனுக்கும் எமக்குமிடையே ஆழமான உறவை ஏற்படுத்தி எனது வாழ்வின் ஊடாக கிறிஸ்துவை இவ்வுலகிற்கு வெளிப்படுத்த வேண்டுமென தீர்மானம் எடுப்பர்.

**இணைப்பு 1.4.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- திருவிவிலியப் பகுதி எழுதப்பட்ட 4 அட்டைகளைப் பகிர்ந்தளிக்குக.
- அப்பகுதியை நன்கு வாசித்து சிந்தனையில் ஈடுபடுத்துக.
- உமக்குக் கிடைக்கப்பெற்ற பகுதியில் இறைவன் தம்மை வெளிப்படுத்தும் விதத்தைப் பற்றிய விடயங்களை தேடிக் கோவைப்படுத்தவும்.

## 1.4 இறைவெளிப்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு திருவிவிலியத்தைக் கற்பர்

### இறை வெளிப்பாடு 1.4.1

இறைவெளிப்பாடு பற்றி கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் (68-100) உள்ள பகுதிகளில் சிலவற்றை உங்கள் கவனத்திற்காகத் தருகிறோம்.

68. அன்பினால் இறைவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். மனிதன் தன் வாழ்வின் அர்த்தத்தினையும் நோக்கத்தினையும் பற்றி எழுகின்ற வினாக் களுக்கு நிரந்தரமான பதில் இதில் உள்ளது.

69. இறைவன் தனது செயல்களினாலும் வார்த்தைகளினாலும் தனது மறை பொருளை முறையாக வெளிப்படுத்தியுள்ளார்.

70. இறைவனைப் பற்றிய சான்றுகளை நாம் படைப்பிலே காணக் கூடியதாகவுள்ளது. இதைத் தவிர அவர் நேரடியாகவே ஆதிப்பெற்றோருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

71. நோவாவுடனும் சகல உயிரினங்களுடனும் இறைவன் நித்திய உடன்படிக்கை செய்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

72. இறைவன் ஆபிரகமைத் தெரிவு செய்து அவரையும் அவரோடு இருந்தவர் களுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார்; இறை மக்களை உருவாக்கிக் கொண்டார்; மோயீசன் வழியாகத் தனது சட்டங்களை வெளிப்படுத்தினார்; எல்லா மனித இனத்தவரும் மீட்பை; ஏற்றுக்கொள்ள இறைவாக்கினர் வழியாக அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

73. இறைத்தந்தை தனது திரு மகனை அனுப்புவதன் வழியாக இறைவெளிப்பாட்டை முழுமையடையச் செய்தார்; அவரோடு நித்திய உடன்படிக்கையை நிறுவிக் கொண்டார்; இறைவன் தம் மகன் வழியாக இறுதியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்தினார். எனவே அதன் பின்னர் எந்தவொரு வெளிப்பாடும் நிகழ வில்லை.

96. கிறிஸ்து தனது அப்போஸ்தலர்களுக்கு இறை வெளிப்பாட்டை வெளிப் படுத்தியுள்ளார். அவர்களும் தூய ஆவியைப் பெற்ற பின்னர் கிறிஸ்து மீண்டும் வரும் வரை தமது போதனைகளிளாலும் எழுத்தாக்கங்கள் வழியாகவும் இவ்வெளிப்பாட்டை எல்லா இனத்தவருக்கும் வழங்கினார்.

97. திருச்சபையின் பாரம்பரியங்கள், திருவிவிலியம் என்பவையே விசுவாசக் கருவூலத்தை உள்ளடக்குகின்றன.

98. திருச்சபை தனது விசுவாசத்தையும், தனது முழு வாழ்வையும், வழிபாடுகள் யாவற்றிலும் பரம்பரையாக எடுத்துச் செல்கின்றது.

99. இறை வெளிப்பாட்டை இறைமக்களும் அன்போடு ஏற்றுக்கொள்கின்றனர். அதனை மனதிலிருத்தி வாழ்கின்றனர்.

100. இறைவார்த்தையை விளக்குவதற்கான அதிகாரம் திருச்சபையின் திரு ஆசிரியத் துக்கு, அதாவது திருத்தந்தைக்கும் அவருடன் இணைந்துள்ள ஆயர்களுக்கும் மட்டுமே உரியதாகும்.

**இணைப்பு 1.4.2**

## இறைவனின் பெயர்

விடுதலைப் பயணம் 3 : 14 இல் "கடவுள் மோசேயை நோக்கி, இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என இறைவன் தனது பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இருக்கின்றவர் நானே எனும் சொல் இறைவனின் பெயரைத் தமிழ்மொழியின் மொழிபெயர்ப்பாகும். எபிரேய மொழியில் இது இவ்வாறு அமையும்?

இறைவனின் பெயரை 'யெகோவா' எனச் சிலர் பிழையாக உச்சரிக்கின்றனர். ஆதிகால எபிரேய மொழிக்கு எழுத்து வடிவம் இருக்கவில்லை. எனவே விடுதலைப்பயண ஆசிரியர் இறைவனின் பெயரை 'யாவே' என எழுதியுள்ளார். விடுதலைப் பயண நூலை வாசிக்கும் பொழுது இறைவனின் பெயரை உச்சரிப்பதற்கு அக்காலத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தது. குழுக்கள் மட்டும் பாவ மன்னிப்புப் பெறும் தினங்களில் இறைவனின் புனித இடத்திலே வந்து யாருக்கும் கேட்க முடியாதபடி இறைவனின் பெயரை ஒருமுறை உச்சரிப்பார். மற்ற அனைவரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறைவனுடைய பெயருக்குப் பதிலாக 'அதோனாயி' என்று சொல்லி உச்சரித்தனர். அதன் கருத்து 'இறைவன்' என்பதாகும்.

கி.பி. 6ஆம் ஆண்டில் 'மசரடிக்கர்' எபிரேய வேதாகமத்துக்கு எழுத்துவடிவம் கொடுத்தனர். அத்தோடு 'அதோனாயி' என்ற சொல்லின் எழுத்து வடிவம் யாவே என்பதோடு இணைக்கப்பட்டது. அதற்கேற்ப அ,தோ,ஆ என்பதும் சேர்க்கப்பட்டது. இவ்வாறு ஜெ+அ, ஹோ+தோ, வா+ஆ என்றது 'ஜெஹோவா' எனப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்டமை இன்னும் 'யாவே' என்றும் இறைவனின் பெயரைக் கூறாமல் 'அதோனாயி' என்று உச்சரிப் பதற்காகும்.

இதற்கிணங்க நாம் காணக்கூடியதாவது இறைவனின் பெயரை 'ஜெஹோவா' என அழைப்பது பிழையானதென்பதாகும்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

**தேர்ச்சி மட்டம் 1.5** : இறைமகன் மனிதனாக அவதரித்ததன் வாயிலாக கிடைக்கும் செய்தியை தமதாக்கிக் கொள்வர்.

**செயற்பாடு 1:5** : இறைமகன் மனிதனாக அவதரித்ததன் வாயிலாகக் கிடைக்கும் செய்தியைத் தற்காலப் படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ பின்வரும் திருவிவிலியப் பகுதி எழுதப்பட்ட பிறிஸ்டல் போட்கள்
- ❖ தொ.நூ 3:15, எசாயா 9:6-7, மீகா 5:1-5, யோவான் 1:1, லூக் 1:28-33, பிலிப்பி 2:6-11.
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள் 5 பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ இணைப்பு 1.5.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு படி 1.5.1**

- பின்வரும் திருவிவிலிய வசனங்களை பிறிஸ்டல் போட்டில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துக.

  தொ.நூ 3:15, எசாயா 9:6-7, மீகா 5:1-5, யோவான் 1:1, மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம் தேசிய கல்வி நிறுவகம்லூக் 1:28-33, பிலிப்பி 2:6-11.
- அவற்றை வாசித்து சிந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் முகமாக வினாக்களைக் கேட்கவும்
  1. மெசியாவை அனுப்பும் நோக்கத்தை இறைவன் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் வழியாக உறுதிப்படுத்தியது எவ்வாறு?
  2. மாமிசமானது என்பதன் பொருள் யாது?
- திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் 'மனிதவதாரம்' பற்றிய செய்தியை வெளிக் கொணர்ந்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந் துரையாடுக.

> ◆ தொ.நூ 3:15, இன்படி கிறிஸ்துவின் மனிதவாரம் தொடர்பாக இறைவன் அடையாளம் ஒன்றைத் தந்துள்ளார் என்பதாகும்.
>
> ◆ எசாயா 9:6-7, மீகா 5:1-5, இன்படி இறைவாக்கினர் அச்செய்தியை உலகிற்கு எடுத்துரைத் துள்ளார் என்பதாகும்.

◆ புதிய ஏற்பாட்டில் யோவான் 1:1, லூக் 1:28-33, இன்படி மனிதவதாரம் என்றால் என்ன என்பது விளக்கப்பட்டுள்ளது என்பதாகும்.
◆ பிலிப்பி 2:6-11. இன்படி கிறிஸ்து மனிதனுக்குச் சமனாக மனுவுரு எடுத்து இவ்வுலகில் அவதரித்தார் என்பதாகும்.
◆ மனுவுருவான வார்த்தையானவர் மக்களுக்கு இறைவனுடைய வார்த்தைகளைப் பேசினார் / பேசிக்கொண்டிருக்கிறார் என்பதாகும்.

**படி 1.5.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.5.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனாஎன்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 1.5.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ இழந்து போன இறை உறவை மீண்டும் கட்டி யெழுப்பவே கிறிஸ்து மனுவுருவானார்
◆ மாமிசமான வார்த்தையானவர் மனிதனாகவே மக்களுக்கு இறைவனுக்குரியதான வார்த்தை களைப் பேசினார்.
◆ தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் தூய ஆவியைப் பொழிந்தமையால் கிறிஸ்து 1. இறைவனை 2. அவருடைய திட்டத்தை 3. அவருடைய சுயரூபத்தை வெளிப்படுத்தினார்.
◆ மனுவுரு எடுத்ததன் மூலமாக இறையன்பு இறை பராமரிப்பு முழுமையடைந்துள்ளது.
◆ இறையரசை நோக்கிய எமது பயணத்தில் நாம் பெறுகின்ற இறைபராமரிப்புக்கு பொருத்தமான துலங்கல்களைக்காட்ட வேண்டும் என்று கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
◆ கிறிஸ்து மனுவுரு எடுத்தமையால் மனிதன் உயர்ந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டான்.

- கிறிஸ்து மனிதனாகப் பிறந்தமை இறை வனுடைய அன்பு, இரக்கத்திற்கு எம்மைப் பங்காளிகளாக ஆக்குவதற்கு ஆகும்.
- கிறிஸ்து மனிதனாகப் பிறந்து எம்மைப் பாவத் தினின்று மீட்கும் பொறுப்பை ஏற்றுக் கொண் டமை, அதனால் பாவம், பாவச்சோதனை ஆகியவற்றுக்கு அடிமையாகாது எம்மால் வாழ இயலும்.
- கிறிஸ்துவின் மனிதவதாரம் போன்று நானும் இருப்பதால் அவருடைய விழிகளால் நான் உலகை நோக்க வேண்டும்.
- அவரது கரங்களால் நான் குணமானதுபோல எனது கரங்களால் மற்றவர் குணம் பெற வேண்டும்.
- எனக்காக அவரது விலா திறக்கப்பட்டது போல் எனது இருதயமும் அதனை உணர்ந்து துக்கப் பட வேண்டும்.
- அவருடைய தாகத்தை தணிக்கும் குளிர்நீராக எனது வாழ்வை வழங்க தயாராக இருக்க வேண்டும்.
- அருட் சாதனங்கள் வாயிலாக கிறிஸ்து மனுவுரு வான செயற்பாட்டை எப்பொழுதும் அனுபவிக் கலாம்

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கிறிஸ்து ஏன் மனுவுரு எடுத்தார் என தமது சொந்த நடையில் எழுதுவர்.
- கிறிஸ்து மனுவுரு எடுத்தமையால் அவரது விலா எமக்காக திறக்கப்பட்டது போல, எமது இருதயமும் சமூக உணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திருவருட்சாதனங்களுள் கிறிஸ்து மனுவுருவான செயற்பாட்டை, எவ்வாறு அனுபவிக் கலாம் என்பதற்கான காரணங்களை எடுத்துக் கூறுவர்.
- எமக்காக கிறிஸ்து மனுவுருவானது போல கைவிடப்பட்டவர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பர்.

### இணைப்பு 1.5.1

#### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் வினாக்களுக்கான விடைகளைக் கண்டுபிடிக்கவும்.

1. கிறிஸ்து மனுவுருவானது ஏன்?
2. கிறிஸ்து மனுவுரு எடுத்தமையால் இறைவனின் திட்டத்தையும் சுயரூபத்தையும்எவ்வாறு வெளிப்படுத்தினார்?
3. பழைய ஏற்பாட்டில் இறைவன் வாக்களித்தமைக்கேற்ப மனுவுரு எடுத்ததன் வழியாக முழுமையடைவது எது?
4. கிறிஸ்து மனுவுரு எடுத்து எம்மைப்பாவத்திலிருந்து மீட்கும் பொறுப்பை தாமே ஏற்றுக் கொண்டார் என்ற தலைப்பில் உமது கருத்துக்களை எடுத்துக்காட்டுக.
5. கிறிஸ்து மனுவுரு எடுத்தார் என்பது பற்றி நீர் எவ்வாறு சான்று பகர்வீர் என்பதற்கு இரு உதாரணங்கள் தருக.

## 1.5 இறை மகன் மனிதனாக அவதரித்ததன் வாயிலாக கிடைக்கும் செய்தியைத் தமதாக்கிக் கொள்வர்

மனிதனாக அவதரித்தல் என்பது மனிதனாதல் ஆகும். மனித உடல் எடுத்து இவ்வுலகில் பிறப்பதாகும். திருவிவிலியத்துக்கேற்ப மனிதனாக அவதரித்தல் என்பது இறைவன் மனிதனாக இவ்வுலகில் பிறந்து மனிதர்கள் நடுவில் வாழ்தலாகும். மனிதனாக வந்த இறைவனை நாம் கிறிஸ்து என இனங்காண்கிறோம். பாவத்தில் பிறந்த மனிதனை மீட்பதற்காக மீட்பரொருவரை அனுப்புவதாக இறைவன் தொடக்க காலத்திலேயே வாக்குக் கொடுத்துள்ளார். (தொ.நூ. 3.15) இவ்வாக்கை மீண்டும் மீண்டும் இறைவாக்கினர் மூலம் புதுப்பித்துக்கொண்டதையும், மனிதனாக அவதரித்த கிறிஸ்துவைப் பற்றியும் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதனாக அவதரித்தமையால் மனிதன் உயர்ந்த நிலைக்குட்பட்டான் எனினும் மனிதன் பலவீனமடைந்து பாவத்தில் வீழ்ந்திருந்தபோது இறைவன் மனிதனாக அவதரித்தது இந்தப் பலவீனத்திலேயாகும். கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் வழியாக மனிதன் பாவத்திலிருந்து விடுதலை பெற இடமளித்து கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வுக்குள் பங்குபற்றும் சந்தர்ப்பமும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் சமூகத்துக்குள் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதை சமூகத்துள் 'மனிதனாக அவதரித்தல்' என அறிமுகப்படுத்துவோம்.

### தொடக்கநூல்

இறைவன் உலகைப் படைத்த விதம் திருவிவிலியத்தில் 1,2 ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது அதிகாரத்திற்கேற்ப இறைவன் ஆறு நாட்களில் உலகைப் படைத்து முடித்துள்ளார். ஆறாவது நாளில் இறைவனுக்குச் சமனாகவும் அவரது சாயலாகவும் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்துள்ளார்.

படைப்பின் இரண்டாவது கதையில் படைத்த நாட்கள் குறித்து ஒன்றும் இடம் பெறவில்லை. இறைவன் நிலத்திலிருந்து நீர் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருக்கும் போது நிலத்திலுள்ள தூசியினால் உடலை அமைத்து அவ்வுடலுக்கு உயிர் மூச்சை ஊதி மனிதனைப்படைத்துள்ளார். ஆணின் விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பிருப்பதை இது காட்டுகின்றது.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

**தேர்ச்சி மட்டம் 1.6** : பாஸ்கா மறைபொருள் வழியாக கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்துவர்

**செயற்பாடு 1:6** : பாஸ்கா மறைபொருள் வழியாக கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ சமூகச் சீர்கேடுகள் உள்ளடக்கப்பட்ட பத்திரி கைத் தலைப்புக்கள் ஒட்டப்பட்ட பெரிய சுவரொட்டி ஒன்று
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ இணைப்பு 1.6.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.6.1**

- அச்சுவரொட்டியை முன்வைத்த பின்னர் அதிலுள்ள தலைப்புக்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடவும்.
- மாணவர்கள் முன்வைக்கும் கருத்துக்களை வெண்பலகையில் கோவைப்படுத்தவும்
- இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து வெளிக்கொணர்ந்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

> ◆ இன்று எமது சமூகத்தில் எமது நாட்டில் பல்வேறு சமூக சீர்கேடுகள் நிலவுகின்றன.
> ◆ இச்சீர்கேடுகள் நமது உள்ளத்துள் செல்வதால் அவனால் ஆழமாகப் பயணம் செய்வதற்கும் அதனைப் பதித்துக் கொள்வதற்கும் வழிகாட்டு கிறது என்பதாகும்.
> ◆ இச்சீர்கேடுகளுக்கு எதிராகச் செயலாற்றுவதற்கு கிறிஸ்துவின் ஒளியைப் பெறுகின்றோம்.
> ◆ இந்த ஒளியில் ஒளிர்ந்து செயற்படுவதால் இறுதி யாக வெற்றியும் பெறலாம்

**படி 1.6.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.6.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 1.6.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ பாஸ்கா மறைபொருள் என்பது கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்பதாகும்.
◆ திருமுழுக்கினால் நாம் பாஸ்கா மறை பொருளில் தொடர்பு கொள்வதோடு பாவத்துக் காக மரிப்பது. இது மரணமாகும்.
◆ வாழ்வின் முடிவில் நாம் இவ்வுலக மரணத்துக் குட்படுகிறோமெனினும் அது மரணமல்ல இறைவனோடு நித்தியமாக வாழ்வதற்கான ஒரு வழியாகும்.
◆ எமது வாழ்விலே நாம் முகங்கொடுக்க நேரிடு கின்ற துன்ப துயரங்களை பொறுமையுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
◆ இவ்வுலக மரணத்தால் ஆன்மாவும் சரீரமும் வேறாகிடினும், சரீரம் அழிந்து போனாலும் இறுதியில் சரீரம் மீண்டும் ஒன்று சேர்கிறது.
◆ இவ்வுலக வாழ்வின் முடிவு மரணமாகும். எமது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான காலம் வரையறைக்குட்பட்டாலும் நாம் வெற்றிகொள்ள வேண்டிய இறுதியான பகைவன் மரணம் ஆகும்.
◆ கிறிஸ்து தனது பிதாவுக்கு கீழ்ப்படிந்ததன் வழியாக தனது சுதந்திரமான விருப்பத்தோடு மரணத்தீர்வு பெற்றாலும், மரணம் ஒரு சாப மல்ல அது ஆசீர்வாதமாகும்.
◆ இறுதித்தீர்வின் போது நாம் உயிர்ப்போம். எனினும் திருமுழுக்கினால் பாஸ்கா மறைபொரு ளோடு தொடர்பு கொள்கிறோம் என்பதால் நாம் இப்பொழுதும் உயிர்த்துள்ளோம் எனவும் அதனால் எமது உடலை நாம் அன்பு செய்ய வேண்டும்
◆ கிறிஸ்து மரித்தோரிடமிருந்து உயிர்த்து நித்திய மாக எழுந்தருளியுள்ளது போல நாமும் உயிர்த்து நித்தியமாய் இருப்போம்.
◆ உயிர்த்தெழுதலினால் கிறிஸ்துவின் சுயரூபத் தோடு தொடர்புபடுகிறோம்.
◆ திவ்விய நற்கருணை எனும் உணவைத் தினமும் பெற்றுக்கொள்ளும் நாம் அருள்வாழ் வினால் முழுமையடைந்து உயிருள்ள உடலைப் பெறுவோம்.

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சமூகத்திலுள்ள பல்வேறு சீர்கேடுகளை எழுதிக் காட்டுவர்
- அன்றாட வாழ்வில் முகங்கொடுக்க நேரிடுகின்ற சமூகசீர்கேடுகளையும் துன்ப துயரங்களையும், மகிழ்ச்சியாகத் தாங்கிக் கொள்வதால் கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்தில் பங்காளி ஆகிறார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- வீடு, பாடசாலை, சமூகம் என்பவற்றால் எழுகின்ற சவால்களுக்கு முகங்கொடுக்கும் விதம் பற்றிய காரணங்களைக் கோவைப்படுத்துவர்.
- துன்பப்படும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து உதவி செய்வதற்கு முன்வருவர்.

### இணைப்பு 1.6.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- இணைப்பிலுள்ள சம்பவங்களை கற்றலோடு குழு ஆய்வில் ஈடுபடுத்தவும்.
- இச்சம்பவங்கள் வழியாக வெளிக்கொணரப்படும் விடயங்களை கீழ்வரும் தலைப்புக் களின் கீழ் கோவைப்படுத்தவும்.

  1. துன்புறுதல்
  2. மரணம்
  3. சமூக சீர்கேடுகளை ஒழிப்பதற்கு எமது பங்களிப்பு
  4. கிறிஸ்துவினால் எமது சமூகத்துக்கு கிடைக்கின்ற செய்தி

## 1.5 பாஸ்கா மறை பொருள் வழியாக கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப் படுத்துவர்

### ஆன்மாவும் உடலும்

ஆன்மா என்றால் என்ன என்பதனை ஒரு சொல்லில் வரைவிலக்கணப்படுத்த முடியாது. ஆன்மா என்பது ஒரு பௌதீகப் பொருளல்ல. எனினும் பௌதீக உடலுடன் தொடர்புடையது. ஆன்மா என்பது என்ன என்பதை இயன்ற அளவில் தெளிவாக இங்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

ஆன்மா, உடல் என்பதன் வரைவிலக்கணம் கிரேக்க கண்ணோட்டத்தில் Form in matter எனும் இரு சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு சொற்களினதும் அர்த்தத்தினை விளங்கிக் கொள்வதற்கு மேலைநாட்டுக் கண்ணோட்டத்தில் உள்ள உருவமும், உடலும் எனும் இரு சொற்களைப் பெரும் பாலும் உபயோகப்படுத்தலாம். அதற்கேற்ப Form எனும் உருவம் Matter எனும் உடல் என எடுத்துக் காட்ட முடியும்.

மேலை நாட்டுக் கண்ணோட்டத்திற்கேற்ப முழு பிரபஞ்சமும் படைக்கப்பட்டது ஆபோ, தெஹோ, வாயோ, படவி என்ற மூலகங்கள் நான்கிலாகும். இந்நான்கினதும் மூலகங்கள் உயிருள்ளன. ஆபோ, தெஹோ, வாயோ, படவி ஆகியன கூடி பல்வேறு திரவங்கள் உண்டாகின்றன. அதற்கு உடல் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வாறு

ஏற்பட்டவை 'மனிதன்' 'விலங்கு' அல்லது பொருளே என நம்மால் இனங் காணப் பட்டது அந்த அந்த உடலின் விசேடமான உருவம் என்பதாலாகும். இக்காரணங் களை அடிப்படையாகக் கொண்டு கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலிலிருந்து 362-367 வரையுள்ள பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களில் கவனத்தைச் செலுத்துவோம்.

362. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் பௌதீக, ஆன்மீக உடலைக் கொண்டுள்ளான். திருவிவிலியத்தில் இதனை உவமை உருவகமாக கூறப்பட்டுள்ளது. மனிதன் இறைவனின் விருப்பத்திற்கேற்ப படைக்கப்பட்டுள்ளனர்.

363. திருவிவிலியத்தில் ஆன்மா எனும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் மனித 'வாழ்வு' 'முழு மனிதன்' (மத். 16:25-26) இல் விளக்கப்பட்டுள்ளது. மனிதனின் உள்ளார்ந்த உருவத்தை பகுப்பாய்வதற்கு சில சந்தர்ப்பங்களில் 'ஆன்மா' எனும் சொல் குறிப்பிடப்பட்டுள்ள (மத். 10:28, யோவான். 12:27) விளக்கம் மிகவும் பெறுமதிமிக்க பகுதியாகும். அதனால் மனிதன், இறைவனது சுய உருவத்தோடு மிக நெருங்கின்றான். 'ஆன்மா' மனிதனின் ஆன்மீகத்தன்மை என்ன என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

364. மனித சரீரம் (உடல்) இறைவனின் சுய உருவத்தோடு மாண்புடைய பகுதியாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மனித 'உடல்' மனிதனின் சரீரம் ஆக்கப்படுவது (மனித உரு) ஆன்மாவினாலாகும். இந்த ஆன்மாவும் உடல் இரண்டும் இறைவனின் ஆலயமாகும்.

365. ஆன்மா, உடல் என்பவற்றின் தொடர்பைப் பிரித்துக் காட்ட முடியாது. மனித சரீரத்தில் உள்ள 'உடல்' (திரவம்) உயிருள்ள சரீரமாக ஆக்கப்படுவது இந்த ஆன்மாவினாலாகும். மனிதனிடமுள்ள உருவமும் உடலும் இரண்டல்ல ஒன்றேயாகும்.

366. ஆன்மாவும் இறைவனது படைப்பாகும். அது பெற்றோரினால் கொடுக்கப்பட்டதன்று. அது அழியாதது. உடல் அழிவுறுவதனால் ஆன்மா அழிவுக்குட்படுத்தப்பட மாட்டாது. இறுதி உயிர்ப்பின்போது அது மீண்டும் உடலோடு ஒன்றிக்கின்றது.

367. ஆன்மா என்பது உயிர் அல்ல. புனித பவுல் 1தெசலோனியர் 5:23 இல் இது பற்றி விளக்கியுள்ளார். 'இயேசுக்கிறிஸ்து வரும்போது உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி முழுமையாகக் காப்பராக'

'ஆன்மா' என்பதை மூச்சு என்றும் விளக்கியுள்ளது. திருவிவிலியத்தின் ஆசிரியர் கூறியுள்ளபடி தேபிபஸ் (எபிரேயம்) சயிகே (கிரேக்கம்) 'ஆதிமா' (இலத்தின்) எனும் சொற்களில் அர்த்தம் மூச்சு எனப்படும்.

ஆன்மா எப்பொழுதும் மனிதனோடு தொடர்புடையதாக இருக்கும். மரணத்தின் பின்னும் அது மனித ஆன்மாவாகும். ஆன்மா என்பது எமது சுபாவத்தின் உள்ளார்ந்த பகுதி எனவும் விளக்கப்பட்டுள்ளது. வானதூதர்களுக்கு உடல் இல்லை ஆன்மா மட்டும் உள்ளது. விலங்குகளுக்கு உயிரும் உடலும் மட்டும் உண்டு. ஆன்மா இல்லை. எனினும் மனிதனுக்கு ஆன்மா, உடல், உள்ளம் எனும் யாவும் உள்ளன.

இறைவனின் படைப்பிலே முழு மனித சந்ததியும் ஒரே குடும்பமாகும். அவ்வாறே திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் இறைவனுக்குள் ஒரே தந்தையின் பிள்ளைகளாவோம். தற்காலத்திலுள்ள இனவாத கலவரங்களினால் எம்மிடமுள்ள ஒற்றுமை சீர்குலைந்து சிதறடிக்கப்படுகின்றது. அதற்குக் காரணம் மக்கள் பேசுகின்ற மொழியாகும். அவர்கள் சிறுபான்மையினர் என எண்ணுவதாகும். எனினும் கிறிஸ்தவர் களாகிய நாம் ஒரே தந்தையின் பிள்ளைகளையின் மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக எந்தத் தாக்கத்துக்கும் ஏதுவாக இருக்கக்கூடாது. எப்பொழுதும் பிறர் எனது சகோதரர் என எண்ணுவதனால் சமூகத்திலுள்ள பேதங்களை தீர்த்துக் கொள்ள முடியும்.

## ஒவ்வொரு மனிதனும்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன் - 2
என் சகோதரன்

வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

பிறர்குலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் சேர்ந்தாலும் சகோதரன்
பிற மொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

விபத்தில் சிக்கியவன் என் நண்பன்
விம்மலிட்டு அழுபவன் சகோதரன்
கண்களை இழந்தவன் என் நண்பன்
பண்புகளை இழந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் - 2

இராக தீபங்கள் பாடல் எண் - 208, பக்கம் 160

## அன்பின் மேன்மை

''அம்மா இன்று நேரத்துடனேயே வந்துவிட்டீர்களே, இன்றும் சந்தையில் அவர்கள் பிரச்சினைகள் தந்தார்களா?" ஏனைய நாட்களை விட நேரத்துடன் வீட்டிற்கு வந்த தாயைப் பார்த்து ஆனந்தன் கேட்டான்.

மாக்ரட் தனது மூன்று பிள்ளைகளையும் காய்கறி விற்பதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டே வளர்த்து வந்தாள், மூத்த மகனும், இளைய மகளும் திருமணம் செய்துவிட்டனர். அந்தப் பொறுப்புக்கள் அனைத்தையும் சுமந்தது மாக்ரட்தான். இரண்டாவது மகன் வீட்டோடு இருந்து வேலை செய்து கொண்டிருப்பது தாய்க்கு வேதனையாக இருந்தது. 'இவனுக்கென ஒரு வாழ்க்கை அமைய வேண்டுமே' என்ற ஏக்கம் எப்போதும் அவள் உள்ளத்தை வருத்தியது. 27 வயதான ஆனந்தன், சிறு வயது முதற்கொண்டு குடும்பத்தின் மீது பற்றும், பாசமும் வைத்திருந்தான். தன் வருமானத்தை மாத்திரம் வைத்துக் குடும்பத்தை நடத்த முடியாது என அறிந்த அவன், தாயின் காய்கறி வியாபாரத்தை நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

'அம்மா ஏன் யோசனையாக இருக்கிறீர்கள்?, சந்தையில் பெண்கள் ஏதாவது சொன்னார்களா?'

'நான் செய்யும் இந்த மேசன் தொழில் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதிக்க முடியுமா? இந்தக் கிராமத்தில் வேலையும் அபூர்வமாகவே கிடைக்கும். அல்லாவிடின் உங்களை மற்றவர்கள் தேவையில்லாமல் ( அநாசியமாக) பேசுவதற்கு இடம் அளிக்காமல் வீட்டிலேயே வைத்திருப்பேன்'

இதுவரையில் அமைதியாக இருந்த மாக்ரட் விழித்துக் கொண்டாள். 'பிள்ளைகளைப் பெற்று, மணமுடித்துக் கொடுத்ததும் போதாதென்று இன்னும் உழைக்க வேண்டுமாம். காவத்தையில் உள்ள மருமகன் மாணிக்கக்கற்கள் அனுப்பவில்லையா? என்று சுமனா இழிவாகச் சொன்னாள். அவர்களுக்கு இந்தக் கதைகள் எதற்கு?'

தன்னைப் பற்றி மற்றவர்கள் கூறியவைகளை மாக்ரட் வெளிப்படுத்தினாள்.

'அம்மா நீங்கள் அதைப் பொருட்படுத்த வேண்டாம். வெகு விரைவிலேயே இதனை நிறுத்த வேண்டிவரும். அப்போது அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும்'

அப்படியானால்.................... ஆனந்தனின் பேச்சில் ஏதோ மறைவான திட்டம் இருப்பதை உணர்ந்த மாக்ரட், மகனிடம் தொடர்ச்சியாகக் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். அனைத்தையும் நன்கு விளங்கிக் கொண்ட அவள், கொழும்பில் நிரந்தரமாக வசிப்பதற்கு மகன் எடுத்த தீர்மானத்திற்குக் கட்டாயத்தின் பேரில் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள்.

'அவள் பன்னிப்பிட்டியில் இருக்கிறாள். அவள் இருக்குமிடத்திற்கு அருகில் பல கட்டிடங்கள் அமைக்கிறார்களாம். எனக்கு அங்கு நிறைய வேலை இருக்கிறதாம்.'

விருப்பமின்றி கொழும்பிற்கு வந்த மாக்ரட், ஊரில் தான் விற்ற நிலத்திலிருந்து கிடைத்த பணத்தையும் மகனுக்குக் கொடுத்தாள். ஊரில் அங்குமிங்கும் நடந்து திரிந்து, பிறரது சுகதுக்கங்களைக் கேட்டறிந்த அவள், இப்போது அருகிலுள்ள வெற்றிலைக் கடையில் அமர்ந்திருப்பதையே அதிகம் விரும்பினாள்.

'எங்களை அவமானப்படுத்த வேண்டாமென நாங்கள் உங்களுக்குக் கூறியுள்ளோம். நிமாலியும் தினமும் இது பற்றி எனக்குப் புகார் செய்கிறாள். வெற்றிலை சப்பிக் கொண்டு, அங்குமிங்கும் போவோர், வருவோரிடம் பேசிக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நாங்கள் சொல்வது போல நடக்காவிட்டால் இங்கிருந்து போக வேண்டியது தான்'

இது ஆனந்தாவின் வார்த்தைகள்.

'இந்தக் கிழவியை ஊரில் விட்டுவிட்டு நாம் இருவரும் மாத்திரம் இங்கு வருவோம் என்று நான் பலமுறை உங்களுக்குக் கூறினேன். ஆனந்தன், நீங்கள் இப்போது நல்ல நிலையில் இருக்கிறீர்கள். இந்த நிலை என்னால் ஏற்பட்டதாகும். இந்தக் கிழவி எங்கள் மானத்தையே.......... நிமாலின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் இவை.

'அப்படியானால் நாம் அம்மாவைக் காவத்தைக்கு அனுப்பி விடுவோம். நான் மட்டுமல்ல. அங்கும் அம்மாவின் பிள்ளைகள் இருக்கிறார்கள் தானே' இது ஆனந்தனின் பதில்.

பிள்ளைகள் பிரச்சினைப்படக் கூடாதென்றும், ஒரு பிள்ளைக்கும் தான் பிரச்சினையாக இருக்கக் கூடாதென்றும் எண்ணிய மாக்ரட் தன் கணவனைப் போல வீதியை நோக்கி இரகசியமாக வெளியேறினாள். 'என்னால் உங்கள் குடும்ப வாழ்வை சிதைத்துக் கொள்ள வேண்டாம். நான் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். இவ்வாறு ஒரு சிறிய தாளில் எழுதி வீட்டின் வரவேற்பு அறையில் வைத்து விட்டு மாக்ரட் வீட்டை விட்டு வெளியேறினாள். தாயின் வார்த்தைகள் ஆனந்தனைத் துயரத்தில் ஆழ்த்தியது. எனினும் மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன் மனசாட்சியையும் மதியாமல் தாயைத் தேடிப் போகவில்லை. சில நாட்கள் சென்றன. தாய்க்கு இழைத்த அநீதி ஆனந்தனின் உள்ளத்தை வதைத்தது. தொழிலுக்குச் சென்றாலும், வீட்டிற்கு வந்தாலும் மனமகிழ்ச்சியின்றியும், அதிகம் கோபப்படுபவனாகவும் அவன் காணப்பட்டான். மனைவியோடு அடிக்கடி முரண்பட்டதோடு, சிறு செயல்களுக்கும் அயலவர்களோடு சண்டையிட்டான். ஒருநாள் வேலைக்குப்போய் சில மணித்தியாலங்களில் வீடு வந்து தன் மனைவியிடம் இவ்வாறு கூறினாள். 'அனைத்தும் முடிந்துவிட்டது. வேலை செய்வோர் நான் சொல்வதைக் கேட்பதில்லை. அவர்கள் தலைக்கனம் பிடித்தவர்கள். நான் எல்லோரையும் வேலையிலிருந்து விலக்கி விட்டேன். எனது தொழிலுக்கும் இன்று முடிவு வந்துவிட்டது.

பின் உள்ளத்தில் பொதிந்திருந்த துயரத்தை வெளிப்படுத்த முயன்ற ஆனந்தன் பொறுமை இழந்து தனக்குள்ளே இவ்வாறு கூறிக் கொண்டான். 'நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தேன். அன்று ஊரில் என் அம்மாவுடன் வாழ்ந்த நாட்கள்......... ஆனால் இன்று அவை அனைத்தும் கனவுகளே. இன்று என் வாழ்வு எனக்கே பிரச்சினையாக உள்ளது.

இவை அனைத்திற்கும் காரணம் தன் மனைவி என்பதால் அவளைத் தன் மனதால் சபித்தான். தன் பணியாட்கள் இந்நிலைக்குக் காரணமென்றும் சிலவேளைகளில் அவன் எண்ணினான். இந்நிலைக்குக் காரணம் தானே என இறுதியாக அவன் முடிவுக்கு வந்தான்.

'என் தாயை வீதியில் அலைய விட்ட செயலுக்காகவே நான் இவ்வாறு வருந்துகிறேன்' என்றான்.

'அம்மா............ என்னை மன்னித்து விடுங்கள். நான் தவறு செய்து விட்டேன். நீங்கள் தவறு செய்யவில்லை, இவ்வாறு மூடிய கடையொன்றின் முன்படுத்திருந்த தாயை நோக்கிக் கூறினான்.

வழமையான அன்புடன் கூடிய பார்வையை மாக்ரட் மகன் பக்கம் திருப்பினாள். நீ தவறுகளை ஏற்றுக் கொண்டாய்; மனிதத்துவத்தை விளங்கிக் கொண்டாய். நீ நல்வாழ்வு வாழ்வாய் என்றாள். இந்த ஆசீரைப் பெற்ற ஆனந்தன் மீண்டும் புதுவாழ்வு ஒன்றினை ஆரம்பிக்கும் பொருட்டு வீதிவழியே செல்கிறான்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

**தேர்ச்சி மட்டம் 1.7** : பணியின் மூலமாக கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாவர்.

**செயற்பாடு 1:7** : நாமும் பணியின் மூலமாக கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ லூக். 1:32-33 திருவிவிலியப்பகுதி எழுதப்பட்ட பிரிஸ்டல் போர்ட் ஒன்று
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ இணைப்பு 1.7.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.7.1**
- திருவிவிலியத்தின் ஊடாக கிறிஸ்துவின் அரசின் 5 பண்புகளைத் தெரிந்து கொள்க.
- அரசர் ஒருவரை உதாரணமாகக் கொண்டு கிறிஸ்துவின் அரசுடன் ஒப்பிடுக.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

◆ கிறிஸ்து இறையரசை இவ்வுலகில் நிறுவினார்.
◆ அவருடைய அரசு இவ்வுலகம் முழுவதும் நித்தியமானது.
◆ இவ்வுலக அரசு காலத்துக்கும், உலகுக்கும் வரையறுக்கப்பட்டது.
◆ இவ்வுலகத்தின் மக்கள்
  1. ஒடுக்கப்பட்ட மக்கள்
  2. அடிமைகள்
  3. கீழ்ப்படிவுள்ள பணியாளர்
  
  போன்ற பல்வேறு இயல்புகளை உடையவர்கள் ஆகும்.
◆ கிறிஸ்துவின் அரசில் அனைவரும் நண்பர்கள், சகோதரர்கள் ஆவர்.
◆ இவ்வுலக அரசில் மக்களுக்கு அரசின் மீது எதுவித உரிமையுமில்லை.
◆ திருமுழுக்கின் வழியாக நமக்கு, இறையரசுக் கான உரிமை கிடைக்கின்றது.
◆ கிறிஸ்துவின் அரசு எக்காலத்துக்குமுரியது. அவர் ஒருவரே அரசராக இருக்கிறார்

**படி 1.7.2** :
- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.7.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா என்பவற்றை ~~குழுக்களுக்கிடையில் பகிர்க.~~

- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 1.7.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ கிறிஸ்துவின் இறையரசின் பண்புகள்

1. கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நம்பிக்கை
2. இறையரசைப் பற்றிய உறுதியான எதிர் நோக்கு.
3. தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படும் நிபந் தனையற்ற இறையன்பு.

◆ தமது வார்த்தை, செயல், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு என்பவற்றின் வழியாக கிறிஸ்து தனது தூதுப் பணியை முழுமையாக நிறை வேற்றினார்.

◆ விண்ணேற்பு அடைந்த அவர் எல்லோரையும் தம்மிடம் அழைப்பார்.

◆ நாமும் பணியின் வாயிலாக கிறிஸ்துவின் அரசில் பங்காளிகள் ஆகிறோம்.

◆ கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாகும் போது அவரைப் போன்று இவ்வுலகத்தை அழகும், இரக்கமும் உள்ளதாக்க வேண்டுமென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

◆ இறையரசு மனமாற்றத்துக்கான அழைப்பாகும்.

1. அதற்கேற்ப மீண்டும் திரும்பி இறையரசை நோக்கிப் பயணம் செய்தல் வேண்டும்.
2. சிறு பிள்ளைகளைப் போல் மாறவேண்டும். (மாற்கு 10:15)
3. என்னிடமுள்ள நீரூற்றாக இறையரசை இனங்காண வேண்டும். (யோவான் 4:14)
4. கிறிஸ்து எமது உள்ளத்தில் வாழ்கிறார்.
5. கிறிஸ்துவின் விழிகளால் உலகை நோக்குதல்.
6. இறையரசின் மதிப்பீடுகளுக்கு கட்டுப் பட்டிருத்தல் வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கிறிஸ்துவின் அரசில் பங்காளிகள் ஆவதற்கு செய்யவேண்டிய பணிகள் 4 எழுதுக.
- நாமும் அயலவருக்குப் பணி செய்வதால் கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாவோம் என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- கிறிஸ்துவின் அரசின் பண்புகளான நம்பிக்கை எதிர்நோக்கு இறையன்பு என்பவற்றைத் தேடிப் பார்ப்பர்.
- இறையரசின் பண்புகளை தமது பாடசாலைச் சமூகத்தில் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுவர்.

## இணைப்பு 1.7.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- வகுப்பை 5 சிறிய குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் தலைப்புகளை 3 குழுக்களுக்கு பகிர்ந்து அளிக்கவும்.
  1. பாடசாலையும் வீடும்
  2. உமது பங்கும் ஆலயமும்
  3. உமது கிராமம்

  தமது குழுவுக்குக் கிடைத்த தலைப்பின் படி ''பணியின் மூலம் கிறிஸ்துவின் அரசில் பங்காளிகளாகும் விதம்" தொடர்பான எழுத்தாக்கம் ஒன்று தயாரிக்குக.
- இத்தலைப்பை 2குழுக்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கும்படி செயற்படவும்.
  4. ''இவ்வுலக வாழ்விலிருந்து மீண்டும் மனம் திரும்பி இறையரசை நோக்கிப் பயணம் செய்யும் போது எம்மில் ஏற்படுகின்ற மாற்றங்கள்.
- எழுத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுவரொட்டியொன்றைத் காட்சிப் படுத்துக.

## 1.7 இணைப்பு

''மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கு.......... வந்தார்" (மாற்கு. 20:28) இங்ஙனம் கிறிஸ்துவினுடைய அரசில் பணியாற்றுவது பற்றிய கருத்துக்கள் அடங்கியுள்ளனவென்பதைக் கிறிஸ்துவே கூறியுள்ளார். கிறிஸ்துவுக்குள் தலைவர்களாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் அனைவரின் பணியாளராக ஆயத்தமாக வேண்டுமென்று அவர்மேலும் கூறியுள்ளார். (லூக். 22:26) ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன். என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக் கின்றீர்கள் (யோவான் 13:14).

ஆட்சியாளர் உண்மையாக, தார்மீகமுள்ளவராக இருத்தல் வேண்டும். மக்கள் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்தல் வேண்டும். திருவிவிலியத்திலும் ஏனைய மதங்களின் இலக்கியங்களிலும் இவற்றைக் காணலாம்.

இஸ்ராயேலில் இறைவனது பிரதிநிதியாக அரசன் நியமிக்கப்பட்டான். அது அவருடைய மககளைப் பராமரிப்பதற்காகும். ஆட்சி செய்ய மட்டுமேயாகும். மக்களைப் பாதுகாக்காத அரசர்களும் குருக்களும் தீய இடையர்களைப் போன்று பழைய ஏற்பாட்டில் விமர்சிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சிறந்த மன்னனாகக் கருதப்படும் நீதியாகவும், சமயவிழுமியங் களுடனும் ஆட்சி செய்யும் ஒருவர் நீதியுடனும், சமய விழுமியங்களுடனும், தார்மீகத் துடனும், உண்மையுடனும், நியாயத்துடனும் ஆட்சி செய்தலாகும். அரசன் ஒருவன் தார்மீகமுடையவனாதல் இயற்கை நியதியையும் பாதிப்பதைக் கூறும் நன் மொழிகள் பல நம்மிடையே உள்ளன.

குடிமக்களை மற்றவர்கள் வகுத்தாமலும் அவர்களைக் காப்பாற்றித் தானும் வருத்தாமல் நல்லாட்சி செய்து அவர்களது குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழிப்பது அரசனுடைய அதாவது நல்லரசனுடைய கடமையாகுமென திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில். (திருக்குறள்)**

**அரச தர்மங்கள் பத்து**

தியாகம், தவம், ஒழுக்கம், அகிம்சை, பொறுமை, கொடை, குரோதமின்மை, பகையின்மை, நேர்மை,மென்மை என்பனவாகும்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 1.0** : உலகில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

**தேர்ச்சி மட்டம் 1.8** : இலங்கையின் ஆன்மீகத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்த்துக் கொள்வர்

**செயற்பாடு 1:8** : இலங்கை சமூகத்தில் கிறிஸ்தவ விசுவாசத் தையும் அதன் முன்னோடிகளையும் இனங் காண்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ குழு ஆய்வுக்குரிய அறிவுறுத்தல் பிரதிகள் 5
- ❖ டிமைதாள், மாக்கர் பேனாக்கள்
- ❖ பாடநூல்
- ❖ முத்திப் பேறு பெற்ற ஜோசப் வாஸ் அடிகள், யக்கோமே கொன்சா வேஸ் அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரின் படங்கள்.
- ❖ இணைப்பு 1.7.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 1.8.1** :

- முத்திப் பெறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகள், யக்கோமே கொன்சால் வேஸ் அடிகளார் ஆகியோரின் படங்களை முன்வைத்து இவர் கள் இருவரும் இலங்கைச் சமூகத்தில் முக்கியத் துவம் பெறுவதற்கான காரணிகளை ஆய்வு செய்து கலந்துரையாடலை ஆரம்பிக்கவும்.
- அவர்களது மறை பணி பற்றிய காரணங்களை வெளிக்கொணரவும்.
- அவர்கள் ஆற்றிய பணிகளை கரும்பலகையில் பட்டியற்படுத்தவும்.
- இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து வெளிக்கொணர்ந்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

- ◆ கஷ்டமான காலத்தில் இறை பணிக்காக அர்ப் பணித்தமையாகும்.
- ◆ தாம் பிறந்த நாட்டை விட்டுவிட்டு வேற்று நாட்டுக்கு பணிக்காக அர்ப்பணத்துடன் செயலாற்றினார்.
- ◆ கொன்சால்வேஸ் அடிகளார் இலக்கியத்துக்கு ஆற்றிய பணியினால் தேசிய கிறிஸ்துவ இலக் கியத்தின் தந்தையென கருதப்பட்டார்.
- ◆ ஜோசப் வாஸ் அடிகளார் ஆற்றிய பணியினால் முத்திப் பேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**படி 1.8.2** :
- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 1.8.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 1.8.3** :
- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்ப்பதற்கு பல வழிகள் உள்ளன.
◆ கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்ப்பதில் முக்கிய வழியாக திருப்பலி, திருயாத்திரைகள் ஆகிய பல்வேறு பக்தி பயிற்சிகளில் ஈடுபடச் செய்யலாம்.
◆ கிறிஸ்தவ விசுவாசத்தை இலங்கையில் நிறுவு தற்காக பிரான்சிஸ்கள், யேசு, டொமினிக்கன், அகுஸ்தீன், ஒரித்தேரியன் போன்ற துறவற சபைகளைச் சேர்ந்தோரும் மறைத்தூதுக் குருக் களும் முன்னோடிகளாய்ச் செயலாற்றினார்.
◆ இலங்கையில் மறைத்தூதுத் தந்தையர்கள் ஆன யக்கோமே கொன்சால் வேஸ் அடிகளாரும். முத்திப் பேறுபெற்ற ஜோசப் வாஸ் அடிகளாரும் மிக உன்னதமான பணியினை ஆற்றியுள்ளனர்.
◆ உங்களுடைய பிரதேசங்களிலும் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்ட பலர் இருக்கின்றனர்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பல்வேறு துறவற சபைகளின் வழியாக விசுவாசத்தை வளர்ப்பதற்கு சமூகத்திலே ஆற்றப்பட்ட பணிகள் நான்கினைப் பெயரிடுக.
- விசுவாசத்தை வளர்ப்பதற்காக பல்வேறு ஆட்கள், பல்வேறு துறவறசபைகள் வழி யாக பல்வேறு பணிகள் ஆற்றப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்வர்.
- தமது பங்கில் இறைபணிக்கு அர்ப்பணிந்துள்ள பொது நிலையினர், துறவிகள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.
- தமது பங்கில் இறை பணிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவர்.

**இணைப்பு 1.8.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- மாணவர்களை 5 சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- 4 குழுக்களுக்கு பின்வரும் தலைப்புகளை பிரித்துக் கொடுக்கவும்.
    1. பிரான்சிஸ்கன்
    2. யேசு
    3. டொமினிக்கன்
    4. அகுஸ்தீன்
- இந்தத் துறவற சபைகளைப் பற்றிய விளக்கங்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆய்வுக்காக ஈடுபடுத்தவும். அந்த 4 குழுக்களும்
    1. வருகை தந்த காலம்
    2. பணியாற்றிய பிரதேசம்
    3. கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்ப்பதற்கு சமூகத்தில் ஆற்றிய பணிகள்.
    4. துறவற சபைகளிலுள்ள விசேட தன்மைகள்
    5. துறவற சபையினை ஆரம்பித்த புனிதர் பற்றிய விபரம்
    6. 5வது குழு தமது பிரதேசத்தில் பணிக்காக அர்ப்பணித்துள்ள ஆட்கள் பற்றிய தகவல்களைத் தேடுக.

## 1.8 யக்கோமே கொன்சால் வேஸ் அடிகளாரின் இலக்கியப் பணி

யக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் 1676ஆம் ஆண்டு கோவா பிரதேசத்தில் பிறந்தார். கி.பி. 1700 இல் ஒரித்தேரியன் துறவற சபையில் சேர்ந்த அவர் 1705 இல் இலங்கைக்கு வருகை தந்தார். சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மிகத் தேர்ச்சிபெற்ற அவர், கிறிஸ்தவ இலக்கியங்களில் ஆர்வம் காட்டினார். எனவே சிங்கள மொழியில் 22 நூல்களும், தமிழ்மொழியில் 15 நூல்களும், போர்த்துக்கேய மொழியில் 4 நூல்களும், ஒல்லாந்துமொழியில் 1 நூலும் எழுதியுள்ளார். இவற்றைத் தவிர சிங்களமொழியில் 4 நூல்களும், தமிழ்மொழியில் 1 அல்லது 2 நூல்கள் எழுதியுள்ளார் என இலக்கிய ஆய்வில் கூறப்படுகின்றது.

அவர் இன்னும் சிங்கள மொழியில் உரைநடைக்காவியத்தையும் எழுதியுள்ளார். அவர் உரை நடை நூல்களாக பரிசுத்த வேதாகமம், மறைப்போதகம், புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, தவ வாழ்வு பற்றிய விளக்கங்கள், மறை சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் நூல்கள் போன்றவற்றை எழுதியுள்ளார். காவிய நூல்களாக 528 காவியங்களடங்கிய நூல்களில் பசாம் பாடல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவர் எழுதிய வேறு சில நூல்கள் பற்றிய சிறு விளக்கம் கீழே தரப்படுகின்றது.

**சிங்கள நூல்கள்**

| | | |
|---|---|---|
| **தேவ வேத புராணம்** | : | இது அவர் எழுதியவற்றுள் மிகவும் முதன்மை வாய்ந்ததாகும். பரிசுத்த வேதாகம வசனங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதாகும். மறைப் போதகத்தைக் கற்பிப்பதற்கும், விளக்குவதற்கும் முதலாவதாக எழுதப்பட்ட நூலென்பதை இங்கு முக்கியமாகக் கருதலாம். |
| **தேவ வேத சங்சோதய** | : | மறையைக் கற்பிப்பதற்காக எழுதப்பட்டதாகும். |
| **சுவிசேஷ விசர்ஜனய** | : | ஞாயிறு தினத்தில் வாசிக்கப்படுகின்ற நற்செய்திப் பகுதி களும் அவற்றின் விளங்கங்களும் அடங்கியது. |
| **ஞானானந்தய, தேவநீதி** | | |
| **விசர்ஜனய, சுக்குர்த தர்பனய** | : | மறைப்போதகத்திற்கேற்ப வாழும் முறை விபரிக்கப் பட்டுள்ளது. |
| **தர்மோடனய** | : | புனிதர்களின் வாழ்க்கைக்கதைகளை உள்ளடக்கியது. |
| **பிரார்த்திபாரீயவளிய** | : | பிரார்த்திபாரீய என்பதன் ஒன்றிணைப்பு |
| **துக்பிரார்த்தி பிரசங்கய** | : | வியாகுலங்கள் பற்றிய 9 பிரசங்கங்கள் அடங்கியது. இப்பிரசங்கங்களில் 'ஒப்பாரி' அல்லது அழுது புலம்பல் பாடல் எழுதப்பட்டுள்ளது. |
| **மங்கள சீதய** | : | கர்நாடக சங்கீதத்துக்கமைய மேலை நாட்டுத்தாளம் போடப்பட்டது. |
| **ஆனந்த களிப்புவ** | : | உலகத்தின் நற்குணங்கள் பற்றிய தற்போதைய பாடல் |

இவற்றைத் தவிர அஞ்ஞான அவுதய, பேதகாரின்கே தர்க்கய, மாதர பிரத்தியக்ஷய, புதுமுல்ல, சிங்கள - போர்த்துக்கேய அகராதி, போர்த்துக்கேய - சிங்கள அகராதி, போர்த்துக்கேய - சிங்கள - தமிழ் அகராதி என்பவற்றையும் குறிப்பிடலாம்.

**தமிழ் நூல்கள்**

| | | |
|---|---|---|
| **தேவ அருள்வேத புராணம்** | : | சிங்களத்தில் எழுதப்பட்ட தேவவேத புராண என்பது தமிழில் எழுதப்பட்டுள்ளது. |
| **கிறிஸ்தவ ஆலயம்** | : | கிறிஸ்தவ விசுவாசம், வழிபாடுகள், வாழ்க்கைமுறை பற்றிய பிரச்சினைகள், மறைப்போதகம், தியானம், செபமாலை சொல்லுதல், அருளடையாளங்கள் அளிக்கப்படுவதை விளக்குதல், நோயாளருக்கான செபம், மரணம் வழிபாடு, பேய்களை விரட்டுதல் செபம் போன்றன உள்ளடங்கியது. |
| **சத்திய வேதாகம சங்கோபம்** | : | மறையைக் கற்பித்தல் பற்றியது. |
| **சுவிசேஷ விரித்துரை** | : | ஞாயிறு தினம், திருநாட்களில் நற்செய்தி விளக்கம் |
| **வியாகுல பிரசங்கம்** | : | வியாகுலப் பிரசங்களை 9 வாசிக்க, கேட்க, 'ஒப்பாரி' எனக் கூறப்படும் பசாம் பாடல் |

இவற்றைத்தவிர தர்ம உத்தியானம், அற்புத வரலாறு, ஞானஉணர்வு, ஸ்தோத்திரிக்க நர்ப்பணம் போன்றவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

கொன்சால்வேஸ் அடிகளாரினால் எழுதப்பட்ட பசாம் அல்லது ஒப்பாரி இன்னும் தவக்காலங்களில் கிறிஸ்தவர்களால் பாடப்பட்டு வருகின்றது.

## 1.8 இணைப்பு

**முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின் பணி**

**அவர் பணியாற்றிய முக்கிய இடங்கள் :**

மன்னார், யாழ்ப்பாணம், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கண்டி, கொழும்பு, களுத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு

**எம்மை கிறிஸ்தவ சமூகத்துக்கு இனங்காட்டுவதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

பொது நிலையினரை திருச்சபையின் நிர்வாகத்தோடு தொடர்புபடுத்தல், தேசிய கலாச்சாரத்தினை பொதுவழிபாடுகளில் உள்ளெடுத்தல், பங்கின் நிதிக்குழுக்களை நியமித்தல், வின்சன்ட் டீ பவுல் சங்கத்தினை ஆரம்பித்தல், தேசிய மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்தல், தேசிய ஒழுக்கமுறைகளை ஏற்றுக்கொள்ளல், அரசியல் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொள்ளல், பொதுச் சட்டங்களை ஏற்றுக்கொள்ளல்.

**அவரது வாழ்வின் முன்மாதிரிகைகள்**

தூய்மையான வாழ்வு, துன்பப்படுவோருடன் இருத்தல், குடும்பங்களைச் சந்திப்பதற்கான செபவாழ்வு, பணியில் அர்ப்பணிப்பு தாழ்மையான வாழ்வு, எளிமையான வாழ்வு, மறைச் சுதந்திரத்திரத்துக்காகக் கதைத்தல், வைசூரி நோயாளிகளைப் பராமரித்தல், தேசிய மொழியைக் கற்று அம்மொழியிலேயே செயலாற்றல்.

**பொது நிலையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பணி**

ஞான உபதேசம் கற்பிப்பதற்கு, ஞாயிறு செப வழிபாடு, திருமுழுக்கு கொடுத்தல், நோயாளருக்காகவும், இறந்தவர்களுக்காகவும் செபித்தல்.

### நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

இலங்கைத் திருநாட்டில் தமிழுக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் தொண்டாற்றியவர்களுள் முதன்மையானவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசராவார். மானிப்பாய் சைவக்குடும்பமொன்றில் இராசசிங்கம் சுவாமிநாதன் பிள்ளைக்கும், தங்கமுத்துவுக்கும் 1875 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி இவர் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு ஆசிரியர். இவருக்கு ஐந்து வயதிருக்கும் போது அவருடைய தந்தையார் இறந்து விட்டார். அதன் பின்னர் அவருடைய தாயார் அச்சுவேயிலிருந்த தம்பி முத்து என்ற கத்தோலிக்கரை மறுமணம் செய்து கொள்வதற்காக அம்மதத்திற்குச் சேர்ந்தார். அப்பொழுது சிறுவன் ஞானப்பிரகாசரும் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்தார். பிறந்தபொழுது பெற்றோர் அவருக்கிட்டிருந்த பெயர் வைத்தியலிங்கமாகும். கத்தோலிக்க மதத்தில் சேர்க்கப்பட்ட பின்னர் அவருக்கு இடப்பட்ட பெயரே ஞானப்பிரகாசம் என்பதாகும்.

ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தையான தம்பிமுத்து ஒரு நல்ல தமிழ் அறிஞர். அச்சுவேலியில் ஒரு அச்சுக் கூடம் வைத்திருந்து தமிழில் பல கத்தோலிக்க சமய நாடகங்களை வெளியிட்டு வந்தார். சண்மார்க்க போதினி என்ற ஒருசமய சஞ்சிகையையும் அவர் வெளியிட்டு வந்தார்.

இளம் ஞானப்பிரகாசருக்கு அவர் அச்சுக்கலையில் பயிற்சி அளித்ததோடல்லாமல் தமிழில் ஆர்வத்தையும் பற்றையும் ஏற்படுத்தி இருந்தார். தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவையும் புகட்டியிருந்தார். ஞானப்பிரகாசர் சிறுவயதிலேயே இலக்கணப்பிழை இன்றி விரைசில் கவிதை இயற்றும் ஆற்றல் உள்ளவராக இருந்தார். வயலின் வாசிப்பதிலும் மத்தளம் அடிப்பதிலும் வல்லவராக இருந்தார். சிறந்த பேச்சாளராகவும் இருந்தார்.

எழுபத்திரெண்டு மொழிகளில் அவர் புலமை பெற்றிருந்தார். மொழிகளில் அவருக்கிருந்த ஞானமும், அவருடைய மதிநுட்பமும், ஆழ்ந்த அகன்ற ஆராய்ச்சித் திறனும் இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, ஜெர்மனி போன்ற நாடுகளில் அவருடைய புகழைப் பரப்பியிருந்தன.

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்ட ஞானப்பிரகாசர் 1893ஆம் ஆண்டு ரெயில்வே கிளரிக்கல் பரீட்சையில் மிகத்திறமையாகத் தேர்ச்சியடைந்து கடிகமுவ புகைவண்டி நிலையத்தில் பணிபுரிந்தார். பின்பு 1895ஆம் ஆண்டில் அச்சேவையிலிருந்து விலகி கத்தோலிக்க குருவானவர் ஆகும் பொருட்டு யாழ்ப்பாணக் குருமடத்தில் சேர்ந்து கொண்டார். 1901ஆம் ஆண்டு குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவானவர் ஆனதன் பின்பு கத்தோலிக்க சமயக்கொள்கைகளை மக்களுக்கு விளக்குவதற்கும் பரப்புவதற்கும் பல பிரசுரங்களை வெளியிட்டார். மக்கள் மத்தியில் சென்று தர்க்கப்பிரசங்கம் என்ற விவாதங்களை நடத்தி அவ்விவாதங்களைப் பிரசுரமாக வெளியிட்டு மக்களுக்கு வழங்கியும் வந்தார். கத்தோலிக்க சமய சம்பந்தமான பல புத்தகங்களையும் எழுதி வெளியிட்டார். அமலோற்பவ இராக்கினித் தூதன் எனும் மாதசஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலிருந்து இதுவரை வேறு எந்த குருவானவரும் செய்திரா அளவுக்கு அவர் பல கோவில்களைக் கட்டுவித்து மீசாம்களை ஏற்படுத்தியிருந்தார். 1946ஆம் ஆண்டில் அவர் இறப்பதற்கு சற்று முன்பு, அவர் பிறந்த ஊராகிய மானிப்பாயில் அவர் கட்டுவித்திருந்த கோவில் முப்பத்தேழாவது கோவிலாகும். கோவில்களைக் கட்டுவித்ததோடல்லாமல் அங்குள்ள மக்களின் அறிவை வளர்ப்பதற்காக வாசிகசாலைகளை யும் அங்கு ஏற்படுத்தி வந்தார்.

சமயத்தொண்டுடன் தமிழ்த்தொண்டும் ஆற்றினார். அவருடைய தமிழார்வமும் பற்றும் அவரைத்தமிழ் மொழியை ஆழமாகப் படிக்க வைத்ததோடல்லாமல் பிறமொழிகள் பலவற்றையும் படிக்கத் தூண்டின. எழுபத்திரெண்டு மொழிகளை அறிந்திருந்த அவர் பன்னிரெண்டு மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். மொழிகளில் மாத்திரமல்ல சரித்திரம், தத்துவம், சமயம் முதலியவற்றிலும் ஆழ்ந்த அறிவு கொண்டிருந்தார். முதன்முதலில் யாழ்ப்பாண சரித்திரத்தை விஞ்ஞான முறைப்படி எழுதியவர் சுவாமி ஞானப்பிரகாசரேயாவார். சைவசமயத்தைப் பற்றி சைவசித்தாந்தம் என்ற நூலையும் செகராசசேகரம் என்ற நாவலையும் எழுதினார்.

அக்காலத்தில் பல இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட சென்னைத் தமிழ் அகராதியில், வடமொழியிலிருந்து பிறந்த சொற்கள் என்று காட்டப்பட்டிருந்த பலசொற்கள் தென்மொழியிலிருந்து பிறந்தனவென்பதை வாதாடி நிறுவினார். தமிழ் மொழியின் தொன்மையை, மேன்மையை, தனித்துவத்தை உலகுக்கு எடுத்துக்காட்ட ஒப்புயர்வற்ற சொற்பிறப்பு ஒப்பியல் என்னும் அகராதியின் ஆறுபாகங்களை பன்னிரெண்டு ஆண்டுகளில் எழுதி வெளியிட்டார். எஞ்சிய பதினான்கு பாகங்களின் பெரும்பாலானவற்றை ஆராய்ந்து கையெழுத்துப் பிரதிகளில் வைத்திருந்தார். அவற்றை அவர் வெளியிடுவதற்கு முன்பு 1947ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி அவர் இறைவனடி சேர்ந்தார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கையை தமிழுக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் அவர் ஆற்றிய சேவையை இளைஞர்கள் ஒரு முன்மாதிரியாகத் தமது இலட்சியமாகக் கொண்டு வாழ வேண்டும்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : தூய ஆவியின் அருளால் நிறைவு பெற்று முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களாய் வாழ்வர்.

**செயற்பாடு 2.1** : முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாய் வாழ்வதற்கு வேண்டிய தூய ஆவியின் செயற்பாடுகளை இனங் காண்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ திருவிவிலியம்
- ❖ தி.ப. 2:42-47 எனும் திருவிவிலியப்பகுதி எழுதப் பட்ட பிரிஸ்டல் போட் ஒன்று
- ❖ ஆய்வுக்குரிய அறிவுறுத்தல் பிரதிகள் 5
- ❖ டிமைதாள், மாக்கர் பேனாக்கள்
- ❖ தரம் 10 கத்தோலிக்க திருமறை பாடப்புத்தகம்
- ❖ இணைப்பு 2.1.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.1.1**

- தி.ப. 2:42-47 எனும் திருவிவிலியப்பகுதி எழுதப் பட்ட அட்டையை வகுப்பிலே காட்சிப்படுத்துக.
- அதில் அடங்கியுள்ள கருத்துக்களை சிந்திப் பதற்கு மாணவர் யாவருக்கும் சந்தர்ப்பம் வழங்குக.
- இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து வெளிக்கொணர்ந்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

◆ தூய ஆவியின் வருகை முன்பிருந்த சமூக நிலை மாற்றம் பெற்று புதிய கிறிஸ்தவ சமூகம் ஆரம்ப மானது.
◆ அச்சமூகத்தின் பண்புகளான படிப்பினைகள், பகிர்தல், அப்பம் பிட்குதல் மற்றும் செபத்தில் நிலைத்திருத்தல் ஆகும்.
◆ அனைவரிடத்திலும் அச்சம் நிலவியது.
◆ அனைத்தையும் பொதுவாக வைத்திருத்தல் ஆகும்.
◆ நாள்தோறும் தவறாது ஒரேமனதாய் ஆலயத்தில் கூடினர்.
◆ மாலைவேளையில் கிறிஸ்துவின் இறுதி இரா வுணவை நினைவுகூர்ந்து அப்பத்தை பிட்டு வந்தார்கள்
◆ இறைவனைப் புகழ்ந்தனர்
◆ அனைவரதும் நல்லெண்ணத்தைப் பெற்றிருத்தல்.

**படி 2.1.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.1.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள்,மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 2.1.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ உறுதிப்பூசுதல் வழியாக பரிசுத்த திருச்சபையில் மிக நெருங்குகின்றோம்.

◆ தூய ஆவியினால் தைரியம் பெற்று, சொல் லிலும் செயலிலும் விசுவாசத்தை பாதுகாப் பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

◆ அன்று தூய ஆவியின் வருகையால் அப்போஸ் தலர்களுக்கு கிடைக்கப்பெற்ற அனைத்து வரங்களும் உறுதிப்பூசுதல் வழியாக இன்று எமக்குக் கிடைக்கின்றன.

◆ திருமுழுக்கு வழியாக நாம் பெற்றுக்கொண்ட அருள்வரங்களை விருத்திசெய்து ஆழமான நிலைக்குக் கொண்டு சொல்லல்.

அதாவது :-

1. இறைவனின் பிள்ளைக்குரிய நிலை மேலும் உயர்வடையும்.
2. கிறிஸ்துவோடு மிக நெருங்கிய தொடர் பினை ஏற்படுத்தல்
3. எமக்குக் கிடைக்கப் பெற்ற தூய ஆவியின் கொடைகளை அதிகரித்தல்
4. திருச்சபையுடனான உறவை உறுதிப் படுத்தல்
5. எமது சொல்லிலும் செயலிலும் விசுவாசத் தைப் பாதுகாக்கவும், அதனை பரப்பவும் வலிமைபெறல்
6. கிறிஸ்துவின் பெயரைத் துணிவுடன் அறிக்கையிடல்.
7. சிலுவையை ஏற்றுக்கொள்வதில் வெட்க மடையாதிருத்தல்.
8. தகுந்த முறையில் செபிப்பதற்கு எமக்கு சக்தி கிடைத்தல்.

- ◆ சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சி யாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது. (உரோ. 8:38.39)
- ◆ தூய ஆவியின் வழிகாட்டல்கள் உடல் ஆசை களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட அருட்கொடைகளைப் பெயரிடுவர்.
- திருமுழுக்கின் வாயிலாக நாம் பெற்றுக்கொண்ட அருட்கொடைகள் தூய ஆவியின் செயற்பாட்டினால் இன்னும் அதிகமாக விருத்தி செய்து சூழ்நிலைக்கு இட்டுச் செல்வதை ஏற்றுக்கொள்வர்.
- தூய ஆவியின் வழிகாட்டல் மூலம் அவ்வருட் கொடைகளை தமது அன்றாட வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ளும் வழிமுறைகளைக் கண்டறிவர்.
- தூய ஆவியின் வழிகாட்டகள் உடல் ஆசைகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கிறது.

## இணைப்பு 2.1.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- நீங்கள் பெற்றுக்கொண்ட ஆய்வுப் பட்டியலின்படி தரம் 10இல் 5,9,13ஆம் பாடங்களின் வழியாகப் பெற்றுக்கொண்ட தேர்ச்சிகள் உங்களில் எந்தளவிற்கு விருத்தி யடைந்துள்ளது என்பது பற்றிய சுய மதிப்பீட்டில் ஈடுபடுக.
- வாழ்வில் தூய ஆவியின் செயற்பாட்டை உணரும் பொருட்டு :
  - முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவன் என்றவிதத்தில் நீங்கள் அவரது செயற்பாட்டைக் கண்டுணர்ந்த சந்தர்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
- புகுமுக அருளடையாளங்களைப் பெற்று கிறிஸ்தவ வாழ்வு வாழும் பொருட்டு
  - திருமுழுக்கைப் பெற்ற நீர் புதிய வாழ்வை விருத்தி செய்யுமுகமாக ஆற்றிய நற்செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக.
  - முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக, உறுதிப்பூசுதல் மூலம் திடம் பெற்ற உம்மால் பாடசாலைக்கும் உங்கள் பங்குக்கும் ஆற்றக்கூடிய பணிகள் இரண்டினை எழுதுக.
  - எப்பொழுதும் நற்கருணையைப் பெற்றுக்கொள்வதினால் ஊட்டம் பெறும் நீங்கள் மற்றவர்களின் நன்மைக்காக செய்யக்கூடிய நற்செயல்கள் ஐந்து எழுதுக.

## 2.1 பரிசுத்த ஆவியின் கொடைகளும் கனிகளும்

பரிசுத்த ஆவியானவர் திருமுழுக்கினால் எமது ஆன்மாவில் வந்து தங்கியிருந்து எமக்கு இறை அருள்களை கொடுக்கின்றார். இதனால் எமக்கு விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு ஆகிய இறைக் கொடைகள் அருளப்படுகின்றன. உறுதிப்பூசுதலினால் எமது இறைவாழ்வு மேலும் பெலப்படுத்தப்படுகின்றது; நாம் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்பவரகளாக இதனால் நியமிக்கப்படுகின்றோம்.

விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு என்பன இறைவனுடன் தொடர்புள்ள மறைப் பண்புகளாகும். பரிசுத்த ஆவியினால் எமக்குக் கிடைக்கின்ற கொண்ட இறையருள் வரப்பிரசாதம் மிக முக்கியமானதாகும். சாவான பாவத்தினால் இந்த இறை அருளை இழக்கின்றோம்.

இறையருள் → தூய்மைப்படுத்தும் அருள்
இறையருள் → மெய்யருள்

மெய்யருள் என்பது நற்செயல்கள் வழியாக எமக்குக்கிடைக்கின்ற அருளாகும். நாம் எந்நிலையிலிருந்தாலும் இந்த மெய்யருள் எமக்குக்கிடைக்கின்றது. தூய்மைப் படுத்தும் அருளினால் பொதுத்தன்மை, அமைதி, பக்தி என்னும் நற்பண்புகள் அருளப்படுகின்றன.

பரிசுத்த ஆவியின் கொடைகள் எம்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழவும், பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்கேற்ப செயற்படவும் உதவுகின்றன. இக்கொடைகளைப் பெறுவதனால் எமது நற்குணங்கள் பரிபூரண நிலையையடைகின்றன.

பரிசுத்த ஆவியின் கொடைகளாவன ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயம் என்பனவாகும். இக்கொடைகள் முக்கியமானவைகளாகும். தீர்மானங்கள் எடுக்க நேரிடும் பொழுது அறிவுசார்ந்த தீர்மானம் எடுப்பதற்கு, வாழ்வின் அர்த்தத்தை தெரிந்து கொள்வதற்கு, சரியான முடிவுகள் எடுப்பதற்கு, பிறர்க்கு அறிவுரை வழங்குவதற்கு, உதவுவதற்கு, சரியானவற்றைப் பயமின்றி எடுத்துரைப்பதற்கும், பிழையானவற்றை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கும், இறைவனது படிப்பினைகளுக்கேற்ப எமது எதிர்கால வாழ்வைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், இறைவனைப் புகழ்வதற்கும், வணங்குவதற்கும், எமது அன்பான இறைத்தந்தையை அவமரியாதை செய்யப்பயப்படவும் இக்கொடைகள் உதவுகின்றன.

பரிசுத்த ஆவியின் கொடைகள் எமது வாழ்வில் செயலாற்றப்படும் பொழுது வருகின்ற பலன்கள் பரிசுத்த ஆவியின் கனிகள் எனப்படும். பரிசுத்த ஆவியின் கனிகள் பன்னிரெண்டாகும். அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம், தைரியம், தூய்மை, கற்பு என்பனவாகும்.

பரிசுத்த ஆவியானவர் எம் அனைவரையும் விசுவாச வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார். அவர் எம்மில் குடி கொண்டு எம்மை அவரது ஆலயமாக மாற்றுகின்றார். (1கொரி. 3:16) உண்மையின் வழியில் எம்மை நடத்திச் செல்கின்றார். பரிசுத்த ஆவியின் கொடைகளினால் எமது சக்தி விருத்தியடைவதால் உலகைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. மேற்கூறப்பட்ட கொடைகளுக்கு மேலதிகமாக இறைவாக்குரைத்தல், அந்நிய மொழிகளில் பேசுதல், போதித்தல், திருப்பணி, தலைமைத்துவம், இரக்கம் (உரோ. 12.6:8) எனும் கொடைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. யோவானின் நற்செய்திக்கேற்ப பரிசுத்த ஆவியின் கொடைகள், முடிவில்லா வாழ்வு, இறைவனைப் பற்றிய, அறிவு, கீழ்ப்படிதல், ஒருவரோடொருவரும் இறை வனோடும் உறவு கொள்தல் ஆகியனவற்றுக்குச் சமனாகின்றனது.

கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (5:22-23) பரிசுத்த ஆவியின் கனிகள் ஒன்பதாகும். கத்தோலிக்க திருச்சபை மறைப்போதகத்தில் எண் 1832இற் கேற்ப பன்னிரெண்டாகும். எனவே இவ்வாறாக 9 கனிகள் பன்னிரெண்டானது கத்தோலிக்க திருச்சபையின் மறைப் போதகத்தின் படியாகும். திருவிவிலியத்தின் படி கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கேற்ப இக் கனிகள் 12 இனங்காணப்பட்டுள்ளது. மிலான் ஆயரான புனித அம்புறோஸ் குறிப்பிட்டுள்ளவாறு பரிசுத்த ஆவியானவரின் கொடைகள் 7உம் எமக்கு திருமுழுக்கினால் தரப்படுகின்றன. இன்னும் சிலர் கூறுவதாவது இறைவனுடைய பணியை இவ்வுலகில் நிறைவேற்றுவதற்காக திருச்சபையில் வெவ்வேறு ஆட்களுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக பரிசுத்த ஆவியின் கொடைகள் அருளப்படுகின்றதென்பதாகும்.

மேற்கூறப்பட்ட காரணங்களை அடிப்படையாக வைத்து பரிசுத்த ஆவியின் கொடைகளும், கனிகளும், பலவுள என கூறுகின்றனர்.

பரிசுத்த ஆவியின் கொடைகள் பற்றி திருவிவிலியத்தில் முக்கிய சந்தர்ப்பங்கள் நான்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன ஏசாயா 11:2-3, 1கொரி 12:8-10, எபேசியர் 4:11-12, உரோ. 12:6-8 என்பனவாகும். எல்லாச்சந்தர்ப்பங்களிலும் விளக்கப்படும் ஒரு காரணம் உண்டு. அப்படியாயின் பரிசுத்த ஆவியின் கொடைகள் கிறிஸ்துவின் மறையுடலான திருச்சபையைக் கட்டியெழுப்பவே அருளப்படுகின்றன என்பதாகும்.

பரிசுத்த ஆவியின் கொடைகளுக்கும் எமது ஆற்றல்களுக்கும் இடையில் வேறுபாட்டைக் காணமுடிகின்றது. நாம் இறைவனுக்குச் சமமாகப் படைக்கப்பட்டிருப் பதனால் எமக்கு பல்வேறு ஆற்றல்கள் தரப்பட்டுள்ளன. பரிசுத்த ஆவியின் கொடைகள் எமக்கு உலகில் கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றுவதற்காகவே அருளப்பட்டுள்ளன.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0 :** இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** கிறிஸ்துவினால் ஊட்டம் பெறும் பொருட்டு அடிக் கடி நற்கருணையைப் பெற்றுக்கொள்வர்.

**செயற்பாடு 2.2 :** நற்கருணையை அடிக்கடி பெற்றுக்கொள்வதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வுக்குரிய ஊட்டத்தையும் சக்தியையும் பெறுவோம்.

**நேரம் :** 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- ❖ ''அவர்கள் அவரிடம் எங்களோடு தங்கும்'' (லூக் 24:27), ''வாழ்வு தரும் உணவு நானே'' எனும் இரு வாக்கியங்கள் எழுதப்பட்ட போஸ்டர் ஒன்று
- ❖ திருப்பலியின் சடங்குமுறை பற்றிய விபரங்கள் அடங்கிய தாள்கள்
- ❖ அப்ப இரசம் வரையப்பட்டு, விளக்கமளிக்கப் பட்டுள்ள போஸ்டர்.
- ❖ இணைப்பு 2.2.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு படி 2.2.1**

- நீங்கள் அடிக்கடி நற்கருணையைப் பெற்றுக் கொள்ள எவ்வாறு ஆயத்தம் செய்ய வேண்டும்? எனும் வினாவை வகுப்பிலே முன்வைக்குக.
- அதற்கான பதிலை எழுமாற்றாகப் பெற்றுக் கொள்க.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை வழிநடத்தவும்.

> ◆ நற்கருணையைப் பெறுமுன், ஒவ்வொருவரும் தமது உள்ளார்ந்த நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.
>
> ◆ திருப்பலியில் முழுமையாகப் பங்கேற்று, தமது உள்ளார்ந்த நிலையை ஆராய்ந்து நற்கருணை யைப் பெற ஆயத்தம் செய்ய வேண்டும்.
>
> ◆ ''எவரானது தகுதியற்ற நிலையில் நற் கருணையை பெற்றால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்.'' (1கொரி 11:27-34).
>
> ◆ தகுதியற்ற முறையிலே திவ்விய நற்கருணை யைப் பெற்ற அநேகர் வலுவற்றோராய் நோயுற் றோராகவும், மற்றும் சிலர் மரணத்தின் பிடியில் சிக்குண்டோராகவும் உள்ளனர்.

படி 2.2.2 :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.2.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 2.2.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ பல்வேறு பெயர்களைக் கொண்டுள்ளதால் அதன் சிறப்பு வெளிப்படுகின்றது.
◆ நற்கருணை வழியாக கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்ப்பையும், நினைவு கூருவதோடு அன்பின் அருளடையாளமாகவும், ஒன்றிணைப்பின் அடையாளமாகவும் இரக்கத்தின் எல்லையாகவும் நாம் ஏற்றுக் கொள்கிறோன்.
◆ அப்பமும் இரசமும் பரந்த அர்த்தத்தைக் கொண்ட அடையாளமாகும்.
◆ திருப்பலியின் பிரதான பகுதிகளாகிய இறை வார்த்தை வழிபாடு மற்றும் நற்கருணை வழிபாடு ஆகியன கிறிஸ்துவின் காலத்திலும் நடைமுறையில் இருந்தன.
◆ நற்கருணை என்பது முழுமையான அர்ப்பணிப்பாகும். அதன் மூலம் எமது உள்ளம் உடல் அல்லது எண்ணங்களின் செயற்பாடுகள் மற்றும் எமது வாழ்வை பிறருக்காக அர்ப்பணித்து செயலாற்றுவதற்கு முழுமையான ஈடுபாடுடன் அழைக்கப்பட்டிருப்பது ஆகும்.
◆ நற்கருணை பெற்றுக்கொள்ளும் நாம் பிறருக்காக பணிபுரியவும், அவர்களுக்காக தியாகத்துடன் அர்ப்பணிக்கவும் கிறிஸ்துவோடு ஒன்றிணைய வேண்டும்.
◆ திருப்பலியில் முழுமையாகவும் அர்த்தமுள்ள முறையிலும் பங்குபற்றி வணக்கத்துடன் நற்கருணையை உள்வாங்குவதால் நாம் ஊட்டம் பெறுகிறோம்.
◆ தூய ஆவியின் வல்லமையினாலும் கிறிஸ்துவின் வார்த்தையினாலும் இறைமகன் கிறிஸ்து எம்மோடிருக்கின்றார்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நற்கருணையைக் குறிக்கும் பல்வேறு பெயர்களை எழுதுவர்.
- அப்பமும் இரசமும் பரந்த அர்த்தத்தினைக் கொண்ட அடையாளம் என ஏற்றுக் கொள்வர்.
- அடிக்கடி திவ்விய நற்கருணையைப் பெற்று அருள் வாழ்வு வாழ்வர்.

## இணைப்பு 2.2.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

**குழு இல. 1-2**

- ''ஆண்டவரே எம்மோடு தங்கும்'' (லூக் 24:27) எனும் வாக்கியத்தை குழுக்களிடம் வழங்கவும்.
- நற்கருணை வழியாக எம்முள் வருகின்ற கிறிஸ்து எம்மில் நிலைத்திருக்கும் பொருட்டு நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதுபற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.
- உங்களது கருத்துக்களை ஒவ்வொன்றாக வரிசைப்படுத்துக.

**குழு இல. 3-4-5**

- ''வாழ்வு தரும் உணவு நானே'' எனும் கூற்றுக்கேற்ப திருப்பலி சடங்கு முறையையும் அதன் கொண்டாட்டத்தையும் பற்றிக் கற்கவும்.
- இக்குழு அருட்தந்தையர், மறையாசிரியர்கள் மறையாசிரியைகள் துறவற சகோதரிகள், சகோதர்கள், திருச்சபையின் மூத்த கத்தோலிக்கர்கள் ஆகியோரிடம் இருந்து இக்குழு தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- இத்தகவல்களை ஒவ்வொன்றாக வரிசைப்படுத்துக.

## 2.2.1 நற்கருணை

ஆரம்பகால கிறிஸ்தவ சபைகளில் நற்கருணைக் கொண்டாட்டம் இரு பெயர்களில் அழைக்கப்பட்டது.

'அப்பம் பிட்குதல்' (ரொட்டி உடைத்தல்), 'கிறிஸ்துவின் இறுதி இரவுணவு' என்பனவாகும்.

சில கிறிஸ்தவக் குழுக்களில் ரொட்டி உடைப்பதற்கு முன் ஒற்றுமையின் உணவு விருந்தொன்று இருந்தது. அது 'அகபே' என அழைக்கப்பட்டது.

எம்மாவுஸ் பயணத்தின்போது கிறிஸ்து, அப்பம் பிட்குதல் சில காரணங்களால் முக்கியத்துவமானது. அது ரொட்டி உடைத்தல் வழிபாட்டின் மாதிரியாகும். அதற்கேற்ப அவ்வழிபாடு இறை வார்த்தையை உரைத்தலும், ரொட்டி உடைத்தல் என இரு பகுதிகளிலடங்கியது. இரண்டாவது முறையாக இந்தச் சம்பவம் கிறிஸ்து உயிர்த்த பின்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதாகக் காட்டியுள்ளது.

மெல்கிசெதெக் முதன் முதலாக அப்பத்தையும் இரசத்தையும் நன்முறையில் ஒப்புக் கொடுத்தார். அவர் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகும்.

பழைய ஏற்பாட்டில் தேவாலயங்களின் புனித இடத்தில் விளக்குத் தண்டும், அப்பமும் வைக்கப்பட்டிருந்தன. ஒளியும் உணவும். நற்செய்தியாளரான யோவான் கிறிஸ்துவை உலகின் ஒளி (8:12) எனவும் உயிருள்ள அப்பம் (6) எனவும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

எபிரேயர் 9:2 கேற்ப அவ்விடத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு முதலாவது பகுதியில் விளக்குத் தண்டும், மேசையும் ஒப்புக்கொடுக்க ரொட்டியும் இருந்தது. இந்த அப்பங்கள் உணவுக்காகவல்ல. இதனை மத்தேயு 12:4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வப்பங்கள் ஒரு அடையாளமாகும். லேவி 24:7 கேற்ப ஒரு ஞாபகார்த்தமாகும். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய ரொட்டியை நீக்கி விட்டு புதிய ரொட்டி வைக்கப்படும். இவ்வாறாக 12 ரொட்டிகள் வைக்கப் பட்டிருக்கும். அவை இஸ்ராயேலின் 12 கோத்திரங்களின் அடையாளமாகும். அதற் கேற்ப பழைய ஏற்பாட்டில் அப்பம் மனிதருக்கு அடையாளமாக உள்ளது. புனித இடத்தில் இந்த அப்பம் வைக்கப்பட்டிருப்பது இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களை எப்போதும் ஞாபகப்படுத்துவதற்காகும்.

இவ்விடயங்கள் புதிய ஏற்பாட்டில் மாற்றப்பட்டுள்ளன புதிய ஏற்பாட்டில் அப்பத்தினுள் கிறிஸ்து வீற்றிருக்கின்றார் என்பதாகும். இவ் அப்பத்தை அவர்கள் காணும் போது கிறிஸ்துவை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கோதுமை நிலத்தின் கொழுப்பும் திராட்சை ரசம் நிலத்தின் இரத்தமாகவும் கருதப்படுகின்றது. இதற்கேற்ப கோதுமையினால் தயாரிக்கப்பட்ட அப்பமும், திராட்சைக் கொடியினால் தயாரிக்கப்பட்ட இரசமும், நிலத்தின் கொழுப்பு, இரத்தம் என அடையாளமாகின்றது.

கோதுமையும், திராட்சைக் கொடியையும் படைப்பதற்கு மனித உழைப்பு அவசியமாகின்றது. அவை 'பலன்' தரும் மரம் கொடியாகப் படைக்கப்படுவதில்லை பலனை உணவாகத் தயாரிப்பதற்கு மனித உழைப்பு அவசியமாகின்றது. எனவே கோதுமையும், திராட்சைக் கொடியும் பலன் தருவது இறைவனின் கொடையென்ப தோடு மனித உழைப்பின் பிரதிபலனாகவுமுள்ளது. ஆகவே அப்பமும், திராட்சை யினால் கிடைக்கப்பட்டதும், மனித உழைப்பினால் தயாரிக்கப்பட்ட எமது ஆன்மீக உணவாக (கொழுப்பு, இரத்தம்) மாற்றப்படுகின்றது. இதைத் தவிர கோதுமையும், திராட்சையும் நிலத்தின் முதற்பலன் எனக் கருதப்படுகின்றது.

அப்பமும் திராட்சை இரசமும் தயாரிப்பதற்கு செய்முறையும் சட்டமும் உண்டு. அதற்கேற்ப அவற்றுக்கு சுவைதரும் கலவைகள் கலப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. றோமன் கத்தோலிக்க இலத்தீன் வழிபாடுகளில் (இலங்கையில் உள்ளது இலத்தீன் வழிபாடாகும்.) புளிப்பில்லா அப்பம் உபயோகிக்கப்படுகின்றது. மேலைத் தேச வழிபாடுகளில் புளிப்பான அப்பம் உபயோகப்படுத்தப்படுகின்றது.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : மனித ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் அருளடையாளங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றுக் கொள்வர்.

**செயற்பாடு 2.3** : மனித ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் அருளடையாளங்கள் பற்றி ஆழ்ந்த முறையில் கற்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ வெள்ளை கடதாசி
- ❖ கடதாசிகளை சேகரிக்கும் குவளை
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரைகள்
- ❖ இணைப்பு 2.3.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.3.1**

- கடதாசித் துண்டுகளைப் பகிர்ந்தளித்து தாம் செய்த தவறுகளை அதிலே எழுதுவதற்கு இடமளிக்குக.
- அவ்வாறு தாம் எழுதிய கடதாசியை தாமே கிழித்து அளிக்கப்படும் குவளையினும் இடு வதற்கு இடமளிக்குக.
- அதனை தீயில் போடவோ அல்லது தகுந்த முறையில் அழிப்பதற்கோ இடமளிக்குக.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

- ◆ எம் ஒவ்வொருவரினாலும் தவறுகள் ஏற்படுவது மனித இயல்பினால் ஆகும்.
- ◆ அத்தகைய தவறுகளை தவிர்க்க வேண்டும்.
- ◆ தவறுகளை திருத்திக்கொள்வது இறைபண்பு ஆகும்.
- ◆ அதற்கு ஆழ்ந்த மனமாற்றம் அவசியம் ஆகும்.
- ◆ எத்தகைய தவறுகள் செய்தாலும் கிறிஸ்து எம்மை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் உள்ளார்.
- ◆ ஆழ்ந்த மனமாற்றத்தின் மூலம் நாம் மீண்டும் இறைவனோடு தொடர்பு கொள்கிறோம்.

**படி 2.3.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.3.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள்,டிமைதாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 2.3.3** :
- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் பல் வேறு பெயர்கள் உள்ளன.
◆ திருமுழுக்குப் பெற்ற பின்னரே இவ்வருளடை யாளம் வழங்கப்படும்.
◆ ஒப்புரவு அருளடையாளத்தால் மனமாற்றமும் வாழ்வில் திருப்பமும் ஏற்படுகின்றது.
◆ வெளிப்படையான மனமாற்றத்தைவிட உள் ளார்ந்த ரீதியிலான மனமாற்றமே முக்கிய மானது என்பதால் அதன் மூலம் எமது வாழ்வு முழுமையான மாற்றத்தை அடைகிறது.
◆ பல்வேறு பக்திமுயற்சிகளில் ஈடுபடும் போது மனமாற்றத்தினால் ஆன்மாவை உயிருள்ள தாக்க முடியும்.
◆ இறைவனிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் குருக்கள் மூலம் திருச்சபையுடன் மீண்டும் தொடர்பினை ஏற்படுத்துவதும் மனமாற்றத்தின் இன்றியமையாத அம்சமாகும்.
◆ சிதறுண்ட இறை, மனித உறவை மீண்டும் கட்டியெழுப்பதற்கு நற்செயல்களில் எப் பொழுதும் ஈடுபட வேண்டும்.
◆ ஒப்புரவின் செயற்பாட்டினை நிறைவேற்றப் பல் வேறு முறைகள் உள்ளன.
◆ மனம் வருந்தலின் மூலம் ஒப்புரவு அருளடை யாளத்தைப் பெற்றுக் கொள்வதை வாழ்வின் பழக்கமாகக் கொள்ள வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- மனமாற்றத்தினால் ஏற்படும் வாழ்வின் மாற்றங்கள் சிலவற்றைப் பெயரிடுவர்.
- இறைவனிடம் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதும் குருக்கள் மூலம் திருச்சபையுடன் மீண்டும் தொடர்பு கொள்வதும் மனமாற்றத்தின் இன்றியமையாத அம்சமாகும் என்பதை ஏற்றுக் கொள்வர்
- சிதறுண்ட இறை - மனித உறவை மீண்டும் கட்டியெழுப்பதற்காக ஆற்றக்கூடிய நற்செயல்களை எழுதிக்காட்டுவர்.
- தாம் குற்றம் புரிவதாக உணரும் வேளையில் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்வர்.

**இணைப்பு 2.3.1**

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒப்படைகளை உபயோகித்து குழு ஆய்வில் ஈடுபடுக.
- ஒப்புரவு அருளடையாளத்தை அறிமுகப்படுத்த உபயோகிக்கும் பெயர்களை ஆராய்க.
- இவ்வருளடையாளத்தின் மூலம் வெளிப்படையான மனமாற்றத்தை விட உள்ளார்ந்த, ரீதியிலான மனமாற்றமே முக்கியமானது ஏன்?
- 'ஒப்புரவு அருளடையாளம் வழியாக எமது வாழ்வு முழுமையான மாற்றம் அடைகின்றது'. இதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களாயின் உங்களது கருத்துக்களை கூறுக.
- மனமாற்றத்தின் மூலம் எமது வாழ்வில் மாற்றம் ஏற்படுவதை எடுத்துக்காட்ட உதாரணங்கள் சிலவற்றை எழுதுக.
- மனமாற்றதினால் ஆன்மாவை உயிருள்ள தாக்கக்கூடிய வழிமுறைகள் சிலவற்றை எழுதிக் காட்டுக.
- மனமாற்ற செயற்பாட்டின் கட்டாய அம்சங்கள் இரண்டை எழுதுக.
- பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக நீர் குருவிடம் செல்ல வேண்டுமாவென எண்ணுவீராயின், இதற்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்களை முன்வைக்குக.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.4-5** : கிறிஸ்தவ குடும்பத்திலே ஒற்றுமையையும் புனிதத்துவத்தையும் உணர்ந்து கொள்வர்.

திருமணம் பற்றிய கிறிஸ்தவ மனப்பாங்குகளை விளங்கிக் கொள்வர்

**செயற்பாடு 2.4-5** : இன்றைய உலகில் கிறிஸ்தவ திருமணம் எனும் ஒன்றிப்பின் புனிதத்துவத்தை விளங்கிக் கொள்வோம்.

**நேரம்** : 120 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ திருமண வாக்குறுதிகள் எழுதப்பட்ட பிரிஸ்டல் அட்டை ஒன்று
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரைகள் எழுதப்பட்ட தாள்கள்
- ❖ இணைப்பு 2.4-5.1இல் உள்ள தகவற்கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.4-5.1**

- திருமண வாக்குறுதிகள் எழுதப்பட்ட பிரிஸ்டல் அட்டைகளைக் காட்சிப்படுத்துக.
- நீங்கள் அறிந்த குடும்பங்களில் மேற்கூறப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் / நிறைவேற்றப் படாத விதம் பற்றிய கருத்துக்களை முன்வைக்குக.
- கீழ்காணும் கருத்துக்கள் வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

> ◆ மேற்கூறப்பட்ட உடன்படிக்கை நித்தியமான ஒப்பந்தம் ஆகும்.
> ◆ இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப் பானாக.
> ◆ இன்றைய சமுதாயத்தில் குடும்ப ஒற்றுமை பல்வேறு காரணிகளால் சீர்குலைகின்றது.
> ◆ செபம் மற்றும் அர்ப்பணிப்பு போன்ற கிறிஸ்தவ பண்புகள் மூலம் குடும்ப வாழ்வின் பல்வேறு சவால்களை வெற்றிக்கொள்ளலாம்.

**படி 2.4-5.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.4-5.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனாஎன்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 2.4-5.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ திருமண வாழ்வை உருவாக்கியவர் இறைவன் ஆகும்.

◆ ஒருவரொருவரிடையே ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றமுடியாத நித்திய அன்னியோன்ய ஒப்பந் தத்தில் நிலையான அன்பும், திருமண வாழ்வும், தங்கியுள்ளன.

◆ அன்னியோன்ய அன்பு மற்றும் குழந்தை செல்வங்களால் சமூகத்திற்கு ஊட்டமளிப்பது ஆகியவை திருமணத்தின் நோக்கம் ஆகும்.

◆ பிள்ளைகளை அன்புடன் பராமரித்து, பாதுகாப் பது பெற்றோரின் கடமையாகும்

◆ கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள அன்பின் அடையாளமாக கிறிஸ்தவ குடும்பம் அன்பில் நிறைந்து காணப்படும்.

◆ கிறிஸ்தவதிருமணம் ஓர் அருளடையாளமாகும். எனவே அதைப் பெற்றுக்கொண்ட இருவரும் ஒருவரையொருவர் பிரியாதிருக்க வேண்டும்.

◆ திருமண வாழ்வை ஊட்டம் பெறச் செய்ய திருச்சபையில் பல சேவைகள் உள்ளன.

◆ திருமண வாழ்வில் நுழைவதற்குரிய விசேட திருவழிபாட்டு முறையையும் சடங்குகளையும் தாய் திருச்சபை கொண்டுள்ளது.

◆ திருமணம் செய்யும் இருவரும் ஒருவருக்கொரு வர் கூறிக்கொள்ளும் வாக்குறுதிகள் நித்திய மான, புனிதமான ஒன்றிப்பில் இணைப்பதும் ஆகும்.

◆ திருமணம் செய்யும் இருவரும் ஒருவரையொரு வர் அன்போடும், மரியாதையோடும் பாதுகாக்க வேண்டும்.

◆ இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்கலா காது.

◆ குடும்ப வாழ்வை சீர்குலைப்பதற்கு ஏதுவான பல காரணிகள் இன்றைய சமுதாயத்தில் உள்ளன.

◆ செபம், அர்ப்பணிப்பு போன்ற கிறிஸ்தவ பண்புகள் மூலம் குடும்ப வாழ்வின் பல்வித சவால்களை வெற்றிகொள்ளலாம்.

- சமுதாயத்திலும் திருச்சபையிலும் ஒவ்வொரு மனிதனதும் நற்பண்புகள் சிறந்த குடும்பத்திலேயே தங்கியுள்ளது.
- குடும்ப வாழ்வை சீர்குலைக்கும் பல்வேறு காரணிகள் இன்றைய சமுதாயத்தில் உள்ளன. உதாரணம் :- பிழையான பாலியல் உறவு முறையற்ற தொடர்புகள் கருக்கலைப்பு
- குடும்ப வாழ்வுக்குரிய மாண்புகளையும் அதன் பெறுமதிகளையும் பாதுகாப்பதன் பொருட்டு அதற்கான வழிகாட்டலும் ஒத்துழைப்பும் திருச்சபை வழங்குகின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கிறிஸ்தவ குடும்பத்தை சீர்குலைப்பதற்கு ஏதுவான காரணிகளை எழுதுவர்.
- திருமண வாழ்வின் மாண்புகளையும் அதன் பெறுமதிகளையும் பாதுகாப்பதற்கான வழிகாட்டலும் ஒத்துழைப்பும் திருச்சபையால் வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்வர்.
- கிறிஸ்தவ குடும்பத்திற்கு வலுவூட்டும் பொறுப்புக்களையும் கடமைகளையும் கோவைப்படுத்துவர்.
- நாசரேத்தில் திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கொள்வர்.

## இணைப்பு 2.4-5.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

**கீழ்காணும் பயிற்சிகளை எழுதுக.**

- நவீன சமூகத்திலே தம்பதிகளை கிறிஸ்தவ திருமணத்திற்கு ஆயத்தமாக்கும் விதத்தை விபரிக்குக.
- குடும்ப வாழ்வை சீர்குலைக்கும் பல்வேறு சக்திகள் எவை?
- குடும்ப வாழ்வுக்கு ஊட்டமளிக்கும் விதமாக திருச்சபையினால் ஆற்றப்படுகின்ற பல்வேறு பணிகளை ஆராய்ந்து பட்டியல்படுத்துக.
- கிறிஸ்தவ திருமணத்தில் சமயச் சடங்குகள் தொடர்புறும் விதத்தை விளக்குக.
- குடும்ப இணைப்பிலே ஒவ்வொருவரதும் பொறுப்புக்களையும் கடமைகளையும் பட்டியல் படுத்துக.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடை யாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : இன்றைய உலகில் குருத்துவ வாழ்வின் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 2.6** : கிறிஸ்தவ அழைப்பாகிய குருத்துவத்தின் பணிகளையும் பொறுப்புக்களையும் விளங்கிக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ புதிய ஏற்பாடு குருத்துவம் வழங்கப்படுவதை (Ordination) குறிக்கும் படங்கள்.
- ❖ குருத்துவப் பணிகள் எழுதப்பட்ட போஸ்டர்.
- ❖ குருத்துவம் வழங்கப்படும் சடங்குமுறை
- ❖ மத்தியாஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவம்
- ❖ திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்ட சம்பவம்.
- ❖ இணைப்பு 2.6.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 2.6.1**

- மத்தியாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது மற்றும் திருத் தொண்டர்கள் நியமிக்கப்பட்ட சம்பவத்தை திருத்தூதர் பணியை முன்வைத்து கலந்துரை யாடுக.
- நேரடிக் கலந்துரையாடலொன்றை ஒழுங்கு செய்வது பற்றிய கருத்துக்களைக் கேட்டறிக. அதன்கீழ்.
  1. கலந்துரையாடலை ஆசிரியர் ஆரம்பித்து வைத்தல்
  2. கலந்துரையாடல் நடைபெறும் தினம், நேரம், தலைப்பு பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டல்
  3. பிரதம விருந்தினர் (துறவறத்தினர் ஒருவர்) பற்றி மாணவர்களிடம் வினவுதல்.
- அன்றைய நிகழ்ச்சியை நடத்துவது தொடர்பான
  1. ஒழுங்குகள் (வரவேற்பு, நன்றியுரை)
  2. பணிகளைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்புக்களை ஒப்படைத்தல்

  போன்ற விடயங்களை மாணவர்களோடு கலந் துரையாடுதல்
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துதல்.

◆ பிரதம விருந்தினரை அழைக்கும் போது முன்கூட்டியே அவருக்கு அறிவிக்க வேண்டும்.
◆ கலந்துரையாடல் பற்றி அவருக்கு அறிவிக்க வேண்டும்.
◆ குறித்த நேரப்படி செயலாற்ற வேண்டியது முக்கியமாகும்.

படி 2.6.2 :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.6.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 2.6.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ குருக்களின் பணியானது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இணைப்பாளராக இருத்தல்
◆ கிறிஸ்துவே ஏக குரு ஏனையோர் அனைவரும் பணியாளர்கள் என்பதாகும்.
◆ கிறிஸ்துவின் குருத்துவத்தோடு தொடர்புறும் பல்வேறு முறைகள்
1. பணிக் குருத்துவம்
2. குருத்துவம்
என்பனவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தென் பதாகும்.
◆ குருக்களும் மனிதர்கள்தான். எனவே அவர் களிலும் பெலவீனம் காணப்படலாம். ஆகவே நாம் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்.
◆ குருத்துவம் 3 முக்கிய நிலைகளைக் கொண்ட தும் அதற்குரிய பணிகளும் உள்ளதென்ப தாகும்.
◆ குருத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகுதிகள் சில முழுமையாக எழுதப்பட வேண்டும்.
◆ குருக்களுக்கு விசேட அருள் உண்டென்ப தாகும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- குருக்களுக்கே உரிய பணிகளைப் பெயரிடுவர்.
- கிறிஸ்துவே ஏக குரு என்பதையும் ஏனையோர் அனைவரும அவரது பணியாளரகள என்பதையும் ஏற்பர்.
  1. ஆயர்கள்
  2. குருக்கள்
  3. திருத்தொண்டர்கள் ஆகிய நிலைக்குரிய பணிகளை வெவ்வேறாக கோவைப் படுத்துவர்.
- குருத்துவத்தின் விசேட கொடைகளைக் குறிப்பிடுவர்.
- குருத்துவத்திற்காக அழைப்பு பெற்றவர்களுக்காகச் செயற்படுவர்

## இணைப்பு 2.6.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- கீழ்காணும் வினாக்கள் கருத்துக்களை குழுக்களிடம் பகிர்ந்தளித்து குழு ஆய்வை நடத்துக.
  1. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான இணைப்பாளராக இருக்கும் குருக்களின் பணிகள்
  2. கிறிஸ்துவின் குருத்துவத்திலே நாம் பங்கு கொள்ளும் முறை
  3. ஆயர்கள், குருக்கள் மற்றும் திருத்தொண்டர்கள் ஆகியோர்க்குரிய பணிகள் யாவை?
  4. நான் குருத்துவம் பெற முடியுமா?

## 2.6.1 பணிக்குருத்துவமும் பொதுக்குருத்துவமும்

1546 - 7 திருவெளிப்பாடு 1 : 6 இல் குறிப்பிடப்படுவதாவது '' ஆட்சியுரிமை பெற்றவர்களாக, அதாவது நம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக நம்மை ஏற்படுத்தினார்." இதற்கேற்ப நாம் அனைவரும் குருக்களாவோம். தனது அழைப்பிற்கேற்றவாறு கிறிஸ்துவினுடைய அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்ட, பொது நிலையினர் தமது குருத்துவப் பணியை நிறைவேற்றுவர். திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளங்கள் வழியாக பொது நிலையினர் குருத்துவ அபிஷேகம் பெற்றுள்ளனர். அவர்கள் விசுவாசம், நம்பிக்கை, இறையன்பில் வாழ்வதோடு தமது குருத்துவ வாழ்வையும் வாழ்வர்.

பணிக்குருத்துவம் பெற்றவர்களாக ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம். பணிக்குருத்துவம் பெற்றவர்களும் மனிதர்களாவர். அவர்களது பெலவீனங்களையும் காணலாம். எனினும் அவர்களது பெலவீனத்தினால் அவர்கள் ஆற்றும் பணியின் பலன் குறைவடைந்தோ அல்லது குறையின்றியோ இல்லை. தூய ஆவியின் கொடைகளை யாராலும் தடுக்க முடியாது.

| | |
|---|---|
| ஆயர் | - பணிக்குருத்துவ முழுமை பெற்றவர் |
| குருக்கள் | - ஆயர்களுக்கு உதவி செய்பவர்கள் |
| திருத்தொண்டர்கள் | - பணியாற்றுபவர்கள் |

**தேவ அழைத்தலுக்காகச் செபம்**

''தமது அறுவடைக்கு வேளையாட்களை அனுப்பும் படி அறுவடையின் இறைவனை மன்றாடுங்கள்'' என்று எங்களுக்குப் படிப்பித்தருளிய திவ்விய இயேசுவே! உமது திரு ஊழியத்தினால் ஆன்மாக்களுக்கு மீட்பையும், உமது பிதாவுக்கு மகிமையையும் கொண்டுவரக் கூடிய அனேக பரிசுத்த குருக்கள், துறவிகள், கன்னியர்களை உமது திருச்சபையிலும் சிறப்பாக எமது பங்கிலும் (குடும்பத்திலும்) பிறப்பித்தருள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

இறைவா இப்போது உமக்கு முன்பாக முழந்தாட்படியிட்டு இருக்கும் எங்கள் மத்தியிலிருந்தும் சிலரைத் தெரிந்தெடுக்க நீர் சித்தமாயிருப்பின் நாங்கள் நித்தியத்துக்கும் எங்கள் முழு இருதயத்தோடும், நன்றியறிதலோடும் உம்மைப் போற்றிப் புகழ்வோம்.

ஆமென்.

**குருக்களுக்காகச் செபம்**

நித்திய குருவாகிய கிறிஸ்துவே உமது பணியாளராகிய குருக்களை உமது பாதுகாப்பில் வைத்து அவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரிடா வண்ணம் காப்பாற்றியருளும்.

நாள் தோறும் உமது திரு உடலைத் தொடுகின்றன. அவர்களது பரிசுத்த கரங்களும் உமது திரு இரத்தத்தால் சிவந்த அவர்களது உதடுகளும் தூய்மை கெடாதவாறு காப்பாற்றியருளும். குருத்துவ முத்திரையிடப்பட்ட அவர்களது இருதயத்தை உமது புனித நேசத்தால் நிரப்பி விண்ணுலகிற்குரியதாகச் செய்து இவ்வுலகைச் சார்ந்தவற்றிலுள்ள பற்றினின்றும் காத்தருளும். அவர்களது பணியின் பயனைப் பெருக்கியருளும். அவர்கள் பணிபுரியும் ஆன்மாக்கள் இவ்வுலகில் அவர்களது ஆறுதலாகவும், இன்பமாகவும் விண்ணுலகில் அவர்களது அழகான வெற்றி முடியாகவும் திகழ்வார்களாக ஆமென்.

**இலங்கையில் பணிக்குருத்துவத்துக்கான பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்**

கொழும்பு மறை மாவட்டம்
கண்டி மறை மாவட்டம்
காலி மறை மாவட்டம்
யாழ்ப்பாண மறை மாவட்டம்
திருகோணமலை மறை மாவட்டம்
பதுளை மறை மாவட்டம்
மன்னார் மறை மாவட்டம்
அனுராதபுர மறை மாவட்டம்
குருநாகல் மறை மாவட்டம்
இரத்தினபுரி மறை மாவட்டம்

இலங்கையின் தேசிய குருமடம் அம்பிட்டிய, கண்டியில் உள்ளது.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.7** : துறவற வாழ்வின் மூலம் முழுமையாகத் தம்மை இறைவனிடம் அர்ப்பணிப்பர்.

**செயற்பாடு 2.7** : துறவற வாழ்வில் பிரதானமாக எதிர்பாரக்கின்ற வற்றை இனம் காண்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ தரம் 11 இல் செயற்பாடு 1.8
- ❖ துறவற சபைகள் பற்றிய புத்தகங்கள், அட்டைகள்
- ❖ துறவற சபைகளின் பிரிவு மற்றும் அதன் விசேட பணிகள் பற்றி எழுதப்பட்ட போஸ்டர்கள்
- ❖ துறவற வார்த்தைப்பாடுகள் அடங்கிய தாள்கள்
- ❖ ஒப்படை அட்டைகள்
- ❖ இணைப்பு 2.7.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.7.1**

- இலங்கைச் சமூகத்தில் தற்போதுள்ள துறவற சபைகள் மற்றும் அதன் சிறப்புப் பணிகளைக் குறிக்கும் போஸ்டர்களை முன்வைக்குக.
- இதற்காக தரம் 11இல் செயற்பாடு 1.8ஐ துணை யாகக் கொள்க.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ தரம் 11 இல் செயற்பாடு 1.8ல் உள்ளவாறு இலங்கையில் 4 பிரதான துறவற சபைகள் இருந்தன
> ◆ இத்துறவற சபைகள் மட்டுமல்லாது இலங்கை யில் பணியாற்றுகின்ற துறவற சபைகளும் உள்ளன.
> ◆ இவ்வாறான துறவற சபைகள் இலங்கையில் பல்வேறுபட்ட தூதுப் பணிகளில் ஈடுபடுகின்றன.
> ◆ தூதுப் பணிகள் பலவகையாயினும் அவற்றின் ஒரேநோக்கமாக அமைவது இறையரசை அறிவிப்பதாகும்.

**படி 2.7.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.7.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 2.7.3 :
- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்குமபடி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ துறவற வாழ்வு என்பது விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவிப்பதாகும்.
◆ துறவற வாழ்விலே ஒருமைப்பாட்டையும், அனைத்தையும் பொதுவாக வைத்திருத்தலை யும் காணக்கூடியதாகவுள்ளது.
◆ துறவற வாழ்வின் எதிர்ப்பார்ப்பானது கிறிஸ்தவ வாழ்வின் முழுமை என்பதாகும்.
◆ ஒவ்வொரு துறவற சபைக்கும் பாரம்பரிய சிறப்புப் பணிகள் உள்ளன.
◆ துறவற வாழ்வில் நுழைவதற்கு வார்த்தைப்பாடு கள் கொடுக்க வேண்டும்.
◆ துறவற வாழ்வில் நுழையும் ஒவ்வொருவரும் முழுமையடைவதற்காக தமக்கு உரித்தான துறவற சபையின் பாரம்பரிய வழிகாட்டல் களைப் பின்பற்ற வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இலங்கையில் தற்போதுள்ள துறவற சபைகளைப் பெயரிடுவர்.
- துறவற சபைகளின் மறைப்பணிகள் பல்வேறாயினும் இறையரசை அறிவிப்பதே அவற்றின் ஒரே நோக்கமென்பதை ஏற்றுக்கொள்வர்
- பல்வேறு துறவற சபைகளுக்கும் உரித்தான விசேட பணிகளை ஆராய்வர்.
- துறவற சகோதர, சகோதரிகளின் அன்றாட வாழ்விலும் பணிகளிலும் உதவுவர்.

## இணைப்பு 2.7.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- இவ்வினாக்களுக்கு விடைகளை எழுதுக.

1. துறவற வாழ்வின் பிரதான எதிர்பார்ப்பு யாது?
2. துறவற வாழ்வின் காணக்கூடிய 2 பண்புகளை எழுதுக.
3. துறவற வாழ்வின் வார்த்தைப்பாடுகளை எழுதிக்காட்டுக.
4. உங்களது மறைமாவட்டத்திலே தற்போது செயலாற்றி வரும் துறவற சபைகளையும் அச்சபையினர் ஆற்றிவரும் பணிகளையும் குறிக்கும் அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

### 2.7.1 துறவற வாழ்வின் மூலம் முழுமையாகத் தம்மை அர்ப்பணிப்பர்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் சபையிலே புதியதொரு வாழ்க்கை முறை ஆரம்பமாகியது. அது தவ வாழ்வாகும். சில பொதுநிலையினர் வீடுகளை விட்டு பாலைவனங்களில் தவத்திலும், செபத்திலும் ஆழ்ந்து வாழ்வதை ஆரம்பித்தனர். எனினும் அது தனித்து வாழ்ந்த வாழ்வாகும். சமூகமாக தவ வாழ்வை ஆரம்பித்தவர் பக்கோமியஸ் அடிகளாராகும். (கி.பி 290-346) தவ வாழ்வை விரும்பிய வர்கள் அவரிடம் சென்றமையால் தவ மடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவர் வாழ்ந்த காலத்தில் ஆண்களுக்காக ஒன்பது மடங்களும், பெண்களுக்காக இரண்டு கன்னியர் மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டளவில் பாலைவனங்களில் தவ வாழ்வு நிறுத்தப்பட்டு நகரங்களை நோக்கி வரத்தொடங்கிய மையால் கன்னியர் மடங்கள் உண்டாகத் தொடங்கின. இதன்பின் தவமுறை முன்னரை விட மெருகூட்டப்பட்டது.

தவமுறைக்கு ஒழுக்கவிதிகளையும், சட்டவிதிகளையும் புனித பசில் உருவாக்கினார். இச்சட்ட விதிகளில் செபவாழ்வு, முதல்வருக்குக் கீழ்ப்படிதல், கற்புள்ள வாழ்வு, ஏழைகளுக்குப் பணிபுரிதல், மறையைக்கற்றல், மறைநூல்களை உபயோகித் தல், நேர அட்டவணையைப் பின்பற்றுதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. நவீன துறவற வாழ்வில் இணைந்து கொள்ள மூன்று வார்த்தைப்பாடுகள் அதாவது கற்பு, கீழ்ப்படிவு, ஏழ்மை போன்றன தவ வாழ்வின் சட்டவிதிகளில் அடங்கியுள்ளன.

மேலை நாடுகளில் தவவாழ்வானது புனித பெனடிக்கினால் ஆரம்பிக்கப்பட்டது. பெனடிக் துறவறசபை மேலும் மெருகூட்டப்பட்டது. அவர் எழுதிய தவ வாழ்வின் யாப்பு இன்று வரை தவவாழ்க்கைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரை துறவற வாழ்வாக தவ வாழ்வையே காணக் கூடியதாயிருந்தது. தபோதனர்கள் உலக வாழ்விலிருந்து தம்மை விடுத்துக்கொண்டு தனியாகவோ அல்லது சமூகமாகவோ தமது மீட்புக்காக வாழ ஆரம்பித்தனர். படிப்படியாக கல்வி, நூல்கள் எழுதுதல், சமூகப்பணி போன்றவற்றில் ஈடுபட்டனர். எவ்வாறெனினும் தபவாழ்வானது மடங்களில் வாழும் வாழ்வாக இருந்தது. பதின் மூன்றாம் நூற்றாண்டில் டொமினிக்கன், பிரான்சிஸ்கன் துறவற சபைகள் ஏற்படுத்தப் பட்டமையால் துறவற வாழ்வில் புதியதொரு திருப்பம் உதயமானது. யாசக துறவறசபை யென அறிமுகமான (Mendicant orders) இச்சபைகளின் அங்கத்தவர்கள் தமது துறவற சபைகளில் வாழுகின்ற அதேவேளை மறையுரையாற்றல், போன்றவற்றுக்காக வெளியே செல்கின்ற ஒரு கூட்டமாகவும் இருந்தனர்.

தவம் அல்லது தவ சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்காத செயற்பாடுள்ள துறவற சபைகள் பதினைந்தாம் நூற்றாண்டளவில் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறான முதல் துறவற சபைகளில் பிரான்சிஸ் சாமோஸ் அடிகளார் விசன்தி த பாவுலா அடிகளார் நிறுவிய துறவற சபைகளும் அடங்கும். முழுமையான முதலாவது செயற்பாடுள்ள துறவற சபைகள் விசன்தி த பாவுலா அடிகளாரினால் ஆரம்பிக்கப்பட்ட இரக்கத்தின் சகோதரிகளின் துறவற சபையாகும்.

தவம் அல்லது செயற்பாடுள்ள துறவற சபைகள் ஆற்றிய பணிகளில் சமனான, சமனற்ற தன்மைகள் இருந்தன. எல்லாத் துறவற சபைகளுக்கும் நவத்துறவு கட்டாயமாகும் (Novitiate). நவத் துறவி பின் துறவற வாழ்வில் நுழைவதற்குத் துறவற வார்த்தைப்பாடுகள் கொடுப்பர். கற்பு, கீழ்ப்படிவு, ஏழ்மை போன்றன வார்த்தைப் பாடுகளில் அடங்குவனவாகும். முதலாவது வருடத்தில் அல்லது மூன்றாவது வருடங் களுக்கு தற்காலிகமான வார்த்தைப்பாடுகள் கொடுப்பதோடு, மூன்று வருடங்களுக்கு அல்லது அவ்வவ் துறவற சபைகளுக்கேற்றவாறு இதற்கு சில வருடங்களுக்குப்

(உதாரணமாக 5 வருடங்கள்) பின் நித்திய வார்த்தைப்பாடு கொடுப்பதோடு துறவற வாழ்வில் நிரந்தரமாக்கப்படுகின்றனர். எளிமை வாழ்வும் எல்லாத் துறவற சபை களினதும் கட்டாயமான அம்சமாகும்.

சமனற்ற தன்மைகளின் மத்தியிலும் துறவறசபைகள் வழியாக செய்யும் பணிகளும், யாப்புகளும், உடை, ஆன்மீக வழிகளும் காணக்கூடியதாக உள்ளன. இவ்வாறே துறவற வாழ்வு தவ அல்லது செயற்பாடுள்ள துறவற சபைகளாகும். யாராவது ஒருவரால் துறவறசபை ஆரம்பிக்கப்படுவது ஏதேனும் ஒரு விசேட பணியினாலாகும். அவற்றுள் கல்வி, மறைக்கற்பித்தல், சுகாதாரம் போன்றவற்றைக் கூறிப்பிடலாம். யாப்பு தயாரிப்பது செய்யும் பணி அல்லது கரிஸ்மாவுக்கு (விசேட ஆற்றல்) (Charisma) ஏற்பவாகும். உடை துறவற சபை தொடங்கிய காலம், நாடு என்பனவற்றுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்படும்.

துறவிகளின் நாட்டிற்கேற்ப துறவற உடைகளை மாற்றிக் கொள்வதற்கு சபையினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சில துறவற சபைகளில் தங்களுடைய ஆன்மீக முறைகள் நிலவுவதோடு ஏனைய துறவற சபைகள் பொதுவான துறவற வாழ்வைச் சேர்ந்த ஆன்மீக முறைகளைப் பின்பற்றுவர்.

### 2.7.1 இன்று இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

**துறவற குழுக்கள் சபைகள் சில**

1. **ஆசீர்வாதப்பர் சபை (OSB)**

   **பணி** : செபம், சகோதரத்துவம், கல்விப்பணி, மேய்ப்புப்பணி, வழியாக இறைவனை மகிமைப்படுத்தல்.

2. **நற்கருணை நாதர் சபை (SSS)**

   **பணி** : பொது நிலையினருடன் இணைந்து நற்கருணையை அறிக்கையிட்டு, கொண்டாடி வாழ்தல், பங்குப்பணி, செபவாழ்வு, திருப்பலி வாழ்வு வழியாக இறைவனைப் புகழும் இறை மக்களை உருவாக்குதல்.

3. **பிரான்சிஸ்கன் கப்புச்சின்சபை (OFM - CAP)**

   **பணி** : எளிமை வாழ்வின் வழி, நீதி, அமைதி, மகிழ்ச்சியை வளர்த்தல்

4. **இயேசு சபை (SJ)**

   **பணி** : கல்விப்பணி, பங்குப்பணி, சமூக உளநலப்பணி, தியானங்கள், வழங்குதல், இளையோர் பயிற்சி

5. **அமல மரித்தியாகிகள் சபை (OMI)**

   **பணி** : ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பு, தியானங்கள் வழங்குதல், பங்குப்பணி, ஆன்மீக ஆலோசனைப் பணி, கல்விப்பணி, லக்றிவி

6. **பிரான்சிஸ்கன் சபை (OFM)**

   **பணி** : கல்விப்பணி, பங்குப்பணி

7. **இரட்சகர் சபை (CSSR)**

   **பணி** : மறை போதகப் பணி, பங்குப்பணி, சமூகப்பணி, தியானங்கள் வழங்குதல்.

8. **சலேசியன் சபை (SDB)**

   **பணி** : இளைஞர் நலப்பணி

9. **கிளரேசியன் சபை (CMF)**

**பணி** : மறைபரப்புப் பணி, கல்விப்பணி, கத்தோலிக்க வெளியீடுகள்.

10. **செபமாலைதாசர் சபை (CR)**

**பணி** : செபம், பரிகாரம், நற்கருணைமைய வாழ்வு, மடவாழ்வு

11. **சொமஸ்கன் சபை**

**பணி** : கைவிடப்பட்டவர்கள் அநாதைகள் பராமரிப்பு

12. **திருவுளச் சபை (IVD)**

**பணி** : பொது நிலை ஆன்மீக ஊக்குவிப்பு. மறைபரப்பு, உலகுசார் அர்ப்பணவாழ்வு

13. **பிரான்சிஸ்கன் மூன்றாம் நிலைச்சபை (TOR)**

**பணி** : கல்வி, அநாதைகள் பராமரிப்பு, மேய்ப்புப்பணி, பங்குப்பணி

14. **டொமினிக்கன் சபை (OP)**

**பணி** : கல்விப்பணி, பங்குப்பணி, சமூகப்பணி

**துறவற சகோதரர்கள் சபைகள் சில**

1. **அன்புச் சகோதரர்கள் (FC)**

**பணி** : கல்வி, சமூகப்பணி

2. **பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர்கள் (CMSF)**

**பணி** : தொடக்கநிலை மறைதூதுப்பணி, அநாதை இல்லங்கள்

3. **மாறிஸ்ட் சகோதரர்கள் (FMS)**

**பணி** : கிறிஸ்துவை அறிவிக்கவும், அன்பு செய்யவும், கல்விப்பணி, இளையோருக்கான சுயதொழிற் கல்வி

4. **டிலாசால் சகோதரர்கள் (FSC)**

**பணி** : கல்விப்பணி, இளைஞர் உருவாக்கம்.

**துறவற சகோதரிகள் சபைகள் சில**

1. **அப்போஸ்தலிக்க கார்மேல் சபை (AC)**

**பணி** : கல்விப்பணி, சமூகப்பணி, முதியோர் பராமரிப்பு

2. **அன்னையின் அருளும் இரக்கமும் கொண்ட புனித ஆசீர்வாதப்பர் கன்னியர் சபை (OSB)**

**பணி** : முதியோர் இல்லம்

3. **அருள் நிறை கன்னிமரி சபை (BV)**

**பணி** : இளைஞர் பணி

4. **இயேசுமரியின் அன்பின் சகோதரிகள் (FCJM)**

**பணி** : கல்வி, நோயாளர் பராமரிப்பு

5. **சிலுவையின் கன்னியர் (SCC)**

**பணி** : மறைபணி, கல்வி, நோயாளர் பராமரிப்பு

6. **திரு இருதய அன்னையின் கன்னியர் (N ♥S)**

**பணி** : ஏழைகள் மேம்பாடு

7. **டொமினிக்கன் கன்னியர் - மால்டா (OP)**

**பணி** : மறைபணி, சமூகப்பணி

8. **புனித கத்தரின் சியன்னாயின் டொமினிக்கன் கன்னியர் (OP)**

**பணி** : இளைஞர், நோயாளர்பணி

9. **பிரான்சிஸ்கன் மரியாயின் மறைபரப்புச்சபை (FMM)**

**பணி** : மறைதூதுப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, அநாதைகள் பராமரிப்பு

10. **நல்லாயன் கன்னியர் சபை (RGS)**

**பணி** : கல்விப்பணி, இளம் பெண்கள் வளர்ச்சியும் பராமரிப்பும், அநாதைகள், முதியோர் இல்லங்கள், பங்குப்பணி

11. **தூய தூதர்கள் கன்னியர் சபை (HA)**

**பணி** : மறைக்கல்வி, கல்வி, அநாதை இல்லம், பங்குப்பணி

12. **திருச்சிலுவைக்கன்னியர் (HC)**

**பணி** :: மருத்துவப்பணி, கல்வி, சமூகப்பணி, பங்குப்பணி

13. **திருக்குடும்பக் கன்னியர் சபை (HF)**

**பணி** : கல்வி, சமூகப்பணி, சிறுவர், இளைஞர், குடும்பப்பணி, திருத் தூதுப்பணி, பங்குப்பணி

14. **ஏழைகளின் சிறிய சகோதரிகள் (LSP)**

**பணி** :: வயோதிபர், ஏழைகள் பராமரிப்பு

15. **அன்னை திரேசாவின் அன்புக் கன்னியர் (MC)**

**பணி** : :ஏழைகள், கைவிடப்பட்டோர் அநாதைகள் பராமரிப்பு

16. **சதா சகாய அன்னை சகோதரிகள் (PH)**

**பணி** : கேள்விப் புலனற்றோர் பணி, கல்விப்பணி, சமூகப்பணி, இளையோர் வழிநடத்தல்.

17. **இறை பராமரிப்புச் சகோதரிகள்**

**பணி** : :நோயாளர் பராமரிப்பு, மறைபணி, பங்குப்பணி

18. **இரட்சகர் சபை (SDS)**

**பணி** : மறைபணி, சமூகப்பணி, மருத்துவப்பணி

19. **அமல மரியாயின் சபை (SMI)**

**பணி** : கல்வி, மறைக்கவ்வி

20. **ஆசீர்வாதப்பர் தியான கன்னியர்சபை (OSB)**

**பணி** : ஆழ் நிலைத்தியான வாழ்வு

21. **கார்மேல் மடவாச கன்னியர் சபை (OCD)**

**பணி**: ஆழ் நிலைத்தியான வாழ்வு

22. **ஏழைகளின் கிளாரம்மாள் கன்னியர் சபை**

**பணி** : ஆழ் நிலைத்தியான வாழ்வு

23. **செபமாலைக் கன்னியர் சபை (CR)**

**பணி** : ஆழ் நிலைத்தியான வாழ்வு

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.8** : அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநிலை வாழ்வின் மூலம் இறைபணியை நிறைவேற்றுவர்.

**செயற்பாடு 2.8** : அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநிலை வாழ்வின் மூலம் திருச்சபையின் ஆன்மீகப் பணிக்கு உதவுவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ திருச்சபை பொதுநிலையினர் பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்
- ❖ டிமை கடதாசியும் மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 2.8.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.8.1**

- பொதுநிலையினர் எனப்படுபவர் யார்? எனும் வினாவை மாணவர்களிடம் முன்வைக்குக.
- அவ்வினாவுக்கு அளிக்கப்படும் விடைகளை கரும் பலகையில் கோவைப்படுத்துக.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ கிறிஸ்தவ விசுவாசிகளை குருக்கள் (Sacred Ministers) மற்றும் பொதுநிலையினர்கள் என இரு பிரிவினராக பிரிக்கலாம். (தி. சட்டம் 207)
> ◆ வார்த்தைப்பாடுகளைக் கொடுத்து தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களை இவ்விரு பிரிவு களிலும் காணக்கூடியதாகவுள்ளது.
> ◆ கிறிஸ்துவுக்குள் பொதுநிலையினர் யாவரும் சமமானவர்கள் ஆவர்.
> ◆ திருச்சபையின் நலனுக்காக பொதுநிலையினர் யாவரும் செயலாற்றுகின்றனர்.

**படி 2.8.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.8.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முனவைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 2.8.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

> ◆ இவ்வுலகில் செயலாற்றும்போது அவை இறைச் சித்தத்தின்படி நிகழ்வதற்கு வழியமைப்பதே பொதுநிலையினரின் அழைப்பாகும்.
> ◆ பொதுநிலையினர் தமது கடமைகளை சரியாக நிறைவேற்றுவதனால் உலகைப் பரிசுத்தமாக்கு கின்றனர்.
> ◆ நம்பிக்கை, எதிர்நோக்கு இறை அன்பின் வழியாக கிறிஸ்துவை உலகுக்கு அறிமுகஞ் செய்கின்றார்கள்.
> ◆ பொதுநிலையினர் அரச, குருத்துவ, இறைவாக் குப்பணிகளை உலகில் நிறைவேற்றுகின்றனர்.
> ◆ குருத்துவ வாழ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர் களிடமிருந்து ஆன்மீகம் சார்ந்த அனைத்தையும் பெறுவதற்கு பொதுநிலையினருக்கு உரிமை யுண்டு என்பதாகும்.
> ◆ பொதுநிலையினர் ஆன்மீகத் தலைவர்களிடம் இருந்து அறிவுரைகளையும் ஆலோசனை களையும் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பின்பற்ற வேண்டும்.
> ◆ பொதுநிலையினர் அனைவரும் புனிதமான வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பொதுநிலையினர் என்ற வகையில் பாடசாலைச் சமூகததில் கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றும் முறையை விளக்குவர்.
- பொதுநிலையினர் என்ற மட்டின் நாமும் தூயதொரு வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள் ளோம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- பொதுநிலையினர் என்ற விதத்தில் பணிகளில் தம்மை அர்ப்பணிக்கும் முறையை தேர்ந்து கொள்வர்.
- தமது பாடசாலைச் சமூகத்திலே பாடசாலையின் நலனுக்காக பணிபுரிவர்.

**இணைப்பு 2.8.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- கீழ்காணும் தலைப்புக்கள் பற்றிய கருத்துக்களை ஆராய்க.
  1. பொதுநிலையினர் குருக்கள் துறவிகள் மத்தியில் உள்ள தொடர்புகள்
  2. தற்கால உலகில் பிரச்சினைகளுக்கு மத்தியில் பொதுநிலையினர் செயலாற்ற வேண்டிய முறை
  3. உங்கள் பாடசாலை சமூகத்தை புனிதப்படுத்தும் பொருட்டு உதவி செய்யும் விதம்.
- திருச்சபை மற்றும் பொதுநிலையினர் பற்றிய 2ம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீட்டை ஆராய்ந்து நோக்கலாம்.

## 2.8.1 அர்ப்பணிப்புடன் கூடிய பொதுவாழ்வின் மூலம் இறைபணியை நிறைவேற்றுவர்.

அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக்குழு என்பது துறவற சபையின் வாழ்விலே ஒரு சபையாகவே உள்ளது. சபையின் துறவற முறை அல்லது வாழ்க்கை முறை எனக் கூறலாம். அவை நல்ல உறுதிப்பாடுகள் எடுத்து உலகிலேயே வாழுகின்ற ஒரு வாழ்க்கை முறையாகும்.

இவ்வாறாக அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலை வாழ்க்கை முறை ஆரம்பகால சபையினுள்ளும் க்ாணக்கூடியதாயிருந்தது. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தவிர இன்னும் அதிக அளவிலான சீடர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள் என்பதை நற்செய்திகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இன்னும் இவர்களோடு பெண்களும் இருந்தனர். (லூக் 8 : 1 - 3)

ஆரம்பகால சபையில் இருந்த தலைமைத்துவத்தைப் பெற்ற பொதுநிலை ஆண்களும் பெண்களும் அனேகர் இருந்ததாக திருத்தூதர் பணி நூல் சான்று பகர்கின்றது. அந்தியோக்கியா சபைக்கு அனுப்பப்பட்ட பர்னபா அப்போதிருந்த பொதுநிலை அப்போஸ்தலராவார். பர்னபா நற்பண்புடையவராகவும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவராகவும் இருந்தாரென திருத்தூதர் பணி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி. தூ.ப 11:24) கிறிஸ்துவுக்காகத் தம்மை அர்ப்பணித்த ஆக்கிலாவும் பிரிஸ்கிலாவும் எனப்பட்ட பொதுநிலைத் தம்பதிகள் ஆரம்பகால சபையில் இருந்தனர். (தி.தூ.ப 18:2) சபையின் முதல் நூற்றாண்டுகளில் உலகிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு தனித்தனியாக தியானத்திலும் செபத்திலும் ஈடுபட்டனர் என்றும் கிறிஸ்தவப் பெண்களும் ஆண்களும் பொதுநிலையினராக இருந்தனர். துறவற சபைகளில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

சபையின் ஆரம்ப காலந்தொட்டு இருந்து வந்த இந்த பொதுநிலைக் குழுக்கள் அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலை சபைகள் என அறிமுகப்படுத்தப்பட்டன. திருத்தத்தை 12 ம் பத்திநாதரால் இது அறிமுகப்படுத்தப்பட்டது. அவர் "புரவிடா மாடர் எக்லேசியா, பிரிமோ பெலிசிடர்" ஆகிய கடிதங்கள் வழியாக அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலை சபையிலே முழுமையையும் பரிசுத்தனத்தையும் பெறுவதற்கான சட்ட வழிமுறைகளாக ஏற்றுக்கொண்டதோடு அந்த சபைகளின் தொடக்கமும், வரலாற்று வளரச்சி, அவற்றின் தன்மையும் இக்கடிதங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக்குழுக்கள் ஒருவகையில் ஏனைய துறவற சபைகளுக்குச் சமமானதாகும். ஒவ்வொரு குழுக்களிலும் ஆண்,பெண் அங்கத்தவர்களும், ஆண், பெண் துறவிகளும், கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு போன்ற வார்த்தைப்பாடுகள் அல்லது உறுதியளித்தல்களை பிரசித்தமாகவோ அல்லது தனியாகவோ கொடுக்கின்றனர். எனினும் ஆண், பெண் துறவிகளிலிருந்து இக்குழுக்களை வேறுபடுத்திக்காட்டுவது இங்கு பொதுநிலைக்குழு அங்கத்தவர்கள். ''உலகிலிருந்து விலகி'' துறவிகளாக மறு உலக வாழ்வு வாழ்வதற்குப் பதிலாக உலகிலேயே இருந்து தாம் விரும்பிய தொழிலொன்றினைப் புரிந்து மேற்கூறப்பட்ட வார்த்தைப்பாடுகளை அல்லது உறுதியளித்தலை நிறைவேற்றுவதாகும். அவ்வாறே அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக்குழுக்கள் துறவற வாழ்வு வாழ்வதும் இல்லை.

அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக் குழுக்களுக்குப் பொறுப்பாக இருப்பவர் அந்த குழுவை வழி நடாத்துகின்ற மறைமாவட்ட ஆயராவார். எனினும் அவர் தனக்குப் பதிலாக ஒரு குருவானவரை நியமிக்கலாம். இக்குழுக்களுக்கும் யாப்பு ஒன்றுண்டு. அவ்வாறே அவர்கள் தமது தொழிலை விட மேலதிகமாக உலகில் சிற்சில அப்போஸ்தலிக்கப் பணிகளில் ஈடுபடுவர். வாரமொருமுறை அல்லது மாதமொரு முறை தமது குழுவுக்குரிய நிலையமொன்றில் ஒன்றுகூடி தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதோடு செபிப்பர், கலந்துரையாடுவர்.

இவ்வாறான அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலை குழுக்களைத் தவிர சில துறவற சபைகளிலும் அவற்றினது ''பொதுநிலை மூன்றாம்குழு'' எனவும் பொதுநிலைக் குழுக்கள் உள்ளன. அவை பெனடிக்ற், கார்மேல், டொமினிக், பிரான்சிஸ்கன் பொதுநிலை மூன்றாம் குழுக்களுக்கு உதாரணங்களாக எடுக்கலாம். இம்மூன்றாம் குழுக்கள் மேற்கூறப்பட்ட துறவறக் குழுக்களோடு இணைந்து பணியாற்றுவர். பெரும்பாலும் யாப்பும், வாழ்க்கைமுறையும் முன்பு கூறப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக்குழுக்களின் முறையை விட வேறுபட்டதாக இருக்கும். அவற்றின் நிர்வாகம் அந்தந்த துறவற சபைகளிடம் தங்கியுள்ளது. டொமினிக்கன் துறவற சபையினரும் புனித சீயன்னா கத்தரினும் டொமினிக்கன் மூன்றாம் பொதுநிலைக் குழுவிலிருந்து வந்த புனிதர்களாவதோடு பிரான்ஸ் நாட்டு புனித லூயிஸ் அரசரும், வறங்கேரி நாட்டு புனித எலிசபெத்தும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 2.0** : இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.9** : தூதுப் பணிகளில் ஈடுபட்டு திருச்சபையின் ஆன்மீகப்பணிகளில் உதவ முன்வருவர்

**செயற்பாடு 2.9** : அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநிலை வாழ்வின் மூலம் திருச்சபையின் ஆன்மீகப் பணிகளுக்கு உதவுவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தூதுப் பணிகள் அடங்கிய பட்டியல்.
- ❖ அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநிலை வாழ்வின் மூலம் புனிதத்தன்மையைப் பெற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகங்கள்.
- ❖ பொதுநிலையினர் திருமுழுக்கின் மூலம் பெற்றுள்ள பொறுப்புக்கள் எழுதப்பட்ட அட்டை
- ❖ பொதுநிலை தூதுப்பணிகள் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல்கள்
- ❖ A 4 தாள்கள் சில
- ❖ பாடப்புத்தகம்
- ❖ இணைப்பு 2.9.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.9.1**
- மாணவர்கள் இதுவரை இணைந்து செயலாற்றியுள்ள மன்றங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறை தூதுப் பணியாளன் ஆகிறான்.
> ◆ உங்களுக்கென்றே திருச்சபையில் பல மன்றங்கள், இயக்கங்கள் உள்ளன.
> ◆ அவைகளில் இணைந்து பணியாற்றுவதன் மூலம் திருமுழுக்கின் கடமைகளை நிறைவேற்றுவர்

**படி 2.9.2** :
- பொருத்தமான முறையில் மாணவர்கை குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 2.9.1இல் கூறப்பட்டுள்ள பிரதிகள், டிமைதாள், மாக்கர்ே குழுக்களுக்கிடையில் பகிர
- செயற்பாடுகளைக் கொடுத ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செ முனைவைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 2.9.3 :
- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறைத்தூதுவராவர்.

◆ அம்மறைத்தூதுப் பணியிலே சிலர் விசேட விதமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். அதாவது.
  1. பொதுநிலையினரின் பணி - மரியாவின் சேனை
  2. பரிசுத்த ஆவியின் இயக்கங்களில் சான்று பகர்தல் - அருங்கொடை இயக்கம்
  3. அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநிலையினர் குழுவினர்- உயிர்த்த கிறிஸ்துவின் துறவிகள்
  4. துறவற சபைகளில் மூன்றாம் பொதுநிலை யினர் குழுவினர் (கார்மேல்சபை, ஆசீர்வாதப்பர் சபை, இயேசு சபை, டொமினிகன் சபை போன்ற சபைகள்)

◆ சிறுவர்களுக்கான கூட்டங்களும் உள்ளன.
  1. திருப்பாலத்துவ சபை
  2. லக்கிரிவி
  3. பீடப்பணியாளர்கள் கூட்டம்.

◆ மன்றங்களில் இணைந்து கிறிஸ்தவ கடமை களை நிறைவேற்றக் கூடிய செயல்களைச் செய்ய வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இலங்கையில் செயல்படும் பொதுநிலையினரின் தூதுப் பணிகளைப் பெயரிடுவர்.
- திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறைத்தூதுப் பணியாளன் ஆகின்றான் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- பல்வேறு மறைபரப்புப் பணியாளர்கள் சமுதாயத்தில் ஆற்றுகின்ற பல்வேறு பணிகள் தொடர்பான விபரங்களை முன்வைப்பர்.
- பிள்ளைகளுக்கான மறைப்பணிச் சபைகளில் இணைந்து செயலாற்றுவர்.

**இணைப்பு 2.9.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- அர்ப்பணிக்கப்பட்ட பல்வேறு தூதுப்பணிகள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளவும்
  1. உருவாக்கியவர்
  2. ஆரம்பிக்கப்பட்ட வருடமும் நாடும்
  3. பணிகள்
- தகவல்களை ஒழுங்கமைத்து ஒவ்வொரு குழுவினரும் ஓர் சிறிய கையேட்டை முன்வைக்கவும்.
- இதற்காக உங்களது பாடப்புத்தகத்தை துணையாகக் கொள்ளவும்.

**2.9.1 இலங்கையில் உள்ள பொது நிலையினரின் தூதுப்பணிகள்**

01. புனித வின்சன்ட் டீ பவுல் சபை
02. பல்கலைக்கழக மாணவர் மன்றம்
03. கத்தோலிக்க இளைஞர் மன்றம்
04. புனித சவேரியார் சபை
05. கிறிஸ்தவ இளைஞர் தொழிலாளர் கழகம்
06. புனித லூக் (வைத்திய) சங்கம்
07. குறுசிலோ
08. மறுமலர்ச்சி இயக்கம்
09. சிறிய கிறிஸ்தவ குழுமம்
10. குடும்ப அப்போஸ்தலிக்க பணி
11. போதை வஸ்து ஒழிப்பு பணி
12. போதை வஸ்து புனர்வாழ்வு அப்போஸ்தலிக்க பணி
13. மாறிஸ் அப்போஸ்தலிக்க பணி
14. குருடர், செவிடர், ஊமைகள் அப்போஸ்தலிக்க பணி
15. கத்தோலிக்க வழக்கறிஞர் ஒன்றியம்
16. மரியாயின் சேனை
17. குடியகழ்வு குடிவரவுச் சங்கம்
18. அருள்பணி பியோ பக்திச் சபை
19. திரு இருதய சபை
20. லக்கிறிவி
21. திருப்பாலர் சபை
22. பாடகர் குழு
23. வழிப்பாட்டுக்குழு

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : இவ்வுலகில் உள்ளவற்றை முறையாகப் பயன் படுத்தி இறைவனுக்குரிய ஆராதனையைச் செலுத்துவர்.

**செயற்பாடு 3.1** : படைத்தவருக்குரிய ஆராதனையை இவ்வுலகப் படைப்புகளுக்குச் செலுத்துவதை தவிர்ப்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ மனதைத் கவரும் சூழலைக் காட்டும் படங்கள்
- ❖ ஒழுங்கான சூழலையும் ஒழுங்கற்ற சூழலையும் காட்டும் படங்கள் இரண்டு
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 3.1.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.1.1**

- சூழலை நன்கு அவதானிக்கச் செய்யவும்
- கீழ்க்காணும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை சேகரிக்கவும்.

  சூழல் 1. மனதைக் கவரும்

  2. ஒழுங்கான

  3. சீரற்ற, தகுதியற்ற காட்சி
- தகவல்களைச் சேகரித்து தமது குழுக்களிடையே கலந்துரையாடலை நடத்தவும்.
- கீழ்காணும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ அனைத்தும் இறைவனின் படைப்பு என்பதாகும்.
> ◆ இவையனைத்துக்கும் ஒழுங்கும் முறையும் உண்டு என்பதாகும்.
> ◆ இவ் ஒழுங்கை சீர் குலைப்பது பாவமாகும்.
> ◆ சூழலைப் பாதுகாப்பதும் அதை விருத்தி செய்வதும் எமது கடமையாகும்.

**படி 3.1.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.1.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 3.1.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும் படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ படைத்தவர் ஒருபோதும் மாறாதவர் என்பதால் அவரில் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு வைக் கலாம் என்பதாகும்.
◆ ஆராதனைக்குரிய படைத்தவரான இறைவன் மீட்பரும், அனைத்துக்கும் அதிபதியும், நித்திய மானவரும் அன்புள்ளவரும் ஆவார்.
◆ படைப்புக்களையும் உருவங்களையும் இறை வனாகக் கருதுவது தவறானது.
◆ மீட்புக்காக உருவங்களை வைப்பதற்கு பழைய ஏற்பாட்டில் இடமளிக்கப்பட்டது.
◆ கிறிஸ்துவின் மனிதவதாரத்தால் உருவங்கள் புதிய விளக்கம் பெறுகின்றன.
◆ உருவங்களுக்கு வழங்கப்படும் வணக்கமானது இறைவனுக்கு செலுத்தப்படும் ஆராதனைக்கு சமனாகாது.
◆ நம்பிக்கையின்மை, நம்பிக்கை கொள்ளப்பின் வாங்குதல், நம்பிக்கை பற்றி போதிய விளக்கம் பெறாமை, குறைவான எதிர்நோக்கு, மூடநம் பிக்கை, பகைமை, சோம்பல், தவறான முன் மாதிரிகை ஆகியவை முதலாம் கற்பனைக்கு விரோதமான பாவங்கள் ஆகும்.
◆ அறிவையும் பௌதீக உலகிலுள்ள அனைத்தை யும் தவறாகப் பயன்படுத்துவது இறைவனை அவமதிப்பதாகும்.
◆ இறைவனின் பெயரானது எமக்கு விஷேடமாக வெளிப்படுத்தப்பட்டதால் அதற்குரிய மரியாதை யைக் காட்டவேண்டுமென உள்ளத்தில் கொண்டு அதை மகிமைப்படுத்தவும் ஆசீர்வழங்கவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
◆ கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் புறம்பான பெயர் வழங்குதல், ஒவ்வொருவரது பெயரை பங்கப் படுத்துவது தவறானது.
◆ நித்திய உடன்படிக்கையின் அடையாளமான ஓய்வு நாள் எகிப்திய அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற்றதை நினைவூட்டுகிறது.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- முதலாம் கற்பனைக்கு எதிரான பாவங்களைப் பட்டியல்படுத்துவர்
- புதிதாகப் பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டும்போது கிறிஸ்தவ இலட்சியங்களுக்கு ஏற்ப செயற்படுவர்.
- படைத்தவரும், மீட்பரும் அனைத்துக்கும் அதிபதியும் முடிவில்லாதவரும், அன்புள்ள வருமான இறைவனுக்கு மட்டும் ஆராதனை செய்ய வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
- நாம் புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துகின்றோம் என்பதற்கான காரணங்களைத் தேடிப்பார்ப்பர்.
- இறைவனை மட்டும் ஆராதனை செய்யவும் புனிதர்களுக்கு வணக்கம் செய்யவும் வாழ்வில் பழக்கமாக்கிக் கொள்வர்
- ஓய்வு நாளைப் புனிதமான நாளாக அனுசரிப்பதைப் பழக்கமாக்கிக் கொள்வர்

**இணைப்பு 3.1.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- தனது குழுவுக்குக் கிடைத்துள்ள தலைப்புக்கேற்ப குழுக்கலந்துரையாடலில் ஈடுபட்டு கருத்துக்களை கோவைப்படுத்துவர்.
- குழுவிலுள்ள எல்லா அங்கத்தவர்களினதும் பங்களிப்பு முக்கியமாகும்
- உடனேயே உரையாற்றுவதற்கு நீங்கள் சுயமாகத் தலைமைத்துவத்தை எடுக்க வேண்டும்.
- உரையை 2 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தவும். ஆகக் கூடியது இருவரையாவது ஈடுபடுத்துக.
  1. மாற்றமில்லா இறைவனிடம் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு கொள்வோமாக.
  2. படைத்தவரும், மீட்பவரும், அன்புள்ளவருமான இறைவனை ஏற்றுக்கொள்ளல் இறைவழிபாடாகும்.
  3. சிலைகளை, உருவங்களை வழிபடுதல்
  4. முதலாம் கட்டளைக்கு எதிராகச் செய்யும் பாவங்கள்
- 10 ஆம் தர பாடநூலில் 15வது பாடத்தை துணையாகக் கொள்ளவும்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க கிறிஸ்தவன் என்ற முறையில் பங்களிப்பர்.

**செயற்பாடு 3.2** : ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க பங்களிப்புச் செய்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ பொதுச் சொத்துக்களை சீர்குலைக்கும் செயல்கள் பற்றியசெய்தித்தாள் தரவுகள் சில.
- ❖ பெற்றோர், பிள்ளைகள், குடிமக்கள், அதிகாரிகள் ஆகியோரது பொறுப்புக்கள் பற்றிய அட்டவணை
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 3.2.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.2.1**

- மாணவர் இருவரைத் தெரிந்தெடுத்து அவசிய மான விசேட விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பத்திரிகைச்
 செய்தியை முன்வைக்கச் செய்யவும் (சேத மடைந்த வீதி, பழுதடைந்த பாலம், ஈக்கள், நுளம்புகள் தொல்லை,வாகன நெரிசல், போக்கு வரத்து வசதியின்மை)
- இச்செய்திகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- இதிலிருந்து எழுகின்ற கருத்துக்களை மாணவரிட மிருந்து கேட்டு அவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்காணும் கருத்துக்களை வெளிக் கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

| |
|---|
| ◆ அதிகாரிகள் தகுந்த முறையில் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறுவதால் மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன<br>◆ இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நாமும் பங்களிப்புச் செய்ய வேண்டும். |

**படி 3.2.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.2.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 3.2.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ நான்காம் கற்பனையின்படி முழு சமூகத்தின் மட்டில் நம் எல்லோருக்கும் கடமைகளும் பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.
◆ நன்மை செய்ய அதிகாரம் பெற்றுள்ள அனைவருக்கும் மரியாதையும் அன்பும் நன்றியும் செலுத்த வேண்டும்.
◆ குடும்பம் மூவொரு இறைவனை அடையாளப் படுத்துகிறது.
◆ குடும்ப உறுப்பினர்களுக்கு வெவ்வேறு பொறுப் புக்களும் கடமைகளும் உள்ளன.
◆ அதிகாரிகள் தமது சேவையைப் பெறுகின்ற குடிமக்கள் மட்டிலும், குடிமக்கள் தமது அதிகாரிகள் மட்டிலும் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- முழுச் சமுதாயத்தின் மட்டில் நமக்கு வழங்கப்பட்டிருக்கும் கடமைகளையும் பொறுப் புக்களையும் பெயரிடுவர்.
- நல்ல குடும்பம் மூவொரு இறைவனை அடையாளப்படுத்துகின்றது என ஏற்றுக் கொள்வர்.
- குடும்ப உறுப்பினர் என்ற வகையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் பட்டியல் படுத்துவர்.
- நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தம் கடமைகளை நன்முறையில் நிறைவேற்றுவர்.

## இணைப்பு 3.2.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- தமது குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்தபட்சம் ஐந்து கருத்துக்களையாவது உள்ளடக்கிய அட்டவணையை வெளிக் கொணரவும்

1. குழு ஒன்று : பெற்றோரின் கடமைகளும் பொறுப்புக்களும்
2. குழு இரண்டு : பிள்ளைகளின் கடமைகளும் பொறுப்புக்களும்
3. குழு மூன்று : குடிமக்களின் கடமைகளும் பொறுப்புக்களும்
4. குழு நான்கு : பாடசாலை மாணவர் என்ற வகையில் எமது கடமைகளும் பொறுப்புக்களும்
5. குழு ஐந்து : அரச அதிகாரிகளின் கடமைகளும் பொறுப்புக்களும்

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.3** : தூய்மையான நடத்தையால் வாழ்வின் மதிப்பீடு களை வளர்ப்பர்.

**செயற்பாடு 3.3** : நாம் தூய சிந்தையும் செயலும் உள்ளவர்களா வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ 6ம், 9ம் கற்பனைகளுக்கு விரோதமான பத்திரி கைத் தலைப்புச் செய்திகள் சில ஒட்டப்பட்ட பலகை ஒன்று
- ❖ புனிதத்துவத்திற்காக தமது வாழ்வைத் தியாகம் செய்த புனிதர்களாகிய அக்னஸ், மரியகொறட்டி ஆகியோரது வாழ்வு பற்றிய நூல்கள்
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ (6ம் 9ம் கற்பனைகளுக்கு விரோதமான பத்திரிகை தலைப்புச் செய்திகளை இயன்றளவு கொண்டு வருமாறு முதல் நாளே மாணவர்களுக்கு அறி வூட்ட வேண்டும்).
- ❖ இணைப்பு 3.3.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.3.1**

- மாணவர்கள் கொண்டு வரும் தலைப்புச் செய்தி களை பலகையில் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யவும்.
- பத்திரிகைத் தலைப்புச் செய்திகளையும் கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரை யாடலை நடத்துதல்.
  - ◆ 6ம், 9ம் கற்பனைகளுக்கு விரோதமாக இன்றைய சமுதாயத்தில் அநேக செயல்கள் நடைபெறு கின்றன
  - ◆ இவற்றால் தமது ஆளுமையும் சமுதாயத்தின் அடிப்படைகளும் வீழ்ச்சி அடைகின்றன.
  - ◆ பாடசாலை மாணவர் என்ற வகையில் நீங்களும் இவற்றைத் தவிர்க்க முயல வேண்டும்.

**படி 3.3.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.3.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 3.3.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ 6ம், 9ம் கற்பனைகளின்படி பொது நிலையினரும் துறவியரும் கற்பின் தூய்மைக்கு அழைப்புப் பெற்றுள்ளனர்.
◆ இறைவன் ஆணும் பெண்ணுமாக எம்மைப் படைத்தார்.
◆ திருமண அருளடையாளத்தால் ஆணும் பெண்ணும் அன்பினால் இணைகின்றனர்.
◆ திருமண வாழ்வுக்கு எதிரான பாவங்களைத் தவிர்க்க வேண்டும்
◆ உள்ளத்தில் தூய்மையாக இருக்க வேண்டும்.
◆ பரிசுத்த தனத்தைப் பாதுகாக்க முயலவேண்டும்.
◆ நீர் வளர்ந்த பிள்ளையாகையால் கற்பைப் பாதுகாக்க முயலவேண்டும்.
◆ தூய்மையைப் பாதுகாப்பதற்காக தீயபுத்தகங் கள், தகாத படங்கள், போதை வஸ்துக்கள், தேவையற்ற வளர்ந்தோர் உறவு, ஓரினச் சேர்க்கை, நீலப்படங்கள் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.
◆ உமது உடலை மதித்து தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 6ம், 9ம் கற்பனைகளுக்கு எதிராக சமுதாயத்தில் நடைபெறும் செயல்களைப் பெயரிடுவர்.
- 6ம், 9ம் கற்பனைகளின்படி பொதுநிலையினரும் துறவியரும் கற்பின் தூய்மைக்கு அழைப்புப் பெற்றுள்ளனர் என ஏற்றுக்கொள்வர்.
- தூய்மையைப் பாதுகாப்பதற்காக சமூகத்தில் நிலவுகின்ற செயற்பாடுகளில் சரியான வற்றைத் தெரிந்தெடுப்பர்.
- தூய்மைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த புனிதர்களின் வாழ்க்கை வரலாறு களைத் தேடி வாசிப்பர்.
- தூய்மையாக வாழ்வதை பழக்கமாக்கிக்கொள்வர்.

இணைப்பு 3.3.1

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- விடய ஆய்வுக்காக உமக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களின் ஊடாக கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் கருத்துக்களைக் கோவைப்படுத்துவர்.
  1. 6ஆம் 9 ஆம் கற்பனைகளுக்கு எதிரான செயற்பாடுகளை இனங்காணவும்.
  2. இச்செயற்பாடுகளின் எதிர்த்தாக்கங்கள் அவை சமுதாயத்தைப் பாதிக்கும் தன்மை
  3. இச் செயற்பாடுகள் சமுதாயத்தில் நிலைப்பதால் பிள்ளைகளுக்கு ஏற்படும் கேடுகள்.
  4. இச்செயற்பாடுகளுக்கு நீர் முகங்கொடுக்க நேர்ந்தால் உமக்கு ஏற்படுபவை.

## விடய ஆய்வு

### அமலனின் நடத்தை

அமலனின் பெற்றோர் வேலைக்கு செல்கின்றனர். அமலன் பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்புகையில் வீட்டிலிருப்பவர் வேலையாள் மட்டுமேயாகும். சமூகம் செல்கின்ற வலையிலேயே அமலனும் (Inter net) வலைப்பின்னலில் விழுகின்றான். இவற்றுக் கிடையில் அமலனின் பெற்றோரும் அமலனின் நடத்தையில் மாற்றம் இருப்பதைக் கண்டனர். தாயும் தந்தையும் நல்ல முன்மாதிரிகையான நடத்தையுள்ளவர்கள். எனினும் பிள்ளையில் ஏற்பட்ட மாற்றம் இவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருந்தது. பின்னர் தேவையான ஆலோசகர்களை அழைத்து அமலனுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல் களையும் வழங்கி மீண்டும் அவனை சரியான பாதையில் கொண்டுவர பெற்றோரால் முடிந்தது.

### நிர்மலா

நிர்மலாவின் குடும்பத்தில் தாயும் தந்தையும் நிர்மலாவும் மட்டுமிருந்தனர். நிர்மலாவின் தாய் மிக அழகான பெண்ணாக இருந்தாள். இதனால் நிர்மலாவின் தந்தை எப்பொழுதும் தாயை சந்தேகிக்கத் தொடங்கினார். இதனால் குடும்பத்தில் எப்பொழுதும் ஒற்றுமை இல்லாத நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. இது நிர்மலாவின் உள்ளத்துக்கு வேதனை தரக்கூடியதாக இருந்தது. இதைப்பற்றி ஒரு அருள் சகோதரியிடம் கூறினாள். பின்னர் அருள் சகோதரி பெற்றோரை அழைத்து அவர்களோடு பேசி இப்பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தனர். தந்தை தனது பிழையை ஏற்றுக்கொண்டு திருந்தியதால் மீண்டும் குடும்பத்தில் மிக நல்ல ஒரு சூழலை உருவாக்க முடிந்ததோடு மிக்க மகிழ்ச்சியான குடும்பமாக அது மாறியது.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 3.4** : பிறர்சொத்துக்களையும் பொதுச் சொத்துக்களை யும் பாதுகாப்பர்.

**செயற்பாடு 3.4** : பிறர் சொத்துக்களையும் பொதுச்சொத்துக் களையும் பாதுகாப்போம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ இணைப்பு 3.4.1 உள்ள படங்கள்
- ❖ $A_4$ தாள்கள் சில
- ❖ 7 ஆம் 10 ஆம் கட்டளைகள் அடங்கியுள்ள திருவிவிலியப் பகுதி
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- இவற்றில் உமது வகுப்புக்கு ஏற்ற தலைப்பைத் தேர்நதெடுத்து வகுப்பில் நடிக்கச் செய்யவும்.
  1. புனிதமாக அனுசரிக்க வேண்டிய ஞாயிறு தினத்தில்
     இறைவனை மறந்து பணத்துக்கு பின்னால் செல்லுதல்.
  2. தமது தேவைக்கு அதிகமாக சொத்துக் களைச் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்தல்.
  3. செல்வம் தேடல்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

◆ அளவுக்கு அதிகமாக செல்வம் சேர்க்க முயற்சி செய்தல் முறையற்றதாகும்.
◆ பிறர் சொத்துக்கள் மட்டில் பொறாமைப்படாமல் இருக்க வேண்டும்.
◆ தாம் பெறமுடியாத செல்வத்தின் மட்டில் பேராசை கொள்ளாதிருக்க வேண்டும்.
◆ தமக்குக் கிடைக்கும் வருமானத்திற்கேற்ப சிக்கனமாக வாழவேண்டும்.

**படி 3.4.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறுகுழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.4.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனாஎன்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 3.4.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ பிறர் சொத்துக்களை அநீதியான முறையில் வைத்திருத்தலும், களவெடுத்தலும் பிழையான செயலாகும்.

◆ இவ்வுலக சொத்துக்களையும், மனித உழைப் பினால் பெற்றவற்றையும் நீதியாகவும், இரக்கத் தோடும் கையாள வேண்டும்.

◆ தனிச் சொத்துக்களை வைத்திருக்க உரிமை யுள்ளதோடு, இறைவனால் படைக்கப்பட்ட எல்லாச் சொத்துக்களையும் முழு மனித சந்த திக்கும் பயன்படச் செய்ய வேண்டும்.

◆ அநீதியாக பிறர் சொத்துக்களை வைத்திருந் தால் அவற்றை மீண்டும் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பதோடு அக்குற்றத்துக்குரிய நட்ட ஈட்டையும் செலுத்த வேண்டும்.

◆ அடிமை வேலையும் உழைப்பைச் சுரண்டுதலும் தடை செய்யப்பட்டுள்ளது.

◆ கனியப் பொருட்களுக்கும் தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் எதிர்கால சந்ததிக்காகப் பாதுக்காக்க வேண்டும்.

◆ நீர் வளர்ந்த பிள்ளையாகையால் கற்பைப் பாதுகாக்க முயலவேண்டும்.

◆ தூய்மையைப் பாதுகாப்பதற்காக தீயபுத்தகங் கள், தகாத படங்கள், போதை வஸ்துக்கள், தேவையற்ற வளர்ந்தோர் உறவு, ஓரினச் சேர்க்கை, நீலப்படங்கள் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.

◆ மிருகங்களைப் பாவனைக்காக எடுக்கும்போது அவற்றை இரக்கத்தோடு நோக்க வேண்டும்.

◆ பொருளியல் செயற்பாடுகள் யாவற்றையும் சமூக நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

◆ மனித உழைப்பினால் நிறைவேற்றப்பட்டாலும் இறைப்படைப்பின் செயற்பாடு தொடர்புபடுத்தப் படுகின்றது.

◆ ஏழைகளுக்கு உணவு கொடுத்தல், சகோதர அன்பின் அடையாளமாகும்.

◆ மனிதனுடைய முழு வளர்ச்சிக்காக செயற்பட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 7ஆம் 10ஆம் கற்பனைகளுக்கு எதிராக தாம் செய்யத் தகாதவற்றை கோவைப் படுத்துவர்.
- அநீதியான முறையில் சொத்துக்களை வைத்திருத்தலும், களவெடுத்தலும் பிழையான செயல் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- தனிப்பட்ட சொத்துக்கள் மட்டில் உரிமை இருப்பினும், இறைவனால் படைக்கப்பட்ட எல்லாப் படைப்புகளையும் பொதுவாகப் பயன்படுத்தும் விதத்தை எழுதிக் காட்டுவர்.
- தமக்குரியதை மட்டும் தம்மோடு வைத்திருப்பதற்குப் பழகுவர்.

## இணைப்பு 3.4.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் தலைப்புகளின் கீழ்படங்களைத் தேடிக்கொள்ளவும்.
  1. தோட்டத்தின் எல்லைக்காகச் சண்டையிடுதல்.
  2. அநீதியான முறையில் களவெடுக்கப்பட்ட பொருட்களை வைத்திருத்தல்.
  3. மிருகங்களுக்கு இரக்கம் காட்டுதல்.
  4. உழைப்பினை சுரண்டுதல்

  அப்படங்களை குழுக்களுக்கு முன்வைக்கவும்.
  1. இப்படங்களால் வெளிக்கட்டப்படுபவை.
  2. 7ம் 10ம் கட்டளைகளுக்கு எதிரானவை.
  3. 7ம் 10ம் கட்டளைகளைப் பாதுகாக்க நாம் செய்யும் செயற்பாடுகள்

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : உண்மையும் நீதியுமான சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதில் பங்கேற்பர்.

**செயற்பாடு 3.5** : நீதியுடனும் நேர்மையுடனும் செயற்படப் பழகுவர்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ உண்மையானதும் பொய்யானதுமான இரு செய்திகள்
- ❖ உண்மை, நேர்மையை அடித்தளமாக் கொண்ட சமூகத்தில் காணப்படவேண்டிய பண்புகள் எழுதப்பட்ட பத்திரிகைத் தாள்கள் சில
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 3.5.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.5.1** :
- இணைப்பு 3.5.1இல் உள்ள செய்தியை ஆசிரியர் ஒரு மாணவருக்குக்காட்டி அச்செய்தியை மாணவர் மத்தியில் ஒருவர் மற்றவருக்கு இரகசிய மாகக் கூறும்படி வழிகாட்டவும்.
- இச்செய்தியை இறுதியாகக் கேட்ட மாணவரிடம் சத்தமாகக் கூறும்படி சொல்லுங்கள்
- முதல்காட்டிய செய்தியையும் இறுதியாகக் கூறப்பட்ட செய்தியையும் வகுப்பில் முன் வைக்கவும்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ வாயால் பரப்பப்படும் செய்தி ஒன்றுக்கொன்று முரணானது என்பதாகும்.
> ◆ செவி மடுப்பவர் சுய அறிவுடன் செவிமடுக்க வேண்டும்.
> ◆ செய்தியைக் கூறுபவர் உண்மைக்கேற்பக் கூறவேண்டும்.
> ◆ தவறான செய்திகள் சமூகத்தில் பிரச்சனைகளை உருவாக்கும் என்பதாகும்.

**படி 3.5.2** :
- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.5.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 3.5.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

> - ◆ நாம் உண்மையின் படி வாழ்ந்து நீதிக்கு சாட்சி பகர வேண்டும்.
> - ◆ உண்மைக்குப் புறம்பான செயல்களைத் தவிர்க்க வேண்டும். (பொய்ச்சாட்சி கூறுதல், உண்மையைக் கண்டும் அலட்சியம் செய்தல், பொய்ப் பிரசாரம் செய்தல், வதந்திகளைப் பரப்புதல், கோள் சொல்லுதல், இரகசியம் காக்கத் தவறுதல், பிறரை தவறான வழியில் வழிநடத்துதல்)
> - ◆ ஊடகங்களை உண்மைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.
> - ◆ உண்மை, அழகிய பௌதீக உலகு கிறிஸ்தவக் கலை ஆகியவை இறைவனின் அளவற்ற அழகிற்கு சான்று பகருகின்றன

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- உண்மையும் நீதியும் நிறைந்த சமூகத்தின் பண்புகளைப் பெயரிடுவர்.
- உண்மைக்குப் புறம்பான செயல்களைத் தவிர்க்கவேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ளதென்பதை ஏற்றுக்கௌள்வர்.
- உண்மைக்குப் புறம்பான செயல்களைப் பட்டியல் படுத்துவர்
- உண்மைக்குச் சான்று பகர பழகுவர்.

## இணைப்பு 3.5.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் தலைப்புகளுக்குரிய விபரங்களைத் தேடுங்கள்.
  1. உண்மையையும் நீதியையும் அடித்தளமாகக் கொண்ட சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும்?
  2. மாணவர் உண்மையை மதித்த சந்தர்ப்பங்கள், நீதியாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள்.
- குழுக்களிடையே தலைமைத்துவத்தை உருவாக்குதல்.
- 3 நிமிட உடனடி உரையொன்றுக்கு ஆயத்தம் செய்தல்

**பொதுத் தேர்ச்சி மட்டம் 3.0** : இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.6** : வாழ்வைப் புதுப்பிக்க மலைப்பொழிவை மாதிரியாகக் கொள்வர்.

**செயற்பாடு 3.6** : மலைப்பொழிவை மாதிரியாகக் கொண்டு வாழ்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ மத்தேயு 5:1-12 இல் உள்ள பேறுகள் எழுதப்பட்ட சுவரொட்டி
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ இணைப்பு 3.6.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.6.1** :
- மத்தேயு 5:1-12 பகுதியை வாசியுங்கள்
- தமது வாழ்வு பேறுபெற்ற வாழ்வா என சிந்திக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- விடைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ தமது உலக வாழ்வு பேறுபெற்றதாக அல்லது பேறு அற்றதாக அமையலாம் என்பதாகும்.
> ◆ உலக செல்வங்களால் அல்ல, கிறிஸ்துவின் பாஸ்கா மறை நிகழ்ச்சியில் பங்குபற்றுவதால் மட்டுமே வாழ்வை பேறு பெற்றதாக அமைக்க முடியும்.
> ◆ கிறிஸ்துவுடன் உறவை ஏற்படுத்தக்கூடிய வழிகளை மலைப்பொழிவு (8பேறுகள்) விளக்குகின்றது.

**படி 3.6.2** :
- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 3.6.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

படி 3.6.3 :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்குமபடி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

> ◆ ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஆவர். விண்ணரசு அவர்களுக்கு உரியது ஆகும்.
> ◆ துயருறுவோர் பேறுபெற்றோர் ஆவர். அவர்கள் ஆறுதல் பெறுவர் என்பதாகும்.
> ◆ கனிவுடையோர் பேறுபெற்றோர் ஆவர். அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். என்பதாகும்.
> ◆ நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஆவர். அவர்கள் நிறைவு பெறுவர் என்பதாகும்.
> ◆ இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஆவர். அவர்கள் இரக்கம் பெறுவர் என்பதாகும்.
> ◆ தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஆவர். அவர்கள் கடவுளைக் காண்பர் என் பதாகும்.
> ◆ அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஆவர்.
> ● அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப் படுவர் என்பதாகும்.
> ◆ நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஆவர். விண்ணரசு அவர்களுக் குரியது என்பதாகும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- எட்டுப் பேறுகளையும் மனனம் செய்து கூறுவர்.
- மலைப்பொழிவுக்கு ஏற்ப வாழவேண்டும் என ஏற்றுக் கொள்வர்.
- இறையரசை நெருங்குவதற்கு மலைப்பொழிவு வழிகாட்டும் முறையை எழுதுவர்.
- மலைப்பொழிவை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வர்.

## இணைப்பு 3.6.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- எட்டுப்பேறுகள் எழுதப்பட்ட சுவரொட்டிகளை 5 குழுக்களுக்கும் கொடுக்கவும்.
- ஒவ்வொரு பேற்றிலும் காணப்படும் கருத்துக்களை விளக்குவர்.
- இறையரசை நெருங்குவதற்கு மலைப் பொழிவை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டிய முறையை எடுத்துக்காட்டுங்கள்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 4.0** : செபவாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதருடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : எப்பொழுதும் செபிப்பதன் வழியாக செபத்தையும் வாழ்வையும் ஒன்றிணைப்பர்.

**செயற்பாடு 4.1** : இறைவனை நோக்கிச் செபிப்பதை வாழ்க்கையில் ஒன்றிணைத்துக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ லூக்கா 11:9-10 அல்லது மத்தேயு 7:7-8 பகுதி எழுதப்பட்ட சுவரொட்டி
- ❖ வினாக்கள் எழுதப்பட்ட ஒப்படை
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 4.1.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.1.1**

- இரண்டு நிமிட மௌன செபத்தின் பின் பாடத்தை ஆரம்பிக்கவும்.
- மாணவரிடம், செபத்தைப் பற்றி கருத்துக்களைக் கேட்கவும்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ ஒவ்வொரு செயலையும் ஆரம்பிக்கும் முன் செபிக்க வேண்டும்.
> ◆ செபிக்கும் போது இறை ஆசீரை வேண்டு கிறோம்.
> ◆ அதனால் இறைதிட்டத்திற்கேற்ப செயற்படத் தேவையான சக்தியையும் வல்லமையையும் பெறுகிறோம்.

**படி 4.1.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 4.1.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 4.1.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ செபிப்பதற்கு எதிராக வெவ்வேறு விவாதங்கள் உள்ளன.
◆ செபிக்கும்போது பல்வேறு தடைகளும் சோதனைகளும் ஏற்படுகின்றன.
◆ இறைவன் மீது நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும்.
◆ எப்பொழுதும் செபிப்பதன் மூலம் இறை அன்பை அனுபவிக்க முடியும்.
◆ இடைவிடாது செபிப்பதன் வழியாக இறைவனை நாம் அன்பு செய்கிறோம்.
◆ செபிக்கக் கற்றுக்கொடுக்கும் முதல் இடம் பாடசாலை, வீடு ஆகும்.
◆ நாம் செபிக்க விசேஷமாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.
◆ செபிப்பதற்குரிய விசேட இடங்கள் உள்ளன.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தினமும் செபிக்கக்கூடிய சில சந்தர்ப்பங்களைக் கூறுவர்.
- எப்பொழுதும் செபிப்பதன் மூலம் இறை அன்பை அனுபவிக்க முடியும் என ஏற்றுக் கொள்வர்.
- அன்றாடம் செபிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்திற்குரிய சிறிய செபம் ஒன்று எழுதுவர்.
- எப்பொழுதும் செபித்து வாழ்வர்.

## இணைப்பு 4.1.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. செபித்தல் பற்றிய உமது கருத்து என்ன?
    2. நீர் செபிக்கும்போது தடைகள், சோதனைகள் ஏற்படலாம். அச்சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?
    3. நீர் எப்பொழுதும் செபிப்பதன் வழியாக இறை அன்பை அனுபவித்துள்ளீரா? அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று எழுதுக.
    4. கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். இதை நீர் எவ்வாறு விளங்கிக்கொள்வீர்?

**பொதுத் தேர்ச்சி மட்டம் 4.0** : செபவாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதருடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.

**தேர்ச்சி மட்டம் 4.2-3** : திருச்சபையின் உறுப்பினராக பொதுச்செபம், தனிச்செபம் மூலமாக ஆன்மீக வளர்ச்சி பெறுவர.

**செயற்பாடு 4.2-3** : எப்பொழுதும் செபித்து ஆன்மீக ஊட்டம் பெறுவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ இணைப்பு 4.2-3.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.2-3.1**

- பொதுச்செபத்தில் ஈடுபடும் மாணவர் சிலரையும் தனி செபத்தில் ஈடுபடும் மாணவர் சிலரையும் முன்வரச் செய்யவும்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

| |
|---|
| ◆ தனியாகவோ அல்லது பொதுவாகவோ செபிக்க முடியும்.<br>◆ எந்தவொரு முறையில் செபித்தாலும் செபம் இறைவனுக்கு உகந்ததாகும்.<br>◆ பொதுவாகவும் தனியாகவும் செபிப்பதற்குரிய இடங்களும் சந்தரப்பங்களும் உள்ளன.<br>◆ பொதுச் செபத்திற்குரிய விசேட இடத்தை அமைத்துக்கொள்ள முடியும். |

**படி 4.2-3.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 4.2-3.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 4.2.3.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

| |
|---|
| ◆ எம் வாழ்வு செபவாழ்வாக இருக்க வேண்டும்.<br>◆ தனியாகத் தமது சிந்தனை, செயல் எல்லா வற்றையும் இறைவனுக்குச்செபமாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.<br>◆ தமது குடும்பம், உடன் பயிலும் மாணவர், பாடசாலை, வேலைத்தளத்தில் பணிபுரிவோர், பங்குமக்கள் ஆகியோர் பொதுசெபத்தில ஈடுபடலாம்.<br>◆ எமது அன்றாட கடமைகள் எல்லாவற்றையும் மகிழ்வுடன் நிறைவேற்றுவது இறைவனுக்கு உகந்ததாகும். |

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பொதுவாகவும் தனியாகவும் செபிக்கக்கூடிய சில சந்தர்ப்பங்களைப் பெயரிடுங்கள்.
- எம் வாழ்வு செபவாழ்வாக இருக்கவேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- தனக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்வதற்கான தனிச்செபம் ஒன்றை இயற்றுவர்.
- செபவாழ்வு வாழப் பழகுவர்.

## இணைப்பு 4.2-3.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

| ஆய்வு அட்டவணை - செபம் | | |
|---|---|---|
| | இடம் | நேரம் |
| பொது | | |
| தனி | | |

## தனிச் செபமும் பொதுச் செபமும்

செபம் என்பது இறைவனை நோக்கி எமது உள்ளத்தைத் திருப்புவதாகும். இறைவனோடு உறவை ஏற்படுத்துவதாகும். இவ்வுலகத்தோடு உறவு கொள்கின்றோம். கிறிஸ்து ஒவ்வொரு நாளும் செபத்தின் மூலம் இறைத்தந்தையோடு உறவு வைத்திருந்தார். நாம் எப்பொழுதும் செபிக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் தனியாகச் செபிக்க வேண்டுமெனவும்,

பொதுவாகவும் செபிக்க வேண்டுமென்பது முக்கியமாகும். பரிசுத்த ஆவியானவரின் வருகையின் போது திருத்தூதர்களும் அங்கிருந்த ஏனையோரும் பொதுவாகச் செபத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறாக திருச்சபைக்குள் தனியாகவும் பொதுவாகவும் செபிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

செபமாலை செபித்தல் தனித்தும் பொதுவாகவும் செபிப்பதற்கு ஒரு உதாரணமாகும். அடுத்ததாக திருப்பலியும் எப்பொழுதும் பொதுவான வழிபாடாகும். திருச்சபையின் நிலையான செபங்கள் (சமாதானச்செபம்) பொதுச் செபங்களாகும். அதனைத் தனியாகச் செபிக்கும் பொழுதும் கூட நாம் முழு சபையோடும் ஒன்றித்து அதை பொதுச் செபமாகச் செபிக்கிறோம். இவ்வாறாக ஒரு சிலர் ஒன்று சேர்ந்து சொல்லும் நவநாள் செபங்கள் போன்றவற்றை நாம் தனியாகச் செபிக்கும் போது அதனைத் தனிச்செபமாகக் கொள்ளலாம். எமது தனிப்பட்ட உள்ளார்ந்த ஆன்மாவுக் காக நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற மட்டில் தனியாகவும் செபிக்க வேண்டும். அடுத்து சபையின் அங்கத்தவர் என்ற மட்டில் பொதுச்செபங்களிலும் பங்குபற்றுவது முக்கியமாகும். தனியாகச்செபிக்கும் செபத்தைப் போலவே பொதுவாகச் செபிக்கும் செபத்திலும் எமக்குக் கற்பிக்கப்பட்டுள்ள செபங்களையும் சொல்லாம். எனினும் தனி, பொது இவை இரண்டோடும் எம்மால் சொல்லப்படுகின்ற மனவல்லபச் (உடன் சொல்லப்படும்) செபங்களையும் சொல்லலாம். பொதுச் செபத்தில் ஒன்றாகப் பாடல்கள் பாடுதல், விசுவாசிகளின் மன்றாட்டு, என்பவை பொதுச் செபங் களாவதோடு தனியாக இறைவனிடம் செபிக்கும் போது எமது உள்ளத்திலிருந்து எழுகின்ற கருத்துக்களை அமைதியாக வசனங்களாகவோ அமைதியாகத் தியானமாகவும் பயனுள்ள முறையில் செபிக்க முடியும்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 4.0** : செபவாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதருடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : இறையரசை நெருங்கிச் செல்ல செபத்தைப் பயன்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 4.4** : ஆண்டவர் வழங்கிய பரலோக மந்திரத்தின் வழியாக செபத்தில் ஆழமாக ஈடுபடுவோம்

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ தரம் 10 பாடநூலிலுள்ள 20வது பாடத்திலுள்ள பாடல்.
- ❖ இணைப்பு 4.4.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.4.1**

- தரம் 10 பாடநூலின் 20வது பாடத்திலுள்ள பாடலை நினைவுபடுத்திக் கொள்ளவும்.
- அப்பாடலை இருமுறை பாடவும்
- இப்பாடலைப் பற்றி தியானியுங்கள்
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ கிறிஸ்து எமக்குக் கற்றுத்தந்த செபத்தின் அடிப் படையில் இப்பாடல் எழுதப்பட்டுள்ளது.
> ◆ இறைபுகழ், ஆராதனை, வேண்டுதல், மன்னிப்பு வேண்டல், இறைபாதுகாப்பை வேண்டல் ஆகியவை இப்பாடலில் காணப்படுகின்றன.
> ◆ யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உன்னத குரு இயேசுவின் வேண்டல் செபத்தில் மேற்கூறப்பட்ட விடயங்கள் தெளிவாகவும் ஆழமாகவும் காணப்படுகின்றன.

**படி 4.4.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 4.4.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 4.4.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

> ◆ செபங்களில் எல்லாம் மிக முக்கியமான செபம். கர்த்தர் கற்பித்த செபமாகும்.
> ◆ கர்த்தர் கற்பித்த செபத்தை பணிவுடனும் நம்பிக்கையுடனும் செபிக்க வேண்டும்.
> ◆ இச் செபத்தின் வழியாக மூவொரு இறைவனுடன் புதியதொரு உடன்படிக்கை ஏற்படுகின்றது.
> ◆ இறுதி இராவுணவின் போது நிறுவப்பட்ட நற்கருணையில் இறையரசு உதயமாகி இன்னும் நிலைத்து நிற்கின்றது.
> ◆ இச்செபத்தின் 'உமது அரசு வருக' (மாரனாத்தா) என்பது கிறிஸ்துவின் இரண்டா வது வருகையின் போது இறையரசு நெருங்கி வரும் என்பதாகும்.
> ◆ யோவான் நற்செய்தியின் உன்னத குரு இயேசுவின் வேண்டலில் படைப்பு, மீட்பு என்பவற்றின் வெளிப்பாடாக் கர்த்தர் கற்பித்த செபம் உள்ளது.
> ◆ மத்தேயு 6:8-13, லூக்கா 11:2-4 இல் கர்த்தர் கற்பித்த செபம் மிகவும் எளிமையான முறையில் காணப்படுகின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கர்த்தர் கற்பித்த செபத்தின் விசேட பண்புகளைப் பெயரிடுங்கள்.
- கர்த்தர் கற்பித்த செபத்தை பணிவுடனும் நம்பிக்கையுடனும் செபிக்க வேண்டுமென ஏற்றுக்கொள்வர்
- கர்த்தர் கற்பித்த செபத்தில் காணப்படாத, ஆனால் உன்னத குரு இயேசுவின் வேண்டல் செபத்தில் காணப்படும் பண்புகளை எழுதுவர்.
- உன்னத குரு இயேசுவின் வேண்டலுக்கு முதலிடம் அளித்து, தம் வாழ்வின் ஒவ்வொரு முக்கிய சந்தர்ப்பத்தையும் செலவிடுவார்.

## இணைப்பு 4.4.1

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- யோவான் 17 ஆம் அதிகாரத்தில் காணப்படும் உன்னத குரு இயேசுவின் வேண்டலையும், மத்தேயு 6:8-13, லூக்கா 11:2-4இல் காணப்படும் செபத்தையும் ஒப்பிடுவர்.
- உன்னத குரு இயேசுவின் வேண்டல் செபத்திற்கும் கர்த்தர் கற்பித்த செபத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளவும்.
- கர்த்தர் கற்பித்த செபத்தில் காணப்படும் கருத்துக்கள் யோவான் நற்செய்தியில் வளர்ச்சியடைந்துள்ள முறை பற்றி அறிந்து கொள்ளவும்.

**இறையரசை நெருங்கிச் செல்ல செபத்தைப் பயன்படுத்திக் கொள்வர்.**

**பரலோக மந்திரம் பாடலாக**

**அப்பா பிதாவே**

அப்பா பிதாவே அப்பா பிதாவே
அப்பா பிதாவே அப்பா பிதாவே

உம் தூய நாமம் வாழ்கவே
உம் தூய அரசு வருகவே
உம் அன்பு எம்மில் பெருகவே
உம் பண்பு எம்மில் வளரவே

விண்ணக வாசிகள் வாழ்வது போல்
மண்ணக மாந்தரும் வாழ்ந்திடுக.
உம்சித்தம் எம்மில் நிறைவேறுக
உம்திட்டம் எம்மில் பலன்தருக.

அன்றாட உணவைத் தந்தருளும்
ஆவியை எம்மேல் பொழிந்தருளும்
உம் திரு வாக்கை நல்லுணவாக
உண்டு மகிழவே செய்தருளும்

பிறர் குற்றம் நாங்கள் பொறுப்பது போல்
எம் குற்றம் நீரே பொறுத்தருளும்
சோதனை நின்று நீர் காத்தருளும்
சோதிக்கும் சாத்தானை விரட்டிவிடும்.

**பரலோக மந்திரம் பாடலாக**

பரலோகத்தில் இருக்கின்ற எம் பிதாவே
உம் நாமம் / அர்ச்சிக்கப் படுவதாக /
உம் இராச்சியம் வந்திடுக / உம்முடைய
திருச்சித்தம் / பரலோகத்தில்
செய்யப்படுவது போல / பூவுலகம்
தனிலேயும் / செய்யப்படுவதாக / எங்கள்
அனுதின உணவை / எங்களுக்கு
இன்று அளித்தருளும் / எங்களுக்கு
தீமை செய்பவரை / நாங்களும்
பொறுப்பது போல் / எங்கள்
பாவங்களைப் பொறுத்து / சோதனையில்
விழவிடாதேயும் / தீமைகளில் /
இருந்தெங்களை / இரட்சித்தருளும்.
ஆமென்.

**பொதுத் தேர்ச்சி மட்டம் 4.0** : செபவாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதருடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக தினமும் தியானத்தில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 4.5** : நாம் தியானம் செய்வோம்

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- ❖ குழு ஆய்வுக்கான அறிவுரை 5 பிரதிகள்
- ❖ டிமைதாள், மாக்கர் பேனா
- ❖ திருவிவிலியப் பகுதி
- ❖ தரம் 10 பாடநூலிலுள்ள 19ம் பாடம் 92வது பக்கம்
- ❖ இணைப்பு 4.5.1 இல் உள்ள தகவற் கோவை

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.4.1**

- தரம் 10 பாடநூலிலுள்ள 19ம் பாடம் 92வது பக்க பாட அறிவை நினைவுபடுத்திக் கொள்ளவும்.
- கீழ்வரும் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கலந்துரையாடலை நடத்துக.

> ◆ திருச்சபையில் செபவகைகள் நான்கு உள்ளன.
> ◆ வாய்மொழி செபம் இறைவனுடன் செய்யும் சுமுகமான உரையாடலாகும்
> ◆ பழைய ஏற்பாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் உரத்த சத்தமாக, கைதட்டி, ஆடிப்பாடி இறை வனைப் புகழ்ந்து பகிரங்கமாக செபித்தார்கள்.
> ◆ மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துதல் தியான மாகும்.
> ◆ ஆழ் தியானத்திற்கு சமமான ஆராதனை இறை வனுடன் அமைதியான அன்புறவை ஏற்படுத்து கிறது.

**படி 4.5.2** :

- பொருத்தமான முறையில் மாணவர்களை 5 சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 4.5.1இல் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரதிகள், டிமைதாள், மாக்கர்பேனா என்பவற்றை குழுக்களுக்கிடையில் பகிர்க.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துக.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துக.

**படி 4.5.3** :

- குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடு களை முன்வைக்கும்படி செய்க.

- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களில் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

◆ தியானத்திற்கு தகுந்த வழிமுறை அவசியமாகும்.
◆ தியானப் பயிற்சியின் போது தகுதியான வழிகாட்டி அவசியமாகும்.
◆ தியானிப்பதற்கு மனதை ஒரு நிலைப்படுத்துதல் இன்றியமையாதது.
◆ மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனுடன் நெருங்கிய உறவைக்கட்டியெழுப்ப முடியும்.
◆ துரிதமான உலகில் சிறிதளவு நேரமாவது தியானத்தில் ஈடுபடுவதால் உள, ஆன்மீக நலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
◆ நீங்களும் அதற்கான பயிற்சி பெறவேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- செபிக்கும் முறைகள் நான்கு பெயரிடுவர்.
- வாய்மொழியாக, பகிரங்கமாக, அமைதியாக, தனியாகச் செபிக்கும்போது இறைவனுடன் ஆழமான உறவைக் கட்டியெழுப்ப முடியும் என ஏற்றுக்கொள்வர்.
- தகுந்த முறையைப் பயன்படுத்தி தியானம் செய்வர்.
- துரிதமான உலகில் சிறிதளவு நேரமாவது தியானத்தில் ஈடுபடுவதற்காக ஒதுக்குவர்.

**இணைப்பு 4.5.1**

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- அமைதியாக அமருங்கள்
- உயிர்த்த கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னத்தின் அடையாளமாக பாஸ்காத்திரியை ஏற்றவும்.
- தூய ஆவியின் பாடல் பாடுங்கள்
- கண்களை மூடியவாறு உமது ஆழ்ந்த சுவாசத்தில் மட்டும் அவதானத்தைச் செலுத்தவும்.
- இப்போது குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் எனும் திருவிவிலியப் பகுதியை வாசிக்கவும்.
- இந்நிகழ்ச்சியைப் பற்றித் தியானிக்க நேரம் கொடுக்கவும்
- கண்களைத் திறவுங்கள்
- பொருத்தமான செபத்தைச் செபியுங்கள். நன்றிப் பாடலையும் பாடலாம்.
- அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும்.

# பல்வேறு விதமான தியான முறைகள்

## தியான முறை I

செபத்தில் மூன்று நிலைகள். உரத்த சத்தமிட்டுச் செபித்தல், தியான சிந்தனையுடன் செபித்தல், ஆழ் தியான செபம் என்பவைகளே அவை.

உரத்த சத்தமிட்டு செபித்தலானது சொற்களை அழுத்தமான உச்சரித்து, பஜனை முறையில் பாடி இலயிக்கின்ற உதடுகளின் செபமாகும். மனனஞ் செய்த செபங்களும், உடனடி மனவல்லப செபங்களும் இதில் அடங்குவனவாகும்.

தியான சிந்தனை செபம் என்பது ஒரு படத்தை அல்லது உருவத்தை மனதில் நிறுத்தி கண்களை மூடி ஒரு செபத்தை மனதில் மையமாக உச்சரித்து இறைவனைப் பற்றியும், அவரது வியத்தகு செயற்பாடுகளைப் பற்றியும் நினைப்பது ஆகும். இங்கு உதடுகள் செயல் இழந்து உள்ளம் ஆழ்ந்த நிலைக்குச் சென்று இறைவனை உணர்ந்து கொள்கிறது.

ஆழ் • தியான செபம் என்பது இறைப்பிரசன்னத்தை உணர்கின்ற அடைகின்ற இதயத்தின் செபமாகும். இங்கு உதடுகளும் உள்ளமும் அமைதியடைய இதயம் இறைவனை நோக்கி எழுந்து அவரோடு ஒன்றிப்பதாகும். இது வார்த்தைகளற்ற செபமாகும். ஆன்மா இறைவனோடு ஒன்றிக்கின்ற நிலையாகும்.

## தியான முறை II

அமர்வு ஞான வாழ்க்கை, ஆன்ம அமைதியை நரடும் ஒரு முறையாகும். புலன்களை உள் ஈர்த்து, உள்ளொடுக்கி மனத்தை ஒருமைப்படுத்தும் வழியாகும். மனத்தைப் புறமே திரியவிடாமல் இவ்வாறு உள்ளே நோக்கச் செய்து அமர்ந்த நிலை காணுவதற்கு ஏதுவாக உலகத்தொடர்பு எதுவுமின்றி கடுமையாக விலகி, மனித உறவற்று ஒதுங்கி வாழும் முறை இதுவாகும். அவர்கள் தனித்தனியே தம்தம் விண்ணகப் பேற்றை அடைய முயல வேண்டும் என்ற போக்கு இதிலுள்ளது.

உள்ளீர்த்து, உள்ளொடுக்கி, ஒருமைப்படுத்தி வல்ல பெயர் இயேசு, எனும் திருப்பெயரென அமர்வு ஞான வாழ்க்கையைக் கண்டனர். "இயேசுவே இறைவனின் திரு மகனே பாவியேன் எனக்கு இரங்காய்" என்பது அமர்வு ஞானியரின் மனவலிய மன்றாட்டாகும். இதனை அவர்கள் தம் மூச்சோடு இணையுமாறு சொல்லிப் பழகுவர். தம் உடல் பொருள் ஆவி அனைத்திலும் கலந்து விட வேண்டுமென்பது அவர்களது குறிக்கோளாகும். தன் சித்தம் வேண்டாமென்று விடுதல், ஆன்மகுருவின் ஆணைக்கு அடங்குதல், ஆன்ம சோதனை, இயேசுவின் திருப்பெயரை உச்சரித்தல் அமர்வு ஞான வாழ்க்கையரின் நெறி முறைகளாகும்.

## தியான முறை III

இராஜயோகம் என்பது அதிமேலான தியான முறையாகும். மனதை ஒருநிலைப்படுத்தி ஆழமான அன்புடன் மிக உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் புத்தியை இறைவனுடன் ஒரு முகப்படுத்துதலே இத்தியானமாகும். இதனால் மனிதன் தெய்வீகத் தன்மையை எய்துகிறான். தான் தூய்மையடைவதோடு மட்டுமல்லாமல் அனைத்துவிகாரங்களையும் வெற்றி கண்டு ஆழ்ந்த அமைதியையும் தெய்வீக பேரானந்தத்தையும் இத்தியானமுறை தருகிறது.

இப்பயிற்சியால் மனம் இவ்வுலகப் பொருட்கள் அனைத்திலிருந்தும் விலகி இறை வனிடத்தில் மட்டும் ஒரே நிலையில் இருக்கும் உணர்வேற்படுகிறது. இந்த நிலை இனிமை யாகவும், புத்துணர்ச்சியூட்டுவதாகவும் இருக்கும். இப்படியிருக்கையில் இறைவனிடமிருந்து ஒளியும் சக்தியும் தனக்குள் இறங்குவதை உணர்வதோடு தன் மூலம் உலகெங்கிலும் பரவி, இயற்கைத் தத்துவங்களெல்லாம் தூய்மையடைவதை உணர முடியும். இறைவனிட

## பகுதி - III

11.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்
11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்
11.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்
11.3.3 மாதிரி வினாக்கள்

## 11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்

கற்றல் - கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படும். கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னோக்கிய ஊட்டல்(Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்குப் பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி, ப்பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனரா என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின்போது, மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன் வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered) தேர்ச்சி மட்ட (Competency - Based) செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற் படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை, கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகக் கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கபடுகின்றது. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும்.

இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு, கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாட விடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ⌘ எண்ணக்கருப்படம் (Concept Maps)
- ⌘ சுவர்ப்பத்திரிகை (Wall News papers)
- ⌘ புதிர்ப்போட்டி (Quizzes)
- ⌘ வினாவிடைப்புத்தகம் (Question and Answer Books)
- ⌘ மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- ⌘ கண்காட்சி (Exhibitions)
- ⌘ விவாதம் (Debates)
- ⌘ குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- ⌘ கருத்தரங்கு (Seminars)
- ⌘ சமயோசிதப் பேச்சு (Impromptu Speech)
- ⌘ நடிபங்கு (Role plays)
- ⌘ இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- ⌘ வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம் (Field Books / Nature Diaries)
- ⌘ செய்முறை சோதனை (Practical Tests.)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேசக் கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தற் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால், கற்றல்-கற்பித்தல் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியும்.

## 11.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

**பாடசாலைத் தவணை** : முதலாம் தவணை

**உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 1.3

**விடய உள்ளடக்கம்** : மனிதனின் ஆரம்பத்தைக் கற்பதனால் தோற்றுவிக்கப் படும் இறை விசுவாசம்.

**கருவியின் தன்மை** : மனிதனின் ஆரம்பத்தினால் தோற்றுவிக்கப்படும் இறை விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட சுவரொட்டி ஒன்று

**கருவியின் நோக்கம்** :

- ❖ மனிதனின் ஆரம்பத்தைப் பற்றி தேடிப்பார்ப்பர்.
- ❖ மனிதனின் விருத்தியும் பரம்பலும் பிரதேச தேசப் படங்கள்
- ❖ பிரபஞ்சத்தின் தொடக்கத்தைப் பற்றி முன்வைக் கப்பட்டுள்ள கொள்கைகளைத் தேடிப்பார்ப்பர்.
- ❖ படைப்பின் வியத்தகு தன்மையை தமது கண்களி னாலும் காட்சிகளாலும் கண்டு பூரிப்படைவர்.
- ❖ பரிணாம வாதம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள புதிய கருத்துக்களைத் தேடிப் பார்ப்பர்.

### கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

**ஆசிரியருக்கானது**

- ஆசிரியர் செயற்பாட்டு வேலைகளை 1.3 ஆரம் பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துக.
- தனித்தனியே தகவல்களை ஒன்று சேர்ப்பதில் ஆரம்பித்து குழுக்களாக வெவ்வேறாக சுவ ரொட்டிகள் நான்கினைத் தயாரித்து இறுதியான செயற்பாடென்பதை மாணவர்களுக்கு அறிவிக் கவும்.
- முன் ஆயத்தப்படுத்திய குறிப்புக்களை வெளிக் களப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு அதற் கேற்ப தகவல்களை சேகரிப்பதற்கு மாணவர் களுக்கு ஆலோசனை வழங்கவும்
- தகவல்களை சேகரிப்பதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டிய நூல்களையும் பிரசுரங்களை யும் மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- வெளிக்களப் புத்தகத்தை அடிக்கடி மேற்பார்வை செய்து குறிப்புக்களை வைத்திருக்கவும்
- சேகரிக்கப்பட்ட தகவல்களை பரிசீலணை செய்து சுவரொட்டியொன்றைத் தயாரிப்பதில் மாணவர் களை ஈடுபடுத்தவும்.
- இறுதி ஆக்கத்தை ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவிக்கவும்.

**மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

- ஆசிரிய ஆசிரியைகளினால் தரப்படும் தகவல் களைச் சேகரிப்பதற்கான மாதிரிகளை வெளிக் களப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவும்.
- தரப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப தகவல் களைச் சேகரிப்பதில் ஈடுபடவும்
- வெவ்வேறாக பெறப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுக்கொண்டு அத் தகவல்களின் அடிப்படையில் மனிதனின் ஆரம் பத்தினால் தோற்றுவிக்கப்படுகின்ற இறை விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை தயாரிக்கவும்.

**தகவல்கள் பிரசுரம்**

- மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றிய படங்கள்
- மனிதனின் பரம்பல் பற்றிய தகவல்கள்
- பரம்பல் பிரதேசங்கள் பற்றிய தேசப்படங்கள்
- பிரபஞ்சத்தின் தொடக்கம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகள்
- படைப்பின் விந்தையை அனுபவித்துக் காணக்கூடியதாக முன்வைக்கப்பட்டுள்ள சித்திரம் / கவிதை / கதை
- பரிணாம வாதம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய கொள்கைகள்.

**பாடசாலைத் தவணை** : இரண்டாம் தவணை

**உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்** : 2 : 8 - 2 : 9

**விடய உள்ளடக்கம்** : அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் வாழ்வும் பொதுநிலையினரின் தூதுப்பணியும்.

**கருவியின் தன்மை** : இலங்கைச் சமூகத்திலே, அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக் குழுக்களையும், பொது நிலையினரின் தூதுப்பணிகளையும் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்

**கருவியின் நோக்கம்** :

- ❖ இலங்கைச் சமூகத்திலே, அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலைக் குழுக்களை பற்றி தேடிப்பார்ப்பர்.
- ❖ அவர்கள் வாழும் பிரதேசத்திலே பொது நிலை மறைத்தூதுப் பணிகள் பற்றி தேடிப் பார்ப்பர்
- ❖ அவர்களது சொந்தப் பங்குகளில் உள்ள சங்கங்கள், கழகங்கள் வழியாக பிரதேசத்தில் செய்யப்படுகின்ற பணிகளைத் தேடிப் பார்ப்பர்.
- ❖ இந்த சங்கங்கள், கழகங்களில் அவர்கள் மிகவும் விரும்புகின்ற சங்கத்தையும் அதன் கடமைகள் பொறுப்புக்களையும் பற்றி விசேடமாகக் கற்பதில் ஈடுபடுவர்.

**கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கானது**

- ஆசிரியர் செயற்பாட்டு வேலைகளை 2.8,2.9 ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துக.
- தனித்தனியே தகவல்களை ஒன்று சேர்ப்பதில் ஆரம்பித்து குழுக்களாக வெவ்வேறாக சுவரொட்டிகள் நான்கினைத் தயாரித்து இறுதியான செயற்பாடென்பதை மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- முன் ஆயத்தப்படுத்திய குறிப்புக்களை வெளிக்களப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு அதற்கேற்ப தகவல்களை சேகரிப்பதற்கு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்
- தகவல்களை சேகரிப்பதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டிய நூல்களையும் பிரசுரங்களையும் மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- வெளிக்களப் புத்தகத்தை அடிக்கடி மேற்பார்வை செய்து குறிப்புக்களை வைத்திருக்கவும்
- சேகரிக்கப்பட்ட தகவல்களை பரிசீலணை செய்து சுவரொட்டியொன்றைத் தயாரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- இறுதி ஆக்கத்தை ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவிக்கவும்.

**மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

- ஆசிரிய ஆசிரியைகளினால் தரப்படும் தகவல்களைச் சேகரிப்பதற்கான மாதிரிகளை வெளிக்களப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவும்.
- தரப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப தகவல்களைச் சேகரிப்பதில் ஈடுபடவும்
- வெவ்வேறாக பெறப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுக்கொண்டு அத்தகவல்களின் அடிப்படையில் மனிதனின் ஆரம்பத்தினால் தோற்றுவிக்கப் படுகின்ற இறைவிசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை தயாரிக்கவும்.

**தகவல்கள் பிரசுரம்**

- நீர் வாழுகின்ற மாகாணம்
- மாவட்டம்
- உமது பங்கும் ஆலயமும்
- உமது பிரதேச்தில் காணப்படுகிற சங்கங்கள், கழகங்கள்
- அந்த சங்கங்கள் கழங்களின் கடமைகளும் பொறுப்புகளும்
- அவற்றினால் உமது பங்கில் ஆற்றப்படுகின்ற பணிகள்
- அவற்றினால் முழுச் சமூகத்திற்கும் ஆற்றப்படுகின்ற பணிகள்
- உமது பிரதேசத்திலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் குழுக்கள்
- அந்த அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் குழுக்களினால் ஆற்றப்படுகின்ற பணிகள்
- இலங்கைச் சமூகத்திலே அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் குழுக்களும் பொதுநிலையினரின் தூதுப் பணிகளும்
- அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் குழுக்களில் நீங்கள் மிகவும் விரும்புகின்ற குழுக்கள்
- சங்கங்கள், கழகங்களில் நீங்கள் மிகவும் விரும்புகின்ற சங்கம்
- அச்சங்கத்தின் கடமைகளும் பொறுப்புக்களும்.

**பாடசாலைத் தவணை** : **மூன்றாம் தவணை**

**உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்:** 4 : 1, 4 : 2

**விடய உள்ளடக்கம்** : செபிக்க வேண்டிய முக்கிய சந்தரப்பங்கள் தனிச் செபமும் பொதுச்செபமும்

**கருவியின் தன்மை** : இறைவனோடு ஆழமான தொடர்பினை ஏற்படுத் துவதற்கு தனி, பொதுச்செபங்கள் உள்ளடக்கப் பட்ட செபச் செண்டு ஒன்றைத் தயாரிக்கவும்.

**கருவியின் நோக்கம்** :
- ❖ செபிப்பதற்கான சந்தர்ப்பங்களைத் தேடிப்பார்ப்பர்.
- ❖ அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செபிக்க வேண்டிய முறையை எடுத்துக்காட்ட சிறிய செபம் ஒன்றை எழுதுவர்.
- ❖ தனிச்செபம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- ❖ பொதுச்செபம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.

**கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கானது**

- ஆசிரியர் செயற்பாட்டு வேலைகளை 4.1,4.2 ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துக.
- தனித்தனியே தகவல்களை ஒன்று சேர்ப்பதில் ஆரம்பித்து குழுக்களாக வெவ்வேறாக சுவ ரொட்டிகள் நான்கினைத் தயாரித்து இறுதியான செயற்பாடென்பதை மாணவர்களுக்கு அறிவிக்க வும்.
- முன்ஆயத்தப்படுத்திய குறிப்புக்களை வெளிக் களப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு அதற் கேற்ப தகவல்களை சேகரிப்பதற்கு மாணவர் களுக்கு ஆலோசனை வழங்கவும்
- தகவல்களை சேகரிப்பதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டிய நூல்களையும் பிரசுரங்களை யும் மாணவரகளுக்கு அறிவிக்கவும்.
- வெளிக்களப் புத்தகத்தை அடிக்கடி மேற்பார்வை செய்து குறிப்புக்களை வைத்திருக்கவும்
- சேகரிக்கப்பட்ட தகவல்களை பரிசீலணை செய்து செபச் செண்டொன்றைத் தயாரிப்பதில் மாணவர் களை ஈடுபடுத்தவும்.
- இறுதி ஆக்கத்தை ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவிக்கவும்.

**மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

- ஆசிரிய ஆசிரியைகளினால் தரப்படும் தகவல்களைச் சேகரிப்பதற்கான மாதிரிகளை வெளிக்களப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவும்.
- தரப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப தகவல்களைச் சேகரிப்பதில் ஈடுபடவும்
- வெவ்வேறாக பெறப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுக்கொண்டு அத்தகவல்களின் அடிப்படையில் மனிதனின் ஆரம்பத்தினால் தோற்றுவிக்கப்படுகின்ற இறைவிசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை தயாரிக்கவும்.

**குறிப்பு**

**செபிக்க வேண்டிய முக்கிய சந்தர்ப்பங்கள்**

- காலையில் எழுந்தவுடன்
- உணவுக்கு முன் உணவுக்குப்பின்
- மாலை நேரத்தில்
- நித்திரைக்குச் செல்ல முன்
- வீட்டிலும் அயலிலும் யாருக்காவது கஷ்டங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில்
- மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில்
- நோய் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில்
- ஏதாவதொரு விசேட உதவி கிடைத்த சந்தர்ப்பத்தில்
- பயணம் செய்வதற்கு முன்
- திருப்பலியின் போது விசுவாசிகளின் மன்றாட்டு
- விசேட சந்தர்ப்பங்களில் செபித்தல்.

# 11.3.3 மாதிரி வினாத்தாள் தரம் - 11
## கத்தோலிக்க திருமறை

**நேரம் - 1 மணி**

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**(இலக்கம் 1-30 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ளவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து சரி (✓) அடையாளத்தை இடவும்)**

01. இறைவனைத் தேடிச்செல்ல உம்மிடம் இருக்க வேண்டிய குணங்களாவன
    - (i) தூய சிந்தனை, செபம், முன்மாதிரியாக வாழ்தலாகும்
    - (ii) விசுவாசம், செபம் என்பவற்றுக்கேற்ப வாழ்தலாகும்
    - (iii) தூய்மையான உள்ளம், அறிவு, முன்மாதிரியாக வாழ்தலாகும்
    - (iv) தூய சிந்தனை, தூய்மையான உள்ளம், அறிவுள்ளோராயிருத்தலாகும்.

02. இறைவனின் மகிமையைப் படைப்பின் வழியாகக் காணக்கூடிய விதம்
    - (i) இவ்வுலகில் விதைகள் முளைத்தல், மொட்டுகள் மலர்தல், பலன்தருதல் என்பன
    - (ii) இடி முழக்கம், மின்னல், புயல், மழை என்பன
    - (iii) மனிதரின் பிறப்பு, பிள்ளைப்பருவம், வாலிபப்பருவம், வயோதிபப்பருவம் என்பன
    - (iv) முன் கூறப்பட்டுள்ள யாவும்.

03. இவ்வுலகிலே மனிதனுடைய பொறுப்புக்களும், கடமைகளுமானவை.
    - (i) வாழ்க்கைக்குத் தேவையான உற்பத்திகளை மட்டும் தெரிவு செய்தல்
    - (ii) இவ்வுலகின் படைப்பாளி அல்ல உற்பத்தியாளனாய் இருத்தல்
    - (iii) படைப்பாளியாகத் தனது நடிபங்கை நிறைவேற்றினால் உலகம் அழிவுறும் என்பதை விளங்கிக் கொள்ளல்.
    - (iv) நவீன தொழில் நுட்பங்களை மற்றவர்களுக்குத தடையாக இல்லாதவாறு பயன்படுத்தல்.

04. பிரபஞ்சத்தைப் படைத்தமை பற்றிய தற்போதைய உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாவது
    - (i) பரிணாமவாதம் பற்றிய புதிய கருத்துக்களும் புதிய சிந்தனைகளும் இன்னும் முன் வைக்கப்படுகின்றன என்பதாகும்.
    - (ii) படைப்புச் சம்பவத்தைக் கண்ணால் கண்ட விஞ்ஞானிகள் எவரும் இல்லை என்பதாகும்.
    - (iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயங்கள் இல்லை என்பதாகும்.
    - (iv) பரிணாம வாதமும் சில விஞ்ஞானிகளால் கருத்து முரண்பாடுகளுக்கு உட்படுத் தப்பட்டுள்ளதென்பதாகும்.

05. பின்வரும் வாக்கியங்களில் இறைவெளிப்பாட்டை முழுமையாக வெளிக்காட்டிய வாக்கியமாவது.

(i) இயற்கையின் வழியாக மனிதன் இறைவனை அறிந்து கொள்ளலாம் என்பதாகும்.
(ii) கிறிஸ்துவில் இறைவெளிப்பாடு முழுமையடைந்துள்ளது என்பதாகும்.
(iii) இறை வெளிப்பாடு கிரமமாக நிகழ்கின்றதென்பதாகும்.
(iv) எமது வாழ்வின் செயற்பாடுகளின் வழியாக இறைவன் வெளிப்படுத்தப்படுகின்றார் என்பதாகும்.

06. கிறிஸ்து இறைத்தன்மையைத் தியாகம் செய்து மனித அவதாரம் எடுத்தமை

(i) அறுந்த இறை மனித உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகும்.
(ii) இறைவன் மனிதனை அளவில்லாமல் அன்பு செய்தமையாலாகும்.
(iii) இறைவன் இவ்வுலகுக்கு ஒரு மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தமையாலாகும்.
(iv) இறைவாக்குகள் யாவும் நிறைவேற்றப்பட்டன என்பதாகும்.

07. மனுவுரு எடுத்தல் வழியாக இறைத்திட்டம் செயற்பட்ட விதம் வெளிப்படுத்தப்படுவது.

(i) மனிதன் உயர்ந்த நிலைக்கு உட்படுத்தப்படுதல்
(ii) இறைவன் தனது தார்மீகத்துக்கு எம்மையும் பங்காளிகளாக்குதல்
(iii) மனுவுரு எடுத்தமையால் எம்மை மீட்பதற்கான பொறுப்பை தாமே ஏற்றுக் கொள்ளல்
(iv) இறை அன்பும் இறைப்பராமரிப்பும் முழுமையடைதல்

08. பாஸ்கா மறைபொருள் என்றால்

(i) கிறிஸ்துவின் சிலுவையின் பயணமாகும்.
(ii) கிறிஸ்துவின் இறுதி இரவுணவாகும்.
(iii) கிறிஸ்து பூங்காவனத்திலே செபித்தமையாகும்.
(iv) கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பனவாகும்.

09. மரணம் எமக்கு ஒரு சாபமல்ல, அது ஆசீர்வாதம் என எடுத்துக்காட்டுவது.

(i) கிறிஸ்து இறைத்தந்தைக்குக் கீழ்ப்படிந்து சுயவிருப்பத்தோடு மரணத்தைத் தழுவியதனாலாகும்.
(ii) இவ்வுலக வாழ்வின் முடிவு மரணம் என்பதலாகும்.
(iii) வாழ்வின் இறுதியில் நாம் இவ்வுலகின் மரணத்துக்குள்ளாகிறோம் என்பதாகும்.
(iv) நாம் வெற்றியடைவதற்கு உள்ள இறுதியான பகைவன் மரணம் என்பதாகும்.

10. கிறிஸ்துவின் அரசில் நாம் பங்காளிகளாவது

(i) நற்கருணையைப் பெறுவதனாலாகும்.
(ii) திருமணத்தினாலாகும்.
(iii) ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதனாலாகும்.
(iv) திருமுழுக்கைப் பெற்றுக்கொள்வதனாலாகும்.

11. கிறிஸ்துவின் இறையரசின் விழுமியங்களாவன

(i) விசுவாசம், பொறுமை, எதிர்பார்ப்பு என்பன
(ii) விசுவாசம், உறுதியான எதிர்ப்பார்ப்பு, நிபந்தனையற்ற இறையன்பு என்பன
(iii) தாழ்மை, நம்பிக்கை, எதிர்ப்பார்ப்பு என்பன
(iv) நிபந்தனையற்ற இறையன்பு, பொறுமை, இறைபக்தி என்பன.

12. கிறிஸ்தவ விசுவாசத்தை இலங்கையில் நிலைநாட்டுவதற்காக முன்னோடிகளாயிருந்த துறவற சபைகள் ஐந்து

(i) பிரான்சிஸ்கன், ஆசீர்வாதப்பர், இயேசு, அமலமரி, மாறிஸ்
(ii) டொமினிக்கன், இயேசு, அகுஸ்தினார், செலேசியன், டிலாசால்
(iii) ஒரித்தேரியன், செலேசியன், மாறிஸ், டிலாசால், ஆசீர்வாதப்பர்
(iv) பிரான்சிஸ்கன், டொமினிக்கன், அகுஸ்தினார், இயேசு, ஒரித்தேரியன்

13. தூய ஆவியின் வருகையின் பின் நிறுவப்பட்ட புதிய கிறிஸ்தவ சபையின் பண்புகளாவன

(i) படிப்பித்தல், பங்குபற்றல், பகிர்தல், புகழ்ச்சி என்பன
(ii) படிப்பித்தல், பங்குபற்றல், அப்பம் பிட்டுதல், செபித்தல் என்பன
(iii) பகிர்தல், அப்பம் பிட்குதல், படிப்பித்தல், செபித்தல் என்பன
(iv) அப்பம் பிட்குதல், வீடுவீடாகச் செல்லல், புகழ்ச்சி, பங்குபற்றல் என்பன

14. தூய ஆவியினால் நிறைவு பெற்று முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனில் இருக்க வேண்டிய பண்புகளாவன

(i) தூய ஆவியினால் ஊட்டம் பெற்று, வார்த்தையாலும் செயலாலும் விசுவாசத்தை பாதுகாத்தல்
(ii) திருமுழுக்கின் வழியாகப் பெற்ற இறையருளை மேலும் வளர்ச்சியடையச் செய்து ஆழமான நிலைக்கு கொண்டு செல்லல்.
(iii) கிறிஸ்துவோடு நெருங்கிய உறவை ஏற்படுத்தல்
(iv) இவையாவும் பண்புகளாகும்.

15. கிறிஸ்துவினுடைய மரணத்தையும், உயிர்ப்பையும் நினைவுகூர்கின்ற அன்பின் அருளடையாளமாகவும், அடையாளமாகவும் உள்ள அருளடையாளமாக விளங்குவது.

(i) உறுதிப்பூசுதல் (ii) குருத்துவம்
(iii) நற்கருணை (iv) திருமுழுக்கு

16. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு மிக முக்கியமாக இருக்க வேண்டிய காரணிகள்

(i) புற உளமாற்றத்தைவிட அக உள மாற்றமே முக்கியமாகும்.
(ii) பல்வேறு பக்திமுயற்சிகளில் ஈடுபடுவதால் தண்டனைகளை நிறைவேற்றுதலாகும்.
(iii) ஒன்றையும் விடாமல் எல்லாப்பாவங்களையும் சொல்வதாகும்.
(iv) தனது உள்ளத்தை அடிக்கடி சோதித்தலாகும்.

17. கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய நோக்கம்

(i) பிள்ளைகளை அன்போடு பராமரித்து திருமறையைக் கற்பித்தல்
(ii) ஒரு குடும்பமென்றவகையில் ஒன்றாகச் செபித்தல்
(iii) அன்னியொன்னிய அன்பும் பிள்ளைச் செல்வங்களினால் சமூகத்தை ஊட்டம் பெறச் செய்தல்
(iv) ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றல், குடும்ப செபமாலை சொல்லல்.

18. கிறிஸ்தவ குருக்களின் கடமைகளும் பொறுப்புகளும்

(i) இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராயிருத்தல்
(ii) ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய வார நாட்களிலும் திருப்பலி நடாத்துதல்
(iii) அருளடையாளங்களை வழங்குதல் நோயாளரைச் சந்தித்தல்.
(iv) தேவாலயத்தில் வருடாந்த திருவிழாவை ஒழுங்கு செய்தல்

19. துறவற வாழ்வில் நுழைபவர்கள் காக்க வேண்டிய வார்த்தைப்பாடுகள்

(i) தாழ்மை, செபம், தூய்மை என்பன
(ii) செபம், கீழ்ப்படிவு, தாழ்மை என்பன
(iii) கீழ்ப்படிவு, ஏழ்மை, கற்பு என்பன
(iv) கற்பு, தாழ்மை, செப வாழ்வு என்பன

20. அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் வாழ்வில் இறைபணி நிறைவேற்றப்படுவது.

(i) கீழ்ப்படிவு, இறைவாக்கு, குருத்துவப்பணி என்பனவற்றினாலாகும்.
(ii) அரச, ஆயன், ஆட்சி செலுத்துதல் வழியிலாகும்.
(iii) அரச, குருத்துவ, இறைவாக்குப்பணி வழியிலாகும்.
(iv) ஆயன், ஆட்சி, குருத்துவப்பணி வழியிலாகும்.

21. இறைவனை ஆராதித்தல் என்பது

(i) பங்கு ஆலயத் திருவிழாவை உற்சாகமாகக் கொண்டாடுதலாகும்
(ii) படைக்கப்பட்ட பொருட்களை வழிபடுதலாகும்.
(iii) உருவங்களை வழிபடுதலும் கௌரவித்தலுமாகும்.
(iv) யாவற்றையும் படைத்தவரும், அதிபதியுமானவரை ஏற்றுக்கொள்வதாகும்.

22. திருக்குடும்பத்தின் முன்மாதிரிகைக்கேற்ப எமது குடும்பங்களை அமைத்துக் கொள்வதற்குத் தேவையான கட்டளை

(i) ஐந்தாவது கட்டளை (ii) ஆறாவது கட்டளை
(iii) நான்காவது கட்டளை (iv) ஏழாவது கட்டளை

23. ஆறாம், ஒன்பதாம் கட்டளைகள் நாம் விலக்க வேண்டுமென கூறுபவை

(i) உள்ளம், உடல், வார்த்தைகளுக்கு எதிராக நாம் செய்யும் செயற்பாடுகள்
(ii) ஆபாச நூல்கள், நீலத் திரைப்படங்கள்
(iii) ஆபாச வார்த்தைகளைப் பேசுவது, பொய் சொல்லல்
(iv) தமது வயதுக்கு ஒவ்வாத தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

24. நாம் உண்மையுள்ளவர்களாக வாழ்வதனால் உண்மைக்குச் சான்று பகர....

(i) தமது பதவி இரகசியங்களை வெளியிடாதிருத்தல் வேண்டும்.
(ii) பொய்யான தகவல்களை வெளியிடாதிருத்தல் வேண்டும்
(iii) எழுமாற்றாகக் கதைப்பதை தவிர்த்தல் வேண்டும்.
(iv) உண்மைக்கு மாறான செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

25. வாழ்வைப் புத்தாக்கம் பெறச்செய்ய ''மலைப்பொழிவினால்'' நாம் பெறக்கூடிய முன்மாதிரிகைகள்

(i) மலைப்பொலிவுக்கு ஏற்ப வாழ்வதாகும்.
(ii) நீதிக்குச் சான்று பகர்தலாகும்
(iii) கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளோடு தொடர்புபடுத்தலாகும்.
(iv) அமைதிக்காக காலத்தை முழுமையாகப் பயன்படுத்தலாகும்.

26. செபத்தை வாழ்க்கையோடு இணைத்துக் கொள்வதனால்,

(i) இறைவனின் விருப்பத்திற்கேற்ப இலகுவாக செயல்களைச் செய்வதற்குத் தைரியமும் ஊட்டமும் கிடைக்கின்றது.
(ii) சோதனைகளிலிருந்து வெற்றி கிடைக்கின்றது.
(iii) இறையன்பை அனுபவிக்கக் கூடியதாயுள்ளது.
(iv) இறை விருப்பத்தை நிறைவேற்ற கூடியதாயுள்ளது

27. இடைவிடாது செபிப்பதனால் ஆன்மா ஊட்டம் பெற வேண்டுமானால்

(i) எமது அன்றாட வேலைகள் யாவற்றையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.
(ii) எமது முழு வாழ்வையும் செபவாழ்வாக்கிக் கொள்ள வேண்டும்.
(iii) இரவு நித்திரைக்குச் செல்லுமுன் செபம் 'சொல்ல வேண்டும்.
(iv) முழுக் குடும்பமும் தினமும் ஒன்றுகூடி செபமாலை சொல்ல வேண்டும்.

28. செபிப்பதற்காக கிறிஸ்துவால் கற்பிக்கப்பட்ட பரலோக மந்திரத்தின் முக்கிய பண்பு களாவன.

(i) ஆராதனை, இறை பராமரிப்பை வேண்டுதல், பக்தியோடு வேண்டுவது, புகழ்ச்சி என்பன
(ii) மன்னிப்பு வேண்டல், தேவைகளைக் கேட்டல், பராமரிப்பை வேண்டுதல், புகழ்ச்சி என்பன
(iii) இறைபக்தியும், புகழ்ச்சியும், ஆராதனையும், மன்னிப்பு வேண்டலும், தேவை களைக் கேட்டல் என்பன
(iv) புகழ்ச்சி கூறல், ஆராதனை, தேவைகளைக் கேட்டல், மன்னிப்பு வேண்டல், இறை பராமரிப்பை வேண்டுதல் என்பன.

29. மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக தியானத்தில் ஈடுபடுவதால்

(i) இறைவனோடு நெருங்கிய உறவைக்கட்டியெழுப்ப முடியும்.
(ii) உள, ஆன்மீக ரீதியான சுகத்தைப் பெற முடியும்.
(iii) உள மகிழ்ச்சியும், உள சுகத்தையும் பெற முடியும்.
(iv) உள அமைதியைப் பெற முடியும்.

30. தற்போதைய திருச்சபையில் காணக்கூடிய தலைவராக உள்ளவர்

(i) திருத்தந்தை முதலாவது அருளப்பர் சின்னப்பர்.
(ii) திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்.
(iii) திருத்தந்தை பதினாறாவது ஆசீர்வாதரப்பர்.
(iv) திருத்தந்தை பதினைந்தாம் ஆசீர்வாதரப்பர்.

## மாதிரி விடைகள்

| | | |
|---|---|---|
| 01 - (ii) | 11 - (ii) | 21 - (iv) |
| 02 - (iv) | 12 - (iv) | 22 - (iii) |
| 03 - (ii) | 13 - (ii) | 23 - (i) |
| 04 - (iii) | 14 - (iv) | 24 - (iv) |
| 05 - (ii) | 15 - (iii) | 25 - (iii) |
| 06 - (i) | 16 - (i) | 26 - (i) |
| 07 - (iv) | 17 - (iii) | 27 - (ii) |
| 08 - (iv) | 18 - (i) | 28 - (iv) |
| 09 - (i) | 19 - (iii) | 29 - (i) |
| 10 - (iv) | 20 - (iii) | 30 - (iii) |

# பகுதி II

## கட்டமைப்பு வினாக்கள்

01. 1) உலகிலுள்ள நவீன கண்டு பிடிப்புகள் மூன்றினைப் பெயரிடுக.
    2) பாடசாலை மாணவரென்ற ரீதியில் தற்கால இலத்திரனியல் தொடர்புச்சாதனங்கள் உமது வாழ்க்கையைப் பாதிக்கும் விதத்தினைச் சுருக்கமாக விளக்குக.
    3) நவீன தொழினுட்ப முன்னேற்றத்தினால் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் தீமைகளின் பாதிப்புகளை எழுதுக.

02. 1) 7ம் 10ம் கட்டளைகளுக்கு எதிரான பாவங்கள் எவை? ஆறு எழுதுக.
    2) பொதுச் சொத்துக்களை கையாளும்போது நீர் பின்பற்றவேண்டிய செயற்பாடுகள் எவை?
    3) 7ம் 10ம் கட்டளைகளை மீறிய நண்பனொருவனுக்கு அதனைச் சரியாக கடைப்பிடிப்பதற்கு நீர் கூறும் அறிவுரைகளைச் சுருக்கமாக எழுதுக.

03. 1) கர்த்தர் கற்பித்த செபத்தின் பண்புகளை 5 எழுதுக.
    2) கர்த்தர். கற்பித்த செபத்தில் இல்லாத இயேசுவின் வேண்டலில் உள்ள பண்புகளை எழுதுக.
    3) கர்த்தர் கற்பித்த செபத்தின் பண்புகளைப் பயன்படுத்தி எமக்குக் கொடையாக வழங்கப்பட்டுள்ள இந்த விந்தையான சுற்றாடலுக்கு நன்றிகூறி செபம் ஒன்று ஆக்குக.

04. 1) புகுமுக அருளடையாளங்கள் மூன்றையும் பெயரிடுக.
    2) அருளடையாளங்களினால் நாம் பெற்றுக் கொள்ளும் அருள்கள் மூன்றை எழுதுக.
    3) திருமணம் என்னும் அருளடையாளத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஒப்படைக் கப்படுகின்ற பொறுப்புகள் ஆறு எழுதுக.

05. 1) இலங்கைச் சமூகத்திலே தற்போதுள்ள துறவற சபைகள் ஆறு எழுதுக.
    2) துறவற வாழ்வில் நுழையும்போது கொடுக்கப்பட வேண்டிய வார்த்தைப்பாடுகள் மூன்றையும் பெயரிடுக.
    3) உமது மறைமாவட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள துறவற சபை களைப் பெயரிட்டு அவர்கள் ஆற்றும் பணிகள் ஆறு எழுதுக.

කතෝලික ධර්මය (දෙ) 11
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/11/TIM/2000